T. 2379

வெளியீடு எண் 40

# சித்தாந்த சைவ வினாவிடை

தருமபுர ஆதீனம்.



தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**

உ

குருபாதம்

*தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம்*

**ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்**

**எட்டாவது ஆண்டு**

# குருபூஜை விழா அணிமலர்

**22—5—53.**

வெளியீடு எண். 40.

உ
குருபாதம்

# சித்தாந்த சைவ வினாவிடை

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களின்
திருவுள்ளப்பாங்கின்படி
வெளியிடப்பெற்றது.

ஆசிரியர் :
திரிசிரபுரம்,
திரு. கு. திருஞானசம்பந்தசாமி பிள்ளை.

தருமபுர ஆதீனம்
1953.

மூன்ரும் பதிப்பு.
பிரதிகள் 1000.

ஞானசம்பந்தம் பிரஸ்.
தருமபுரம்.

குருபாதம்

# முகவுரை

சித்தாந்த சைவ வினாவிடை என்னும் இச்சீரிய நூலில் சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்களும், சைவ சமய உண்மைகளும், சைவ சமயாசாரியர், சந்தாநாசாரியர் முதலியோர்களின் வரலாறுகளும், பல புராண வரலாறுகளும், மற்றும் பல சம்பிரதாயங்களும் எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் வினாவிடையாக எழுதப்பெற்றுள்ளன.

இதை எழுதியவர், திரிசிரபுரம் தமிழ் முனிஷியார் குமாரசாமிப்பிள்ளை புதல்வரும், சைவ சித்தாந்த சபை ஸ்தாபகருள் முக்கியஸ்தரும், சைவ சித்தாந்த மகா சமாஜ அங்கத்தினருமான காலஞ்சென்ற திரு. கு. திருஞான சம்பந்தசாமி பிள்ளை அவர்கள் ஆவர். இதன் முதல் பதிப்பு சுமார் 50 ஆண்டுகட்கு முன் வெளிவந்தது. மேற்படியாரின் தமயனார் புதல்வர் தமிழ் ஆசிரியர் திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள் 1941ல் இந்நூலை அன்புடன் உதவி புதியபதிப்பு வெளிவருமாறு கேட்டுக் கொண்டார்கள்.

அவ்வண்ணமே தருமபுர ஆதீனத்தில் 24-வது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து ஒல்லும்வகை

யெல்லாம் அறவினைகளை ஓவாது செய்தருளிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீன வெளியீடாக அச்சிடுவித்து அப்போது ஆதீனத்தில் நடைபெற்ற மெய்கண்டான் சித்தாந்த மாநாட்டில் அனைவர்க்கும் வழங்கினார்கள்.

அவர்கள் பிற்றோன்றலாக ஞானபீடத்தில் 25-வது பட்டமாக எழுந்தருளி, காலநிலைக்கு ஏற்பச் சமயபரிபாலனம் செய்தருளுகின்ற **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** இவ்வெளியீட்டின் இன்றியமையாமையைத் திருவுளங்கொண்டு மூன்றாம் பதிப்பாக மறுமுறையும் வெளிவரத் திருவருள்பாலித்தார்கள். அவ்வண்ணமே இதனை முன்னர் வெளியிட்டருளிய 24-வது மகாசந்நிதானமவர்களின் எட்டாவது ஆண்டு **குருபூஜை விழா மலராக** இப்பொழுது வெளிவருகின்றது.

அன்பர்கள் பெற்றுப் பயனுறுவார்களாக.

| | |
|---|---|
| தருமபுரம், 21—5—53. | **சோமசுந்தரத் தம்பிரான்,** திருவாரூர் இராஜன் கட்டளை விசாரணை & ஆதீனப் பிரசாரகோஷ்டித் தலைவர். |

# உள்ளுறை

பக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | உலகவியல் | ... | 1 |
| 2. | சித்தியல் | ... | 7 |
| 3. | வேதசிவாகமவியல் | ... | 15 |
| 4. | பதியியல் | ... | 27 |
| 5. | சக்தியியல் | ... | 35 |
| 6. | சிவகுமாரவியல் | ... | 50 |
| 7. | பாசவியல் | ... | 64 |
| 8. | மூர்த்தியியல் | ... | 90 |
| 9. | ஸ்தலவியல் | ... | 116 |
| 10. | தீர்த்தவியல் | ... | 131 |
| 11. | ஆசாரியவியல் | ... | 138 |
| 12. | முத்தியியல் | ... | 167 |

உ
குருபாதம்

# சித்தாந்த சைவ வினவிடை

## 1. உலகவியல்

**1.** உலகம் எவ்வியல்பினது?

தோன்றிநின்று அழியும் காரியமாயுள்ளது.

**2.** காரியமென்ருல் என்னை?

காரணத்தினின்றும் ஆக்கப்படுபொருள்.

**3.** காரணமென்ருல் என்னை?

காரியத்துக்கு இன்றியமையாததும், அதற்கு முற்காலத்திருப்பதும், அதனினின்றும் வேருகாததுமான பொருளும், கருவியும், ஆக்குவோனுமாகிய மூன்றும் காரணம் எனப்படும். இவை முறையே முதற்காரணம், துணைக் காரணம், நிமித்தகாரணம் எனப் பெயர்பெறும்.

**4.** மேற்கூறிய காரணங்களை உதாரண வாயிலாய் விளக்குக.

குடமாகிய காரியத்திற்கு மண் முதற்காரணம், தண்டசக்கரம் துணைக்காரணம், குயவன் நிமித்தகாரணம்.

**5.** உலகம் தோன்றி நின்று அழிவது என்பதற்குப் பிரமாணம் என்னை?

உலகில் சிலபாகங்கள் ஓரொருகால் பூகம்பம், பிரவாகம், புயற்காற்று முதலியவற்ருல் அழியக்காண்டலின் ஏனைப்பாகங்களும் பிறிதொருகால் அழியும். சமுத்திரங்களிலே அநேக தீவுகள் ஓரோர் காலங்களிலே உண்டாவதைக் காண்டலின் ஏனைப் பாகங்களும் பிறிதொருகால் உண்டாயிருத்தல்வேண்டும். தோற்றமுள்ள பொருள் யாவும் அழியுமாதலாலும், அழிந்தபொருள் மறித்தும் தோன்றுமாதலாலும் உலகம் தோன்றி நின்று அழியும் காரியமாயுள்ளது என்று உணர்க.

6. இங்ஙனம் தோன்றிநின்று அழிதல் உலகிற்கு இயல்பு என்ருல் என்னை?

இயற்கைப்பொருளாயின் விகாரமெய்தி செயற்கைப் படுதல் கூடாது. அங்ஙனமின்றித் தோன்றிநின்று அழிதல் கண்டாமாதலானும், இன்னும் நிலக்கரி காலாந்தரத்து வைரமாகவும், என்பு கல்லாகவும் மாறுதலைக் கண்டாமாதலானும் உலகம் செயற்கைப்பொருளாமன்றி இயற்கைப் பொருளன்று என்று உணர்க.

7. உலகம் எத்தனைவகைப்படும்?

சித்து அசித்து என இருவகைப்படும்.

8. அவை என்னை?

சித்து என்பது அறிவுடையபொருள். அசித்து என்பது அறிவில்லாதபொருள். அதாவது ஜடம்.

9. மேலே தோன்றிநின்று அழியும் என்றது சித்துலகத்தையா? ஜடவுலகத்தையா?

ஜடவுலகத்தையே.

**10.** பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமாகிய பஞ்ச பூதங்களுக்கு வேருகச் சித்து என்ருெரு பொருள் இருப்பது எங்ஙனம்?

ஆன்மாக்களாகிய எம்மிடத்தில் அறிவு நிகழ்வதே சாக்ஷியாம்.

**11.** பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டாகும் அறிவு நிகழ்ச்சியே சித்து என்று கொண்டால் என்னே?

அது கூடாது. ஏனெனில் பஞ்சபூதங்களின் சேர்க்கையாலுண்டாவது அறிவாயின் அச்சேர்க்கையாகிய அறிவு எக்காலத்தும் உடலைவிட்டு நீங்கலாகாது. அங்ஙனமின்றி உடல் கிடக்க அறிவு நீங்குகையால் அறிவு பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டானதல்ல.

**12.** ஆயின் காந்த இரும்பை ஈர்க்கும் விதம் யாது? ஈர்க்குமறிவு ஜடமாகிய காந்தத்துக்கு உண்டாயவாறு, பஞ்சபூத சேர்க்கையே ஆன்ம அறிவு என்று கொண்டால் என்ன?

இரும்பைக் காந்தம் ஈர்ப்பது தனது அறிவாலன்று, தொழிலால். எதிர்ப்பட்ட இரும்பையேயன்றி எதிர்ப்படாத இரும்பைத் தேடிப்போய் இழுக்கவல்லதோ அது? இழுக்கவல்லதாகிய அது தான்பற்றிய இரும்பை மீண்டும் விடவல்லதோ? நாம் பற்றினேம் எனவாவது நமக்கு விடச் சக்தியில்லை எனவாவது அது அறியுமோ? இதனை ஆன்மாவுக்கு உவமையாகத் தேடினது அசம்பாவிதமேயாம். இதனல் தேகத்தின் குணமே அறிவு என்னும் வாதம் நசித்தது.

13. வெற்றிலை, பாக்கு, சுண்ணம் இம்மூன்றும் சேர்ந்த காலத்து, சிவப்புநிறம் உண்டாமாறு அறிவு நிகழ்தல் ஆகாதோ?

சிவப்புநிறம் அச்சேர்க்கையைவிட்டு வேருய் நில்லாது. அன்றி, வெற்றிலை பாக்கு சுண்ணம் என்று கூறிய சேர்க்கையின்கண் சிவப்பு என்னும் ஒரு தன்மையே கண்டாம். இத்தேகத்தில் அப்படி ஒரே தன்மை காணப் படாமல் புலன், பொறி, குணம் முதலிய அநேகதன்மைகள் உண்டாவதைக் கண்டாம். ஆதலால் அறிவு என்பது பூதங்களினின்றும் வேறுபட்ட பொருளாம்.

14. இனி பூதங்களிற் பிருதிவியின்கண் நிகழ்வன யாவை?

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐந்துமாம்.

15. அப்புவின்கண் நிகழ்வன யாவை?

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம் என்னும் நான்குமாம்.

16. தேயுவின்கண் நிகழ்வன யாவை?

சப்தம், ஸ்பரிசம், ரூபம் என்னும் மூன்றுமாம்.

17. வாயுவின்கண் நிகழ்வன யாவை?

சப்தம், ஸ்பரிசம் என்னும் இரண்டுமாம்.

18. ஆகாயத்தின்கண் நிகழ்வது யாது?

சப்தம் என்னும் ஒன்றேயாம்.

19. உடலாக இவை சேர்ந்தகாலத்து இவற்றினிடத்து அறிவு தோன்றும் என்ருல் என்னை?

பூதங்கள் சேர்ந்த தேகம் சவமாய்க் கிடந்தகாலத்தும், உறங்கும் காலத்தும் அறிவு கண்டதில்லை; ஆதலால் பூதங்களின் சேர்க்கை அறிவன்று.

20. சவமாய்க் கிடந்தது வாயுவானது கூடிடாமையினால் அன்றோ?

அந்த வாயுவானது உறக்கத்திலே பிரியாது நிற்கவும் அறியாமை நிற்றலால் வாயு அறிவன்று. அன்றிப் பஞ்ச பூதங்களின் சேர்க்கையினால் ஆன்மகுணமாகிய அறிவை எந்த மகாபுருஷனும் இதுவரையிலும் உண்டுபண்ணிக் காட்டியதுமின்று. ஆதலால் ஜடகாரியமன்றாய், ஜடத்தை இயக்குவதாய்ப் புலன்களின்வழியே போகத்தை அனுபவிப்பதாய்த் தனிப்பொருளொன்று இத்தேகத்தின்கண் உளது. அதுவே ஆன்மா, புற்கலன், எஜமானன், அணு, உயிர், ஜீவன், பசு என்பனவாதி பெயர்களைப் பெறும்.

21. ஜடத்தினின்றும் சித்து ஏன் பிறவாது?

ஜடம் அறிவில்லாதது என்று மேலே கூறினோம். ஜடத்தின்காரியம் ஜடமேயல்லது சித்தாகாது. ஏனெனின் காரணம் எவ்வாறோ அவ்வாறே காரியமாம் என்பது தர்க்கநூற்றுணிபு.

22, சுண்ணமும் மஞ்சளும் சேர்ந்து சிவப்பு வர்ணம் உண்டாவதுபோல ஜடத்தினின்றும் சித்து ஏன் தோன்றாது?

சுண்ணமும் மஞ்சளும் ஜடமாயினவாறு அவை புணர்ந்தபோது உண்டான செந்நிறமும் ஜடமேயாம். அது சித்தன்று. அன்றி நாம் எடுத்துக்கொண்ட உவமைகளில் சுண்ணமும் மஞ்சளும் பொருள்கள். சுண்ணத்

திற்கு நிறம் வெண்மை. மஞ்சளுக்கு நிறம் பசுமை. வெண்மை பசுமை பொருள்களல்ல; குணங்களாம். இந்தக் குணங்களைப்போல இவற்றையுடைய பொருள்களுக்குத் தொழிலும் உளது. அது அசைத்தால் அசைவதேயாம். இத்தனையுஞ்சேர்ந்து ஜடமென்றே பிரசித்திபெறும். இவை போல்வதொரு குணமாக ஆன்மாவை நிரூபித்தல்முடியாது. இன்னும் மஞ்சளும் சுண்ணமும் ஒன்றுகூடிச் சிவப்பு உண்டாகும்போது அந்த முதற்பொருள்கள் சிதைந்து அல்லது தேய்ந்து சொரூபமாறிப்போகின்றன. புதிதாய்த் தோன்றிய செந்நிறமோ வெளியே நன்கு தோன்றுகிறது. இப்படிப் பூதங்கள் சிதையவாவது தேயவாவது காணப் படாமலும், அதிற்றோன்றியதாகக் கூறிய ஆன்மகுணம் வெளித்தோன்றாமலும் இருப்பது காண்க.

23. பொறிகள் புலனை அறிவதால் அவை ஏன் சித்து ஆகா?

பொறிகள் ஒன்றறிந்தது ஒன்றறியாமையின் இவ் ஐந்தையும் ஒருங்கே அறிவதே யாம் கூறிய சித்தாம். அன்றி பொறிகள் ஒடுங்கின சொப்பனகாலத்தில் நிகழ் வதை அறியும் அறிவு உளதாதலின் அதுவே அச்சித்தாம்.

24. இவ்வாறு அறிவன மனம் முதலியவன்றோ?

அன்று. மனம் நினைக்கும்; புத்தி விசாரிக்கும்; சித்தம் நிச்சயிக்கும்; அகங்காரம் துணியும். ஆனால் இவை தாம் செய்த செயல் இதுவென அறியா. இவற்றினைக்கூடி யான் நினைந்தேன் விசாரித்தேன் நிச்சயித்தேன் துணிந்தேன் என்று உணர்ந்த அறிவு வேறாயிருத்தலால் இக்கரணங்கள் யாம் கூறிய சித்தன்றாம். அதுவதுவாய்நின்று அவற்றின் செயல்களை வேறுவேறாக அறிவதே யாம் கூறிய சித்தாம்.

25. இதுகாறும் கூறிய நியாயங்களைத் தவிர்த்து, தேகத்தினின்றும் வேருய்ச் சித்து என்ஞெரு பொருள் இருப்பதை உணர வேறு சில நியாயங்கள் கூறுக.

அநேகமுளவாயினும் ஈண்டுச் சில கூறுவாம். சொப்பனத்தில் சாக்கிராவத்தைப்போலும் சிலர் சாக்கிரத்திற் சாக்கிரத்திலும் அறிவதற்கரிய விஷயங்களைக் கண்டுபிடிப்பதிஞலும், உலகிற் காணுவதெல்லாம் போக்கியப்பொருளாகவே போகியொருவனுளனுதல் சித்தமாயிடுதலினுலும், மனிதர்கட்கு விருப்பு வெறுப்பு இருத்தலினுலும் தேகத்தினின்றும் வேருய்ச் சித்து பிரகாசிப்பது தெளிந்திடுக. சுகம் முதலியவுடையது எதுவோ அதுவே ஆன்மா என அறிக.

## 2. சித்தியல்

26. மேலே சித்தென்று கூறப்பட்டவை எவ்வியல்பின?

எம்மிடத்து நிகழும் சித்து அளவிடற்கரியவாய், நித்தியமாய், மலவிருளிலழுந்தியிருப்பவாய், வியாபகமாய், சார்ந்ததன்வண்ணமாய்ச், சுதந்திரமின்மையும், அதிருப்தியும், அறிவித்தாலறியும் அறிவும், சிற்றறிவும், சிறுதொழிலும் உடையனவாயிருப்பவை.

27. அளவிடற்கரியது என்றதனுலே ஆன்மாக்கள் பல என்பது அமையும். அனேக வர்ணமான மணிகள் கோத்த வெண்மையான சரட்டில், அவ்வம்மணிகளின் நிறம் வேறுபட்டுத் தோன்றினும் சரடு ஒன்றேயாயிடுதல்போல ஆன்மா ஒன்ருயிருந்து, சரீரங்கள் பலவாயிடுதல் ஏன் கூடாது?

காணப்பட்ட சரீரங்கள் பலவற்றுள்ளும் இருக்கும் ஆன்மாக்கள் எல்லாம் ஒன்ருயிருப்பின் ஒருவன் எண்ணின

எண்ணமே ஏனையோரும் எண்ணவேண்டும். மணிகள் கோத்தசரட்டின் ஓர்பாகத்தைப் பிடித்து ஆட்டுங்காலத்து எல்லாமணிகளும் அசைதல்போல ஓர் உடலில் ஓர் ஆன்மா நோயினால் துடிக்குமளவில் ஏனைய தேகங்களிலுள்ள ஆன்மாக்களும் துடிக்கவேண்டும். அவ்வாறின்றி ஒவ்வொரு ஜீவனுக்கும் நடையுடைபாவனை வெவ்வேறாய்ச் செயல்கள் வெவ்வேறாய் எண்ணங்கள் வெவ்வேறாய் அறிவும் வெவ்வேறாய் இருத்தலினாலே சரீரந்தோறும் ஆன்மா வெவ்வேறாயிருப்பது துணியப்படும். சரீரங்கள் அளவிடற்கரியனவாகவே ஆன்மாக்களும் அளவிடற்கரியனவாம். சுகதுக்க வேறுபாட்டால் சரீரந்தோறும் ஆன்மா வேறு என உணர்க.

28. ஏன் ஆன்மாக்கள் நித்தியமாயிருத்தல் வேண்டும்?

நித்தியமன்றேல் அநித்தியமாம். அநித்தியமாயின் தேகம் அழிய ஆன்மா அழியும். அழியவே அவரவர்களுடைய நல்வினை தீவினைகள் அவ்வத் தேகத்தோடே நீங்கும் என்று கொள்ளல்வேண்டும். அங்ஙனமாயின் ஆன்மாக்கள் உண்டாகும் காலத்து வினையின் பிரஸ்தாபம் கேட்கப்படமாட்டாது. வினையின்றேல் அறிவாகிய ஆன்மா கூன், குருடு, செவிடு முதலிய அங்கஹீனமுடைய தேகங்களிலே புக அவசியமில்லை. அற்றேல் இப்போது அங்கஹீனர்களாய்ப் பிறந்து உழலும் உயிர்களுக்கு யாது கதி? வினைகாரணமாகவேயன்றோ இவ் அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன. வேறுகதி காணாமையால் வினையினால் பந்திக்கப்பட்ட உயிர் அநாதி நித்தியம் என்று அறியத்தக்கது.

29. அவ் உயிர்கள் மலவிருளில் அழுந்தியிருப்பதை எவ்வாறு கண்டோம்?

மலவிருளில் அழுந்தியிருப்பவை என்றால் குற்றமும் குறைவும் வாய்ந்தன என்பது அமையும். அக்குற்றத் தினையும் குறைவினையும் ஆன்மாக்களிடத்தில் பிரத்தி யக்ஷமாய்க் காணுகையால் அவை மலவிருளாம் வினையில் அழுந்தியிருப்பவை என்பது உணர்க.

**30.** அக்குற்றங்களையும் குறைவுகளையும் ஒருவாறு சுருக்கிச் சொல்லுக.

காமக் குரோத லோப மோக மத மாச்சரியம், தனக்கு மற்றொருவரும் ஒவ்வாதவர் என்று நினைத்தல், துன்பம் வந்தகாலையில் விசனப்படுதல், இன்பம்வந்தகாலையில் களிப் படைதல், பொய்யை மெய்யென்றும் மெய்யைப் பொய் யென்றும் கொள்ளுதல், பிறரை நிந்தித்தல் முதலிய குணங்கள் ஆன்மாக்களிடத்தில் நிகழக் கண்டோம் ஆகை யால் ஆன்மா மலவிருளில் அழுந்தியிருப்பது சத்தியம் என்று உணர்க.

**31.** ஆன்மா எவ்வாறு வியாபகம்?

சிரம், நெற்றி, கண்டம், மார்பு, உந்தி, குய்ய முதலிய இடங்களில் வியாபித்து சகல கேவலானுபவங்களை எய்தி நின்மலாவத்தையில் அருளோடு கலந்து விளங்கலால் ஆன்மா வியாபகம் என்பதாம்.

**32.** சார்ந்ததன் வண்ணமாவது எவ்வாறு?

நல்லவர்கள் கூட்டுறவால் நல்லவராகவும், தீயவர்கள் கூட்டுறவால் தீயவராகவும் ஆயிடுதல் மானிடர்க்கு இயல் பாதலைத் திருக்குறள் ஆசிரியர் கூறியருளினர்.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு"

என்பது பிரமாணம். உபமானமுகத்தால் ஆன்மா சார்ந்த தன் வண்ணமாயிடுதலை விளக்கிஞராகையாலும் சார்போதன் என்று அதற்குப் பெயர் வழங்கலாலும், யாம்கூறியது நிலைபேருகியது உணர்க.

33. சுதந்திரமின்மை எப்படி?

சங்கற்பித்தபடியே யாதொரு காரியத்தையும் முடிவுறச் செய்தல் கூடாமையிஞலே தான் சுதந்திரமின்மை (பரதந்திரம்) சித்தமாம். இதனை எமது அன்னையார் ஔவையார்,

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்ருகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்."

என்று விளக்கினது அறிக.

34. ஆன்மா அதிருப்தியுடையது எனல் எவ்வாறு?

யாதொரு பொருளினையும் இச்சைப்படுதலிஞலேயே அதிருப்தியுடையது என அறிக. இதனை ஸ்ரீ தாயுமான சுவாமிகள்,

"ஆசைக்கோரளவில்லை அகிலமெலாங் கட்டி
ஆளினும் கடன்மீதிலே
ஆணைசெலவே நினைவரளகேச னிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்(கு)
அலைந்திடுவர் நெடுநாளிருந்தபேரும்
நிலையாகவேயினும் காய கற்பந்தேடி
நெஞ்சு புண்ணுவர்"

என்று நன்கு விளக்கியருளிஞர்.

**35.** செயற்கையுணர்வு (இயற்கை யுணர்வு இன்மை) ஆமாறு எப்படி?

ஆன்மாவினுக்கு அறிவிருந்தும் தானே அறியும் சக்தி இல்லாமல் ஒருவர் அறிவித்தபோது அறிவதால் ஆன்மாவினுக்கு இயற்கையுணர்வின்று என்பது உணர்க.

**36.** ஆன்மா சிற்றறிவும் சிறுதொழிலும் உடையது என்பதை விளக்குக?

எல்லாமறியும் அறிவில்லாமையினுல் சிற்றறிவும், எல்லாம் செய்யும் வல்லமை இல்லாமையினுல் சிறுதொழிலும் உடையதாம் என அறிக. அன்றியும் அறிவித்தாலறியும் அறிவாயும் அசைவித்தாலசையும் தொழிலாயும் தானென்றற்கு அறிவிக்கவும் ஒன்றினை அசைவிக்கவும் ஆற்றல்வகியாத அறிவாயும் தொழிலாயும் விளங்கலால் ஆன்மா சிற்றறிவும் சிறுதொழிலும் உடையது என்பது அமையும்.

**37.** ஆன்மாக்கள் பிறந்திறந்துழலும் பிறப்புக்கள் யாவை?

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் ஏழுமாம்.

**38.** முன்னுள்ளவாறு ஓரிடம்விட்டு ஓரிடம் பெறுதலானும், ஒன்ருேடு ஒன்று தங்கள் எண்ணத்தை அறிவித்துக்கொள்ளுதலானும், விருப்பு வெறுப்பு இருத்தலானும், ஞாபகசக்தி நிகழ்தலானும் உயிருடைப் பொருள் எனக் கண்டோம். தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பது எவ்வாறு?

தாவரங்கள் என்பது மரம், செடி முதலியவை. அவை பரிசத்தை அறிதலானும் தண்ணீர் விடாதகாலத்து வளராமையினாலும் உயிருடைப்பொருள் என்பது சித்தம்.

39. இதனை உதாரணத்தால் விளக்குக.

சில செடிகளைத் தொட்டகாலத்தில் சுருங்குதலும், ஒரு செடியின் புஷ்பத்தினுள்ளே கந்தமூலங்களின் துண்டைப் போட்டகாலத்தில் இதழ்கள் குவியாமல் மாமிசத் துண்டைப் போட்டகாலத்தில் இதழ்கள் குவிந்து அத்துண்டத்தை ஜீரணஞ்செய்த பின்னரே மலர்தலும் அவற்றிற்கு அறிவு உண்டு என்பதற்கு நிதரிசனமாம்.

40. அச்சித்தானது உலகின்கண் வந்தவாறு எப்படி?

உலகு சித்து ஜடம் என்னும் இருவகைத்து எனக் கூறினோம். அவற்றில் ஜடம் அறிவற்ற பொருளாகவே அந்த ஜடமாகிய பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பூதங்கள் தாமே தேகமாய்க் காரியப்பட்டுச் சித்தை வந்து பொருந்துதல் கூடாது. இச்சித்தோ அறிவித்தால் அறியவும் அசைவித்தால் அசையவுமான யோக்கியதை வகித்திருத்தலால் தானே அறிந்தும் தானே புடைபெயர்ந்தும் பூதங்களைக் காரியப்படுத்தவாவது பூதகாரியமான தேகத்தில் வந்து புகவாவது முடியாது. ஆதலால் ஜடமாகிய உலகத்தோடு சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய ஆன்மாவைக்கூட்டி யியக்க சர்வவல்லமை, சர்வஜ்ஞதை, சர்வவியாபகம், நித்தியத்வம், நித்தியானந்தம், சுதந்திரம் ஆகிய குணங்களுடைய வேறொரு சித்து இருக்க வேண்டியது அவசியம் என்பது யாவருக்கும் ஒப்பமுடிந்த முடிபாகும். இச் சித்தினையே இனி நாம் ஈசுவரன், பதி எனக் கூறுவோம். இவ் ஈசுவரன் குறைவினையுடைய

ஆன்மாவைப் பூதகாரியமாகிய உலகத்தில் நிலவச்செய்து அதன் குற்றங்களை நீக்கிக் குணப்படுத்துவன். இதுவே இவ் ஆன்மாக்கள் உலகில் வந்தவாறும்.

41. அந்த ஈசுவரனுக்கு ஏன் சர்வவல்லபத்துவம் இருத்தல் வேண்டும்?

எக்காலத்தும் எவ்விடத்தும் ஆன்மாக்களுக்குச் சுக துக்கங்களை ஊட்டவேண்டித் தேகாதிகளைச் சிருஷ்டித்தல் முதலியவற்றிற்கு முடிவிலாற்றல் வேண்டுவது அவசிய மாகையால் அவ் ஈசுவரன் சர்வ்வல்லவராய் இருத்தல் வேண்டும்.

42. ஏன் சர்வஜ்ஞத்வம்?

எல்லாக்காரியமும் அறிந்து செய்யவேண்டியிருத் தலால் முற்றும் உணர்தலாகிய சர்வஞ்ஞத்வம் அவசியமாம்.

43. சர்வவியாபகம் எப்படி?

எவ்விடத்தும் சேதனங்களை அறிவிக்கவும், அசேத னங்களை அசைவிக்கவும் வேண்டுகையால் சேதனுசேதனங் களாகிய இருவிதப் பிரபஞ்சத்தினும் நிறைந்து இயக்குத லாகிய சர்வவியாபகத்வம் அவசியமாம்.

44. நித்தியத்துவம் எப்படி?

இன்றேல், தன்னைக் காரியப்படுத்த வேருெரு பதி வேண்டும். அவ்வாறு இல்லாததே பதி. பாசத்தைப் போலக் காரியப்படுதலும், பசுவைப்போலப் பிறந்துழலு தலும் ஆகிய விகாரமில்லாமை பதியினது தர்மம் ஆகை யால், அதுவே நித்யத்வமாம்.

45. ஏன் நித்தியாநந்தர் என்பது?

இனிப்பதாகிய கரும்பினை நுகருவாருக்கு இன்பம் பெருகுதல்போல, ஈசுவரானுபவம் எய்தினருக்குப் பேரின்பம் விளைவிக்கும் ஈசுவரன் நித்தியானந்த சொரூபியாய் இருத்தல்வேண்டும் என்பது சித்தம். இன்றேல் ஆன்மாக்களுக்குத் துன்பம் நீக்கி இன்பம் கொடுப்பது இயலாது என அறிக.

46. அந்த ஈசுவரனுக்குச் சர்வ சுதந்திரத்துவம் இருக்க வேண்டியது என்ன?

சுதந்திரம் என்பது தன்னாலும் பிறராலும் தடையுண்டாகாமை, சீவர்கள் கன்மானுபவம்பண்ண உரியவர்கள் ஆதலானும் வரம்பிற்பட்ட அறிவும் தொழிலும் உடையவர்களாதலானும் இவர்களது சங்கற்பத்தைச் சங்கற்பித்த வழிச் சிலபோது முடித்தும் அச்சங்கற்பங்கெடச் சிலபோது தடுத்தும், நடைபெறச்செய்வதினாலும் சுதந்திரத்துவமின்றேல் தனக்குமேல் ஒரு கர்த்தாவேண்டிச் சர்வவல்லபத்துவம் குன்றுவதினாலும் ஈசுவரன் சர்வசுதந்திரத்துவம் உடையவனாதல் காண்க.

47. மேலேகூறிய ஆன்மசித்து தனது குற்றம் நீங்கிக் குணப்படுமாறு யாங்ஙனம்?

அச்சித்து தானேயறியும் அறிவில்லாததினால் குணப்படும்வழி இன்னது என்று அறியமுடியாது. இதனை அறிவிக்கும் சித்தாகிய ஈசுவரன் அறியாமையிற்கிடந்த ஆன்மாவுக்குத் தனுவாதிகளைக் கொடுத்தனன். அதனால் அறிவு சிறிது விளங்கப்பெற்றது ஆன்மா. அப்போது வேத சிவாகமங்களாகிய சட்டங்களைக் கொடுத்தனன்

பரமன். அவ்வற்றின்வழி ஒழுகி ஆன்மா தனது குற்றம் விலகிச் சுகிக்கும்வழி உண்டாயது என அறிக.

## 3. வேதசிவாகமவியல்

48. வேதமாவது என்ன?

பதியினது உபதேசம். (வேதம்=அறிவிற்குப் பாத்திரமாயுள்ளது.)

49. அது எதனையுணர்த்தும்?

உலகினியல்பும் ஆன்மாவினியல்பும் அதனைப் பந்தித்துநின்ற பாசத்தினியல்பும் அப்பாசம் நீங்கும் முறைமையும் அப்பாசத்தை நீக்கும் பரமேசுவரனது இயல்புமாகிய இவைகளைத் தெளிய உணர்த்தும்.

50. வேதங்கள் எவை?

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்குமாம்.

51. வேதங்கள் எத்தனை காண்டங்கள் உடையன?

கர்மகாண்டம், ஞானகாண்டம் என இரண்டு காண்டம் உடையன.

52. கர்மகாண்டம் எதனைக் கூறும்?

ஜோதிஷ்டோமம் முதலிய புண்ணிய கர்மங்களைக் கூறுவதாம். (ஜோதிஷ்டோமமாவது சொர்க்கத்தை விரும்பிச் செய்யப்படும் யாகமாம்.)

53. ஞானகாண்டமாவது யாது?

சரீரம் முதலானவைகளின் நிலையாமையைக்கண்டு யான், எனது என்னும் இருவகைப்பற்று மற்று முத்தி அடைதற்கு வழியாகிய உண்மை ஞானத்தை உணர்த்துவதாம்.

54. கர்மம் ஞானம் என்பவைகளை ஒருவன் விரும்பி அனுஷ்டிப்பதால் அவைகள் முறையே சொர்க்கம் மோக்ஷம்களைத்தருமென்று கூறியது ஒக்கும். இந்தக் கர்மஞானங்களே பலன்தருவனவாயின் ஈசுவரனுக்கு என்ன வேலை?

ஈசுவரார்ப்பணமான கர்மமும் ஈசுவரனையறியும் ஞானமுமே யாம் தெரிவித்தவை. இதனால் வேதமடங்கலும் ஈசுவராராதனமே கேட்கப்பட்டதெனல் சித்தம். இவ் ஈசுவரனே பலதாதா என்று அறியத்தக்கது.

55. வேதத்தில் கர்மத்தையும் ஞானத்தையும் போதிக்கும் பிரிவுகள் உண்டோ?

கர்மத்தைப் போதிப்பது வேதம் எனவும், ஞானத்தைப் போதிப்பது வேதாந்தம் எனவும் பெயர்பெறும்.

56. வேதாந்த சூத்திரம் என்பது யாது?

வியாச சிஷ்யராகிய ஜைமினி, வியாசரோடு இகலிக் கர்ம சூத்திரஞ் செய்தனர். கர்மமே முக்கியம் என்பது அவரது சித்தாந்தம். அதனை மறுத்தே வியாசர் வேதாந்த சூத்திரஞ் செய்தனர். ஞானமே முக்கியமென்பது அவரது சித்தாந்தம். முடிவில் இரண்டும் ஒப்பேயாம். எங்ஙனம் எனின் பதி ஞானக்கிரியா சொரூபியாயுள்ளவர். இவரது

ஞானத்தை, வந்திப்பது ஞானகாண்டமும், கிரியையை வந்திப்பது கர்மகாண்டமுமாம்.

57. இந்த வியாச சூத்திரத்துக்கு யாராவது பொருள் விரித்திருக்கின்றனரா?

ஸ்ரீகண்டாசாரியர், சங்கராசாரியர், பண்டிதாசாரியர், இராமாநுஜாசாரியர், மத்வாசாரியர் என்பவர்கள் தனித் தனிப் பாஷ்யங்கள் செய்திருக்கின்றனர். இவர்களுள் முதல் மூவரும் சிவபரத்துவபுத்தி உடையவர்கள்; மற்றைய இருவரும் விஷ்ணுபரத்துவபுத்தி உடையவர்கள். அன்றியும் இவர்கள் முறையே சமவாதி, விவர்த்தவாதி, ஐக்கியவாதி, விசிஷ்டாத்துவைதி, துவைதி என அறிக.

58. இவ் ஆசாரியர்களில் சைவாசாரியர்கள் யாவர்? சைவ பாஷியம் யாது?

ஸ்ரீகண்டாசாரியரே சைவாசாரியர்; அவர் பாஷ்யமே சைவ பாஷியம் என்று சிலரும், சங்கராசாரியரே சைவாசாரியர், அவர் பாஷியமே சைவ பாஷியம் என்று சிலரும், பண்டிதாசாரியரே சைவாசாரியர், அவர் பாஷியமே சைவ பாஷியம் என்று சிலரும் கூறுவர். இன்னோர் பதி பசு பாச விசாரணையில் பேதப்பட்டவர்களாயினும் சிவனைப் பரம்பொருள் என்று கொண்டமையால் சைவர்கள் என்று பேசப்பட்டார்கள். மூன்று சைவாசாரியர்கள் பெறப்பட்டாரேனும் ஸ்ரீகண்டாசாரிய சுவாமிகளே சைவாசாரியரெனப் பிரசித்தியடைந்திருக்கின்றனர்.

59. மேற்கூறிய வேதங்களன்றி இன்னும் வேதங்கள் உண்டோ?

ஆயுர்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம் என நான்காம். இவை வேதத்திற்கூறும் கர்ம காண்டத்தோடு விரவிப் பயன்தரத்தக்கனவாம்.

60. சிவாகமமாவது என்ன?

திரிபதார்த்தத்தைப் போதித்து ஆன்மாக்களுக்கு மல நாசம்பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுத்தல் பற்றிப் பரமாப்தராம் பதியினின்றும் வந்த கட்டளையாம்.

61. அது எதனை உணர்த்தும்?

பதி பசு பாசங்களின் இலக்கணத்தையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களின் முறைமையையும் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் சதுர்வித முத்திகளையும் இன்னும் அநேக விஷயங்களையும் தெளிவாக உணர்த்தும்.

62. சிவாகமங்கள் எவை?

காமிகம் முதல் வாதுளம் ஈருகவுள்ள இருபத்தெட்டுமாம்.

63. சரியையாதி நான்கையும் முறையே விளக்குக.

சரியை சமயாசாரங்களை உபதேசிக்கும். கிரியை சந்தியாவந்தனம், பூஜை, ஜெபம், ஓமம் முதலியவற்றை உணர்த்தும். யோகம் பிராணயாமம் முதலிய அங்கங்களோடு கூடிய சிவயோகத்தை அறிவிக்கும். ஞானம் பதி பசு பாச பதார்த்தத்திரயங்களைப் போதிக்கும்.

**64.** ஞானத்திஞல் பதி பசு பாசங்களை அறிந்துய்யும்வழி பிறந்திருக்கவும் சரியையாதிகளை அனுஷ்டிக்கவேண்டுமெனல் யாதுக்கு?

ஞானம் ஆன்மாவுக்கு அபின்னமாயிருப்பது ஒரு குணம். இது தேகம், இந்திரியம், பிராணன், கரணம் இவைகளோடு கலவாதபோது இத்தேகம் இந்திரிய பிராணுந்த கரணங்களுக்கு ஒரு வியாபாரமும் இல்லையாம். அப்படி வியாபாரம் உண்டாகிறபோது தேகமுழல்வதும், கண் காது முதலியவை இயங்குவதும், வாக்கு பாதம் முதலியன சரிப்பதும், மனம் புத்தி முதலியன சங்கற்பம் விகற்பங்களைச் செய்வதும் ஆகிய இவையெல்லாம் விஷய சுகத்திற்பட்டுக் கீழ்நோக்கிப்போகும் தேகேந்திரியாதிகளை யூர்த்துவகதியிற்செலுத்திப் பரசுக வாழ்விற் பதிந்திடச் செய்தலே சரியை, கிரியை, யோகம், ஞானங்களின் பண்பாம். இதனை விரிக்கில் தேகத்தை ஈசுவர விஷயத்தில் செலுத்துதல் சரியை. இந்திரியங்களைச் செலுத்துதல் கிரியை. பிராணுந்தக்கரணங்களைச் செலுத்துதல் யோகம். ஆன்மா இக்கருவி கரணங்களை எல்லாம் ஒருவித் தனது போதஞ் சீவியாது ஈசுவரனிடத்தில் அடங்குவது ஞானம் என்று அறியத்தக்கது. இவ்வுண்மையைச் சிவதர்மவிசாரம் என்னும் நூலில்,

"சரியை தேகத்தால் வழிபடல் கிரியை
சாருமிந் திரியத்தாற் சிவனைப்
பிரியமாய்ப் பேணல் யோகமே கரணம்
பிரிபடா தரனடி யொன்றல்
உரியமெய்ஞ் ஞானஞ் சீவனைச் சிவனுக்
குணவெனக் கொடுத்தலீங் கிதனைத்
தெரியகில் லார்தம் வாய்வலி கொண்டு
சீரிழந் துரைப்பரீ மொழியே"

என்று விளக்கியிருக்குமாறறிக.

**65.** வேதத்துக்கும் சிவாகமத்துக்கும் பேதம் என்ன ?

**ஒருவிஷயத்தை வேதம் சுருங்கச்சொல்லும். சிவாகமம் விளங்கச்சொல்லும். இதனுல் சிவாகமம் வேதவிசேஷம் எனப் பெயர்பெறும்.**

66. ஈசுவரன் வேதம் ஒன்றினையே விரித்துச்சொன்னுல் போதுமே. இரண்டுநூல்கள் ஆவசியகமாகாதோ?

ஆகாது. வேதத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்கள் கூறப்பட்டன. சிவாகமத்தில் வீடு ஒன்றே கூறப்பட்டது. இவற்றுள் முதல் மூன்றும் உலகர்க்கு உரியன. வீடு ஒன்றே சத்திநிபாதர்க்கு உரியது. வேதத்தில் அதிகபாகம் உலகினர்க்கும் கொஞ்சபாகம் சத்திநிபாதர்க்கும் பயன்படத்தக்கவாயின. அதனுல் சத்திநிபாதர்க்கே பயன்படுமாறு சிவாகமம் தோன்றியது அவசியம் என்றறிக. வேதத்தில் வீடுபெறப்படினும் அது ஏனைய மூன்றின் முன்னும் சொரூபவிளக்கம்பெற்றிலது. சிவாகமத்திற்றுனே வீட்டின் சொரூபம் இனிது பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இதனை உற்றுநோக்குவார் வேதம் உலகநூல் என்றும், சிவாகமம் வீட்டுநூல் என்றும் விதந்துரைப்பர்.

'' வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்தநூல்கள்,
ஆதிநூ லனுதியம லன்றருநூ லிரண்டு
மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம்
நீதியினு லுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கு
நிகழ்த்தியது ''

என்று மேலோர் விளக்கிய வாய்மையே சான்றும்.

67. இவ்வாறு கூறுதல் வேதநிந்தை ஆகாதே?

ஆகாது. எங்ஙனமெனின், வேதத்தில் கன்மகாண்டம், ஞானகாண்டத்தின் முன்னர் கனம்பெற்றிலது. அதுபோல வேதம் சிவாகமத்தின் முன்னர் கனம்பெற்றிலது. கன்மகாண்டத்தை நோக்க ஞானகாண்டமும், வேதங்களை நோக்க சிவாகமங்களும் பூஜிக்கப்படுதல் சர்வசம்பிரதிபந்நமாயிடுதல் அறிக.

68 சநகாதியோகிகளுக்கு ஈசுவரன் அருளியது வேதமா? சிவாகமமா?

முதலில் வேதத்தையும், பின்னர்ச் சிவாகமத்தையும் போதித்தருளினர். சுருங்கிய வேதத்தால் அவர்களுக்குத் தெளிவுண்டாகாமையினுல் விரிந்த சிவாகமத்தால் தெளிவுறச் செய்தனர்.

69. வேதம் எப்போது தோன்றியது? சிவாகமம் எப்போது தோன்றியது?

சிவனுர் ஐந்துமுகங்களில் ஊர்த்வமுகமாகிய ஈசானத்திலிருந்து இருபத்தெட்டு ஆகமங்களும் மற்றக் கீழ்முகங்கள் நான்கிலிருந்து நான்கு வேதங்களும் பிறந்தன. வேதங்களும் சிவாகமங்களும் ஒரேகாலத்தில் தோன்றினவென்றறிக.

70. இனி- ஆகமங்கள் ஐவகைப்படும் என்றும் அவை லௌகிகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரம் எனப்படும் என்றும் பெரியோர் கூறுகின்றனர். இவ் ஐந்தும் காமிகாதி சிவாகமத்தின் பகுதியா?

இவற்றுள், மாந்திரம் என்பதுதான் சிவாகமம். இந்த மாந்திரமே சிவஞானத்தைப் பயப்பது. தற்காலத்தில்

பயன் தருவது லெளகிகமும், காலாந்தரத்தில் பயன் தருவது வைதிகமும், ஆன்மவிசாரயியற்கையினது அத்யான்மிகமும், யோகவியற்கையினது அதிமார்க்கமுமாகப் பிற நூல்கள் ஆகமாபிதானங்கொண்டு வர்த்திக்கின்றன. அவையெல்லாம் சிவாகமமாகாது என்று அறிக.

71. காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களுக்கு அதிகமாக வேறு சிவாகமங்கள் கிடையாதோ?

காமிகாதிகளை மூலமாகக்கொண்டு குரு முதலிய இருடியர் செய்த உபாகமங்கள் இருநூற்றேழு வேறு உண்டென்று அறிக.

72. புராணமாவது என்ன?

வேதாகமப்பொருள்களை வற்புறுத்தி விரித்துச் சரித்திர ரூபமாக உலகத்துக்கு அறிவிப்பது.

73. அது எதனை உணர்த்தும்?

உலகின்தோற்றமும், லயமும், பாரம்பரியங்களும், மனுவந்தரங்களும், பாரம்பரியக் கதைகளுமாகிய இவ் ஐந்தையும் கூறும். இதனாலே புராணம் பஞ்சலக்ஷணம் எனப் பெயர்பெறும்.

74. புராணங்கள் என்பவை எவை?

சைவம் முதல் ஆக்கிநேயம் ஈறாகவுள்ள பதினெட்டுமாம்.

75. மேற்கூறிய புராணங்களில் பிரிவு உண்டோ?

சிவபுராணம், விஷ்ணுபுராணம், பிரமபுராணம், சூரியபுராணம், அக்கினிபுராணம் என ஐந்துபிரிவு உண்டு.

76. சிவபுராணம் எவை?

சைவம், காந்தம், லிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், பிரமாண்டம் என்னும் பத்துமாம்.

77. விஷ்ணுபுராணம் எவை?

நாரதீயம், பாகவதம், காருடம், வைணவம் என்னும் நான்குமாம்.

78. பிரமபுராணம் யாவை?

பிர்மம், பதுமம் என இரண்டுமாம்.

79. சூரியபுராணம் யாது?

பிர்மகைவர்த்தம் ஒன்றேயாம்.

80. அக்கினிபுராணம் யாது?

ஆக்கிநேயம் ஒன்றேயாம்.

81. இன்னும் புராணங்கள் உண்டோ?

உபபுராணங்கள் உண்டு.

82. அவ்வுபபுராணங்கள் எவை?

உசனம், கபிலம், காளி, சநற்குமாரம், சாம்பவம், சிவதன்மம், சௌரம், துர்வாசம், நந்தி, நாரசிங்கம், நாரதீயம், பராசரம், பார்க்கவம், ஆங்கீரசம், மாரீசம், மானவம், வாசிட்டலிங்கம், வாருணம் என்னும் பதினெட்டுமாம்.

83. சாஸ்திரமாவது என்ன?

வேதத்துக்கு அங்கமாகிய நூல்களாம்.

84. அவை எவற்றை உணர்த்தும்?

வேதங்களை ஓதும் முறைமையினையும், அவற்றில் விதித்த கர்மங்களை அநுட்டிக்கும் முறைமையினையும், காலவிசேஷங்களையும், வேதங்களின் எழுத்து சொல் பொருள் இலக்கணங்களையும், சொற்களின் வியாக்கியானங்களையும், வேதமந்திரங்களின் சந்தங்களின் இலக்கணங்களையும் உணர்த்தும். இவை முறையே சிக்ஷை, கற்பம், சோதிடம், வியாகரணம், நிருத்தம், சந்தம் என்பனவாம்.

85. இன்னும் வேறு சாஸ்திரங்கள் உண்டோ?

சாங்கியம், பாதஞ்சலம், நியாயம், வைசேஷிகம், மீமாம்சை, வேதாந்தம் என்னும் ஆறு தத்துவ சாஸ்திரங்கள் உளவாம்.

86. அவற்றுள் சாங்கியமாவது என்னை?

தேகாதி பிரபஞ்சத்துக்குக் காரணமாய் அருவாய் நித்தியமாய் வியாபகமாய் ஜடமாயிருக்கும் மாயை உண்டு என்றும், அருவாய் வியாபகமாய் பலவாய் அறிவாயிருக்கும் ஆன்மா உண்டு என்றும், இவ் ஆன்மாவுக்கு அநாதியேயுள்ள அஞ்ஞானத்தால் சுகதுக்க ஞானம் உண்டு என்றும், மாயையையும் ஆன்மாவையும் பிரித்து உணரும் விவேகத்தாலே அஞ்ஞானம்நீங்கி ஆன்மா முத்தியடையும் என்றும், ஆன்மாக்களுக்குப் பிறவிகள் அநேகம் உண்டு என்றும், ஈசுவரன் உண்டு என்று தத்துவவாயிலாகக் கண்டுபிடிப்பது அறிவுக்கு எட்டாமைபற்றி ஈசுவரன் ஒருவன் இல்லை என்றும் கூறுவது.

87. பாதஞ்சலமாவது என்னை ?

சாங்கியம்போலவே யாவுங்கூறி அதற்குமேல் சிருஷ்டி திதி, லயங்களைச் செய்பவனாயும் உண்மை ஞானத்தை உபதேசிப்பவனாயும் உள்ள ஈசுவரன் ஒருவன் உண்டு என்றும், அவனை யோகாப்பியாசங்களினால் காணலாம் என்றும் போதித்து அந்த யோகத்தை இனிது விளக்குவது

88. நியாயமாவது என்னை ?

தருக்கநூல் துணிபால் பதார்த்தங்கள் இவையிவை என்று உணர்த்தி ஜடம் சித்தாகிய இரண்டு பொருள்கள் நித்தியம் என்றும், ஜடத்தினின்று சித்துப் பிரிந்துநிற்பதே முத்தி என்றும், மேற்கூறிய சித்து மனசு என்றும், அம் மனசு அணுரூபம் என்றும் கூறுவது.

89. வைசேஷிகமாவது என்னை ?

ஆன்மா நித்தியமாய் அருவாய் வியாபகமாய் உள்ள தென்றும், அது ஜீவான்மா பரமான்மா என இருவகைப் படும் என்றும், ஜீவான்மா உடம்புதோறும் வேறாய்ப் பல வாய் இருக்கும் என்றும், பரமான்மா ஈசுவரன் என்றும், ஞானத்துக்கு ஏது மனம் என்றும், ஆன்மாவானது மனசின் சையோகத்தால் ஞானம் எய்திப் புண்ணிய பாவங்களை ஆர்ஜ்ஜிக்கும் என்றும், பதார்த்தங்களின் இயல்புகளை அறியும் ஞானத்தால் கர்மம் நசிக்கும் என்றும், நசிக்கவே ஞானமின்றிச் செயலின்றி நிற்பதே முத்தி என்றும், வேதம் ஈசுவரனாலே சொல்லப்பட்டது என்றும் கூறுவது.

90. மீமாம்சையாவது என்னை ?

வேதங்களின் கர்ம காண்டத்தை மேற்கொண்டு யாகாதி கருமங்களே சொர்க்காதி பதங்களைத் தரும்

என்றும், வேதம் சுயம்பு என்றும், பிரபஞ்சம் நித்தியம் என்றும், ஆன்மா பல என்றும், ஆன்மாக்களுக்கு வேருய்ப் பலனைக் கொடுத்தற்கு ஈசுவரன் ஒருவன் வேண்டுவது இல்லை என்றும் கூறுவது.

91. வேதாந்தமாவது என்னை?

உபநிஷத்துக்களிலே கேட்கப்படும் ஆன்மா ஜகத் காரண வஸ்து என்றும், ஜகஜீவபரங்களின் இலக்கணம் இவை என்றும், ஆன்மாவினது பந்தம் ஒழியத்தக்க உபாயம் இது என்றும், அந்தப் பந்தம் நீங்காமைக்குக் காரணம் இன்னது என்றும், நீங்கியடையும் புருஷார்த்தம் இது என்றும் கூறுவது.

92. இந்தச் சாஸ்திர கர்த்தர்கள் யாவர்?

கபிலர், பதஞ்சலி, பகவான், அக்ஷபாதர், கணுதர், ஜைமினி, வியாசர் என்னும் அறுவருமாம்.

93. இவற்றுள் வியாசர் கூறிய வேதாந்தம் எத்தனைவகையாகப் பிரிந்தது?

துவைதம், அத்துவைதம், விசிட்டாத்துவைதம் என மூன்றுவகையாகப் பிரிந்தது. இவற்றுள் வியாசரது ஹ்ருதயம் அத்துவைதம் ஒன்றேயாம். இதன் உண்மை ஸ்ரீகண்டபாஷியத்தாலும், பண்டிதபாஷியத்தாலும், மெய்கண்ட நூலாலும் விளங்கும்.

94. ஏனைய மதங்களுக்கு யாதுகதி?

அவையும் அதிகாரிகள் பேதத்தால் பயன்படத்தக்கனவாம்.

95. கபிலர் முதல் வியாசர் ஈருக முனிவர் அறுவரும் சாஸ்திரங்கள் செய்ததற்கு முதனூல் உண்டா?

வேதாகமங்களேயாம்.

96. வேதாகமங்களுக்கு மாத்திரம் என்ன விசேடம்?

வேதாகமங்களில் யாவும் அடங்கும். இவை ஒன்றில் அடங்கா.

" யாதுசமயம் பொருணூல் யாதிங்கென்னில்
இதுவாகும் அதுவல்ல எனும்பிணக்க தின்றி
நீதியினல் இவையெல்லாம் ஓரிடத்தேகாண
நிற்பதுயாது ஒருசமயம் அதுசமயம் பொருணூல்
ஆதலினல் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கிடும் அவைஇரண்டும் அரனடிக்கீழ் அடங்கும் "

என்ற மெய்யுபதேசத்தைத் தெளிந்திடுக.

97. " அரனடிக்கீழடங்கும் " என்றது என்னே?

அரனடி - சிவசத்தியாம். சிவசத்தியில் வேதசிவாகமங்கள் அடங்கும். அச்சிவசக்தி சிவத்திலடங்கும். சிவம் ஒன்றிலுமடங்காது. அச்சிவவியாபகத்துள் ஏனையஎல்லாப் பொருள்களும் வியாப்பிய வியாத்தியாயுள்ளன என்றறிக.

## 4. பதியியல்

98. அச்சிவம் என்ன விசேடங்களை உடையது?

1-சுவதந்திரம், 2-விசுத்ததேகம், 3-அநாதிபோதம், 4-அநந்தசக்தி, 5-திருப்தி, 6-சர்வாநுக்ரகம், 7-அநாதிமலமுத்தத்துவம். 8-சர்வஜ்ஞத்வம் ஆகிய எண்குணங்களையுமுடையது.

*99.* சுவதந்திரம் என்பனவாதிகளை விளக்கிக்காட்டுக?

1-சுவதந்திரம் = தன்வயமுடைமை. 2-விசுத்ததேகம் = தூயவுடம்பு. 3-அநாதிபோதம் = இயற்கை யுணர்வு. 4-அநந்தசக்தி = முடிவிலாற்றல், 5-திருப்தி = வரம்பிலின்ப முடைமை, 6-சர்வாநுக்ரகம் = பேரருளுடைமை, 7-அநாதி மலமுத்தத்துவம் = இயல்பாகவே பாசபந்தங்களினின்று நீங்குதல், 8-சர்வஜ்ஞத்வம் = எல்லாமறிதல்.

*100.* சிவபெருமானொருவரே சுவதந்திரர் என்பதை விளக்குக,

சிவபெருமான் ஸ்ரீமார்க்கண்டேயருக்குப் பதிஞறு வயதினை முதலிலருளி இயமன் வந்தகாலத்தில் என்றும் பதிஞருகச் செய்ததிஞலும், ஐந்துதலையையுடைய பிரமனது சிரங்களிலொன்றைக் கொய்ததிஞலும், மதுரையின் கண்ணே பஞ்சமா பாதகங்கள்செய்த பிராமணனொருவனுக்கு அனுக்கிரகித்திருப்பதிஞலும், சநகாதி யோகிகளுக்கு அருளவேண்டி யோகிருந்த காலையில் உலகிலுள்ள சர்வ ஜீவராசிகளும் போகம்புலர்ந்து செயலற்றுக் கிடந்ததஞலும், சிவபரஞ்சுடர் ஒருநாள் யக்ஷரூபந் தாங்கி வந்து பிரமன். விஷ்ணு. இந்திரன், அங்கி, வருணன், வாயு முதலியோரகந்தையடங்க அவர் முன்னே துரும்பொன்றினைக் கிள்ளிப்போட்டு இதைச் சற்றே அசையுங்கள் பார்ப்போமென்று ஒவ்வொருவராகப் பரீக்ஷித்து அசைக்க முடியாமையை வெளிப்படுத்தித் தமது பேரருட்டிறத்தைப் பிரகாசப் படுத்தியதஞலும் அச்சிவபெருமானொருவரே சுவதந்திரரென்பது பெறப்பட்டது.

*101.* அவர் விசுத்த தேகமுடையாரென்பதை விளக்குக.

அவர் யோனிவாய்ப்பட்டுப் பிறவாத பெருமையே அவர் விசுத்ததேக முடையாரென்பதை நிலைநாட்டும்.

102. அநாதிபோதம் எவ்வாறும்?

மேற்கூறியபடி அறிவிக்கப்படும் சித்தாகிய ஆன்ம கோடிகளுக்கு வேதாகம புராண சாஸ்திரங்களை யறிவித்ததே சான்றாகும்.

103. அநந்த சக்தியை விளக்குக.

திரிபுர தகனம், தக்ஷயக்ஞத்வம்ஸம், ஜலந்தரவதம், நரஸிம்ஹ கர்வபங்கம் முதலிய அநேக விஷயங்கள் அவரது அநந்த சக்தியை விளக்குகின்றன.

104. வரம்பிலின்ப முடைமையை விளக்குக.

சிவபெருமான் வேண்டுதல் வேண்டாமையிலனுதல் பற்றியே அது சிறந்திடும், அவருடைய இன்பத்தில் ஏனையோரது இன்பமுழுதும் பெரிய சமுத்திரத்தில் ஒரு திவலை போல்வதென்றறிக.

105. சர்வானுக்ரகம் எப்படி?

தன்னடியவர்க்குத் தீங்கிழைத்த எமனையும் தனக்குத் தீங்கிழைத்த காமனையும் உயிர்ப்பித்ததே சான்றாம்.

106. அநாதிமல முத்தரென்பதை விளக்குக?

மாயாதேகங் கொள்ளாது சகளீகரிக்குங்காலையில் அருட்டிருமேனிகொண்டு வருவதினாலேயே போதரும்.

107. சர்வஜ்ஞராதலெப்படி?

சர்வஜ்ஞரென்றால் பேரறிவினர் என்பது பொருள். அறிவென்பது சித்தென்று முன்னரே யாம் கூறினோம். சிற்றம்பலவன் சிற்சபேசன் என்னும் பெயர்கள் எமது நடராஜப்பெருமான் ஒருவருக்கே உரியவாகலானும் ஆன்மாக்

களது கன்மங்களை அறிந்தூட்டி உபகரிக்கும் பஞ்ச கிருத்திய நடனவள்ளல் அவரொருவரே யாதலானும் சிவ பெருமானொருவரே சர்வஜ்ஞராயிடுதல் சித்தமென்றறிக.

108. சர்வ வியாபகரென்பதை விளக்குக.

விஜயன்பால் வில்லடியும் பாண்டியன்பால் பிரம் படியும் பட்டகாலத்து உலகிலுள்ள ஜீவராசிகளத்தனையும் அடிபட்டன என்பதும், சிவபெருமான் பவன், சர்வன், ருத்ரன், பீமன், மகாதேவன், உக்கிரன், சோமன், பசுபதி என்னுந் திருநாமங்களைத் தாங்கி யிருப்பதும் அவருடைய சர்வவியாபக தத்துவத்தை இனிது பிரகாசப்படுத்தினமை காண்க.

109. பவன் முதலாகிய திருநாமங்கள் சிவபரஞ்சுடருக்கு எப்படி வந்தன ?

சிவபெருமான் பிருதிவியிலே நிறைந்தியக்கலால் பவனென்றும், அப்புவிலே கலந்தியக்கலால் சர்வனென்றும், தேயுவிலே தோய்ந்தியக்கலால் உருத்திரனென்றும், வாயுவிலே வளைந்தியக்கலால் பீமனென்றும், ஆகாயத்திலே வியாபித்தியக்கலால் மகாதேவனென்றும், சூரியனிடத்திலே அந்தரியாமியா யிருந்தியக்கலால் உக்ரனென்றும், சந்திரனிடத்திலே சார்ந்தியக்கலால் சோமனென்றும், ஆன்மாவினிடத்திலே வேறற விரவி யியக்கலால் பசுபதியென்றும் திருநாமங்கள் வந்தவாறறிக. இந்த நாம விளக்கமே சிவபெருமான் சர்வவியாபகரென்பதை நன்கு போதிக்கின்றது.

110. இந்தச் சர்வவியாபகத்வம் சிவனுருக்கே சொந்தமென்பதை அவரது சரித்திர வாயிலாகச் சிறிது விளக்குக.

அர்ச்சுனன் வில்லாலடித்தான். பாண்டியன் பிரம்பா லடித்தான். அந்த அடிகள் எம்பெருமானது திருமேனி யாகிய சேதனுசேதனங்க ளெவற்றின்மேலும் பட்டது கண்டோம். ஒருகால் பெருமானது திருநயனங்களை அம்மை விளையாட்டாக மூடினள். அப்போது உலக முழுதும் இருண்டது. ஒருகால் சுவாமி அம்மையை நீங்கி யோகிருந் தனர். அப்போது பிரம விஷ்ணு முதலிய எல்லா உயிர் களுக்கும் போகம் ஒழிந்தது. இன்னுமித்தகைய பல சரித் திரங்களால் சிவனுரது வியாபகத்வம் இனிது வெளிப்பட்ட வாறறிக.

**111.** சிவபெருமானொருவருக்கே பகவான் என்னும் திரு நாமம் சிறந்திடுமென்பதைக் காட்டுக.

பகவான் என்பதற்கு ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம், என்னும் ஆறு குணங்கள் உடை யவன் என்பது பொருள். சிவபெருமானொருவருக்கே ஐசு வரியம் ஈசுவர சப்தத்தாலும், குபேரனைப் பொக்கிஷதார ராகக் கொண்டமையினுலும், வீரியம் உக்கிரனென்னும் நாமத்தாலும் அட்ட வீரட்டத்தாலும், புகழ் சிவநாமத் தாலும் வேதாகம புராணங்களினுல் புகழ்ந்தோதப் பெற் றமையினுலும், ஞானம் சர்வஜ்ஞன் என்னும் சொல்லா லும், முற்கூறியவாறு சிற்சத்தியே சபையாகக் கொண் டமையினுலும், திரு ஸ்ரீமான் என்னும் பெயராலும், க்ஷீராப்தியிலுண்டான திருவை நாராயணனுக் கீந்தமை யினுலும் வைராக்கியம் காமதகனனென்னும் வழக்காலும் செயலாலும் தெளிந்திடுக.

**112.** சிவனே பரமகாரண வஸ்து என்பதை இன்னுங் கொஞ்சம் விளக்குக.

எமதப்பணுகிய சிவபெருமானின் இடப்பால் விளங்கும் பார்வதி தேவியாரே தெய்வமென்பதாகக் கூறுஞ் சாக்தேய மதமும், மூத்த குமாரராகிய கணபதியே தெய்வமெனக் கூறும் காணுபத்திய மதமும், இளைய குமாரராகிய குமார சுவாமியே தெய்வமெனக்கூறும் கௌமார மதமும், மற்ருெரு குமாரராகிய வைரவரே தெய்வமெனக்கூறும் வைரவ மதமும், இன்னுெரு குமாரராகிய வீரபத்திரரே தெய்வமெனக் கூறும் வீரசைவ மதமும், உலகில் நிலவிச் சிவவியாபகமே நிலைத்தலால் சிவஞரது பரதத்வ வைபவம் நிலைபெற்றவாறறிக. அன்றிச் சிவபெருமானது தேவி யாரையே தேவியெனவும், விநாயகக் கடவுளையே பிள்ளை யார் மூத்த பிள்ளையாரெனவும், சண்முகக் கடவுளையே முருகன், இளைய பிள்ளையாரெனவும் பதிநூல்கள் கூறு கின்றன. ஈசுவரனென்னும் பெயரை ஒவ்வொரு மதத் தவரும் தத்தம் தெய்வங்களுக்கே யுரியதென்று கொண் டிருப்பினும் "ஈசுவரன் கோயில்", "பெருமாள்கோயில்" என்னும் வியவஸ்தையால் சிவபரஞ்சுடரையே ஈசுவர நாமம் தொடர்ந்து யோக ரூடிகளாக நிலைபெறும். சிவ பெருமாஞெருவரே பிறப்பிறப்பாதி யுயிர்க்குண மில்லா தவரென வேத சிவாகமங்கள் கூறுதலானும் சிவஞரது ஈசுவரத்வம் ஸ்தாபிக்கப்பட்டது.

**113.** மேற்கூறிய நிஷ்களப்பொருள் உலகத்தை எப்படி உண்டாக்கியது?

அந்த நிஷ்களப்பொருள் சகளீகரித்துத் தனது திரு வருளினைப் பராசக்தி சொரூபமாக இடப்பாகத்திலே வைத் தருளி ஸ்ரீ கைலாசபதியாய் வீற்றிருந்து சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார, திரோபவ, அநுக்கிரகமென்னும் பஞ்சகிருத்தி யங்களை நடத்தும் பொருட்டுப் பிரம விஷ்ணு ருத்ர மகேச சதாசிவ மூர்த்திகளாய் ஆவிர்ப்பவித்து நாடகம்புரியும்.

*114.* சிவபெருமான் உலகினுக்குப் பிதா என்பதின் தாற்பரியமென்னை ?

ஆண்பெண் அலி என்னும் மூன்றுமல்லாத பதியாகிய சிவபெருமான் சர்வான்மாக்களுக்குந் தனு கரண புவன போகங்களைத் தோற்றுவித்தலால் ஆண்பாற்படுத்துப் பிதா எனவறிக.

*115.* அந்த நிஷ்களப்பொருளை நாம் எப்படி வணங்கித் துதிக்கலாம்?

அது சகளீகரித்தாலன்றி அதனை நாம் பாவனையாதிகளால் தொழுது துதிக்க வியலாதாம்.

*116.* அந்த நிஷ்களப்பொருள் உருவம் அருவம் இல்லாதது என்றதை விளக்குக.

அது ரூபமுடையதே அல்லது ரூபமில்லாததே என்று நிஷ்கரித்துச் சொல்லமுடியாதென்பதே அதன் தாற்பரியம்.

*117.* அற்றேல் சிவபெருமானுருவமுடையரல்லரோ ?

ரூபம், அரூபம், ரூபாரூபம், அதீதம் என்னுந் திருமேனிகள் நான்கும் உடையவரென்பதே சைவநூற்றுணிபாம்.

*118.* சில சமயிகள் ஈசுவரன் கேவலம் உருவனென்றும், கேவலம் அருவனென்றும் கூறுகின்றார்களே அதனால் வருந்தோஷமென்னை ?

கேவலம் உருவனென்றால், உருவமெல்லாம் மாயாகாரியமாதலால் பரனது உருவமும் மாயாசம்பந்தம்பெறும். அன்றியும் உலகிலுள்ள உருவப்பொருள்களிலொன்றாய்ச்

சேர்ந்தழியும். கேவலம் அருவனென்றாலு மவ்வாறே மாயா காரியமாகி ஆகாயம் காலந் திக்கு மனசு முதலிய அருவப் பொருள்களோடு சேர்ந்தழியும். அன்றியு முருவமே திரு மேனியாயின் அருவமாயிருக்கு முயிர்களுக்கும், அருவமே திருமேனியாயின் உருமாயிருக்கு முயிர்களுக்கு மனுக்கிர கித்தல் கூடாதாம். அதுபற்றி மூவகை யான்மாக்களுக்கும் அவரவர்போன்று அருளும்பொருட்டு அருவம், உருவம் முதலிய தன்மையைக் கடந்துநின்ற சிவம் அருவமாகியும் உருவமாகியும் அருவுருவமாகியும் வெளிப்பட்ட துணர்க. இம்மூன்றுஞ் சேர்ந்ததே பரிபூரணமாதலால் கேவல முருவ னென்றலும் அருவனென்றலும் பரனது சர்வ வியாபகத் தைத் தூஷித்தபடியாம்.

119. அவருடைய உண்மை யிலக்கணந்தா னென்னே?

உருவமாகிய பிரம விஷ்ணு ருத்ர மகேசுர வடிவங்கள் நான்கும், அருவமாகிய சிவ சத்தி நாத விந்து வடிவங்கள் நான்கும், ரூபாரூபமாகிய சதாசிவவடிவமொன்றும் ஆக வொன்பது வடிவங்களாய் நடிக்கும் பதி சிவ மென்பதனுல் இவ்வொன்பது வடிவங்களுக்கு மதிஷ்டானமான சொரூப மொன்றுளதாயிடுதல் ஆவசியகமாம். அதனையே இம் மூன்றற்கும் அதீதமென்று கூறுவார்கள். ஆதலால் ஒரு நாமம் ஒருருவமொன்று மில்லான் என்பதே எம்பெருமா னது உண்மையிலக்கணமாம்.

120. இவ்வாறாயின் சிவபெருமானை யுள்ளவாறு அறிவதுங் காணுவதுமெப்படி?

"காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" என்றும், "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றும் எம்பெருமக்கள் கூறிய பிரமாணங்களால் சிவமே வலிந்து

தன்னை யுணர்த்துமென்றறிக. உயிர்கள் தாமே அறிய லாகாவென்பதேஅவற்றின் றுணிபாம். இதனை "இப்படி யன் இந்நிறத்த னிவ்வண்ணத்த னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே" என்ற திவ்ய சூக்தியானு முய்த்துணர்க.

121, அவனருளென்று லென்னை?

சூரியனுக்குக் கிரணம்போலவும் தீயினுக்குச்சூடுபோல வும் பூவினுக்கு மணம்போலவும் பழத்துக்கு ரசம்போலவும் பண்ணிற்கு இசைபோலவுமுள்ள பராபரனும் பானுவின் கிரணங்களாகிய கருணையாகியும் உலகமாகிய காரியத் துக்குத் துணைக்காரணமாகியுமுள்ள பராசக்தியாகிய வல்லமையாம்.

## 5. சக்தியியல்

122. சிவபெருமானுக்குச் சக்தி யாவர்?

ஸ்ரீ உமாதேவியார்.

123. ஸ்ரீ உமாதேவியார் பெண்பாலாகவே அவரிடத்திற் சிவபெருமா னுவந்தவாறென்னை?

சிவத்துக் கபின்னமாயுள்ளசக்தியே நிமித்தகாரண மாகிய அச்சிவம் பஞ்சகிருத்திய மியற்றுதற்குத் துணைக் காரணமாயிருத்தலால் பெண்பாலெனப்படும். அதனால் ஸ்ரீ உமாதேவியாரை லோகமாதாவென்பதறிக. பெருமான் பிராட்டியார்பால் உவவாதபக்ஷத்தில் பிரஜோற்பத்தி யில்லாமற்போம். அன்றியு முலகில் யாவரும் யோகிகளாய் வீடுசேர்ந்து சிருஷ்டியாதித் தொழில்களொன்றும் நடை பெறும்ற்போம். இதனால் பெருமான் பெண்பாலுவந்தது ஆன்மாக்கள் மேல்வைத்த கருணையின் விளைவென்றறிக.

சிவஞ் சத்தியோடுகூடி உத்தியோகித்துச் சங்கற்பித்தலே ஆன்மாக்களின் தோற்றத்திற்குக் காரணமாகையால் உவந்து புணர்தலெனவும் அச்சங்கற்பமில்லாமையே பிரிதலெனவும் சிவாகமங்கள் கூறுமா துணர்க.

124. ஸ்ரீ உமாதேவியாருடைய வுற்பத்தி யெவ்வாறு?

ஒருகாலத்துப் பிரமுன் சிருஷ்டித்தொழிலைச் செய்யக் கருதி முதல் சநகன், சநற்குமாரன், சநாதரன், சநந்தரன் என்னும் நால்வரைப்பெற அந்நால்வரும் நல்ல தவயோகிகளாஞர்கள், பின்னர் பிரமன், படைத்தற்ருெழிலும் விஷ்ணு காத்தற்ருெழிலும் செய்யக்கூடாமை பற்றி இவ்வறுவரும் கயிலையங்கிரிக்குவந்து சிவபெருமான் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து பணிந்துக்குறையிரந்து நிற்க அவர்களைச் சிவபெருமான் வீக்ஷித்தனர். அவ்வளவிலேயே அவர்கள் நீறுபடச் சிவபெருமான் தமது வாமபாகத்தைச் சிறிதுநோக்கிஞர். உடனே ஸ்ரீ உமாதேவியார் தோன்றியருளிஞர். அவரை எம்பெருமான் அங்கீகரித்தனர். அதனுல் முன்பு நீருயொழிந்த பிரமன், விஷ்ணு, முனிவர் நால்வர் ஆகிய அறுவரும் மீட்டும் படைக்கப்பட்டார்கள். அதுமூலமாக ஏனைய சிருஷ்டிகள் நடைபெற்றன.

125. ஸ்ரீஉமாதேவியாரைத் தக்ஷன்புத்திரி யென்பதற்குக் காரணம் என்னை ?

ஒருகாலத்திலே சிவபெருமானை உமையவள் நோக்கி உருவமொன்று மில்லாத தேவரீருக்குப் பிரம, விஷ்ணு, ருத்ர, மகேசுவர, சதாசிவ ரூபங்களும் இன்னும் பல உருவங்களும் வந்தவாறு என்னையென, சிவபெருமான் அவ்வுருவமெல்லாம் நமது அருளாகிய உன்னுருவேயாமென்றனர். அவ்வளவிலே உமாதேவியார் சற்று மகிழ,

சிவபெருமான் ஏதோ தேவியார் விகற்பமெய்தினரென்று நினைத்து இனி உன்னை விட்டுப் பிரிந்து வேறாக நின்று உலகினை யியற்றப் போகிறோமென்று சொல்லி அவ்வாறே பிரிந்தருளினார். நீங்கவே ஆன்மகோடிக ளனைத்தும் செயலற்றுச் சடமாகிச் சூத்திரப்பாவையை யாட்டுவிப்பான் செயலில்வழிப் பாவைகள் நிலைகுலைந்து வீழ்வதுபோல அருணுடகம் பரமனிடத்து அக்காலமின்மையால் சிருஷ்டியாதித் தொழில்கள் நடைபெறவில்லை. இதனைக் கண்ட உமாதேவியார் சிவபெருமானைத் தொழுது, தாம் செய்தது அபசாரமென்று வேண்டிக்கொள்ள சிவபெருமான் மீட்டும் அவரைக்கூடி மகிழ்ந்தனர். அப்போது முன்போல உலகம் நடைபெற்றது. இவ்வளவு காலமும் பரமேசுவரனுக்கு ஒருமாத்திரைப் பொழுதாயிருப்பினும் அநேக யுகங்கள் உலகம் இருண்மூடியிருந்தன. இவ்வபசாரத்துக்காகச் சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி 'நீ உன்னை வியந்ததனால் நாம் முனிந்து உன்பொருட்டு உயிர்களினது வுணர்ச்சியைநீக்கிப்பின்பு அவர்களுக்கு உணர்வுதந்தோம், அதனால் வந்த குற்றம் உன்னைவிட்டு நீங்கும்படியாகக் காளிந்தி நதியினிடத்தே ஒரு வலம்புரிச் சங்காய்ச் சமைந்து கிடக்கக் கடவை; பிரமபுத்திரனாகிய தக்ஷன் உன்னை யடுத்து வந்து எடுத்தலும் ஒரு குழந்தையுருவாகி அவனுக்கு மகளாக வளர்ந்திடுவாய்; உனக்கு ஐந்தாவது வயசு ஆகுகையில் நம்மைநினைந்து அரிய தவங்களைச்செய்வாய்; அக்காலத்தில் உன்னை யாம் வந்து திருமணஞ் செய்வோம்' என்று கூறி அவ்வாறே திருவருள்புரிந்தனர். இவ்வாறு வைதிக நூல்களெல்லாங் கூறுகின்றன.

126. இனி அவ்வம்மையாரைப் பருவதராஜன் குமாரத்தி என்பதற்குக் காரணமென்னை?

உமாதேவியார் தக்கனிடத்தில் வளர்ந்ததும் தாக்ஷாயணி என்னும் பெயர் தாங்கியதுமாகிய குறைவை நிவிர்த்தி செய்யக் கருதித் தமது தாக்ஷாயணி கோலத்தை யொழித்துக்கொள்ளச் சிவபெருமானைப் பிரார்த்தித்தனர். அதையுவந்து சிவபெருமான் அம்மையைநோக்கி, 'மலையரசன், நீ புத்திரியாக வரவேண்டித் தவங்கிடக்கின்ருன். அவனுக்கு நாமவ்வாறு கைகூடும் என்று வரம் பாலித்திருக்கின்ருேம். ஆகையால் அவனுக்கு நீ புத்திரியாகச் சென்று வளரக்கடவாய்' என்று அருள் செய்தனர். அவ்வனுக்கிரக வார்த்தையைக்கேட்டு அம்மையார் இமயவரைச் சாரலில் ஓர் தடாகக் கரையின்கண்ணே தவஞ் செய்துகொண்டிருந்த பர்வதராஜனுக்கெதிரில் ஒரு தாமரையின்மீது பசுங்குழவியாய்த் தோன்றித் தரிசனந்தந்தருளினர். உடனே பர்வதராஜனெடுத்து வளர்த்துப் பார்வதியாரென்னும் பெயரிட்டு மகிழ்ந்தான். இந்தப் பார்வதி தேவியாரை ஸ்ரீ சிவபெருமான் திருக்கலியாணஞ் செய்து கொண்டு உயிர்களுக்குப் போகத்தைக் கொடுத்தருளினர். இந்தத் திருக்கல்யாண வைபவம் எல்லாப் புராணங்களினுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது,

127. பராசத்தியாராகிய பார்வதியாரைத் தொழுது தோத்திரஞ்செய்து பேறுபெற்ற அடியார்கள் யாவர்?

மதுரை மீனுக்ஷியம்மை சந்நிதியில் ஒரு வித்தியாதர ஸ்திரீ அன்புடன் யாழ்வாசித்துத் தோத்திரஞ் செய்து மீனுக்ஷியம்மையே தடாதகையென்னும் பெயரோடு தனக்குப் புத்திரியாய் வரும்படி பேறுபெற்ருள்.

128. மீனுக்ஷியம்மையார் எப்படி புத்திரியா யவதரித்தனர்?

அந்த வித்தியாதர ஸ்திரீயானவள் ஒரு ராஜஸ்திரீ யாகப் பிறந்து காஞ்சனமாலையென்னும் பெயர்கொண்டு மலயத்துவச பாண்டியன் மனைவியாய் வாழ்ந்துகொண்டிருக்கையில், புத்திரனில்லை என்பதைக் குறித்து அந்தப் பாண்டியராஜன் யாகஞ்செய்ய அதனிடத்திலிருந்து மூன்று வயது நிறைந்த பெண் குழந்தையாக ஸ்ரீ மீனாக்ஷி யம்மையார் திருவவதாரஞ் செய்தருளினர்.

129. இன்னும் யாராவது இப்படித் தொழுது பேறுபெற்றார்களா ?

ஸ்ரீ காளிதாசர், காளமேகப் புலவர் முதலியோர்கள் தொழுது பேறுபெற்றனர். கவுரியென்னுமொரு பிராமணப் பெண் தன் தகப்பன் தனக்குபதேசஞ்செய்த கவுரி மந்திரத்தையிடைவிடாமலன்புடன் சொல்லிப் பார்வதியாருடன் பரமேசுவரன் ரிஷபவாகனரூடரா யெழுந்தருளத் தானும் கயிலாசத்துக்கு அவர்களுடன் போகும்படியான பேறு பெற்றாள். கவிராச பண்டிதரென்பவர் அன்புடன்தொழுது தோத்திரஞ்செய்து சவுந்தரியலகரி பாடிப் பேறுபெற்றார். அதை இப்போது பத்தி சிரத்தையுடன் ஓதுகின்றவர்களும் இஷ்டகாமியார்த்தங்களை யடைகின்றார்கள். அபிராமிப் பட்டரென்பவர் அன்புடன் தொண்டுசெய்து அபிராமி யந்தாதி பாடிப் பார்வதியாருடைய கிருபையினாலே அமாவாசை இராத்திரியிலே சந்திரோதயமாகும்படி பேறு பெற்றார். இப்படியாக அநேகம்பேர் தொழுது தோத்திரஞ் செய்து பேறு பெற்றார்கள்.

130. ஸ்ரீ உமாதேவியாரை ஆராதிப்பதற்குரிய காலங்களெவை ?

மாதங்களில் தையும் ஆடியும், வாரங்களில் பௌம வாரமும் சுக்கிர வாரமும், திதிகளில் அஷ்டமியும் சதுர்த்தசியும், பௌர்ணிமையும், நக்ஷத்திரங்களில் உத்திரமும், எல்லா இராக்காலங்களும் உரியனவாம்.

**131.** எல்லா இரவும் உரியனவாயிருக்க நவராத்திரி விசேஷமானதற்குக் காரணமென்னை?

இரவிற்செய்யும் எல்லா பூசைகளும் பராசத்தியைச் சேருமென்று கண்ட ஏகாதசருத்ரர்கள் ஓரிரவாவது தமது பூசை சிவபெருமானுக்குச் சேரச்செய்ய வேண்டுமென்று கருதி ஸ்ரீ பராசத்தியாரை வணங்கி "எமது அன்னையே! ஓரிரவில் நாங்கள் உமது கொழுநர் மகிழுமாறு பூசிக்கிறோம். இதனை அங்கீகரித்தருளல் வேண்டும். அங்கீகரித்தருளில் ஒன்றுக்கொன்பதாக ஒன்பதிரவுகளில் நாங்கள் உம்மைப் பூசிக்கிறோம்" என்று பிரார்த்தித்தார்கள். அவ்வாறே அம்மை யிசைந்தருளினர். அதைக் கடைப்பிடித்து அவர்களொரு இரவுமுழுதும் பூசைசெய்தார்கள். அப்போது அம்மையாருஞ் சிவபூசை செய்தனர். இது சிவராத்திரி யெனவும், மேற்சொன்ன ஒன்பதுநாளும் நவராத்திரி யெனவும் பெயர்பெறும்.

**132.** ஒன்பது நாளானதற்குக் காரணமென்னை?

ஆதிபரை அயன்நாவில் சரஸ்வதியென்றும், ஸ்ரீதரன் மார்பில் லக்ஷிமியென்றும், நாதனிடத்துத் துர்க்கையென்றும் விரிந்துலகை நடைபெறச்செய்யும். ஒவ்வொரு மூர்த்தத்துக்கும் சாத்துவிகம், இராஜசம், தாமசம் என்னும் மூன்று மூர்த்தங்களுளவாதலால் ஒன்பதுநாள் சிறந்தமை காண்க.

**133.** இந்தப் பூசை ஆதியிலெவ்வாறு அனுஷ்டிக்கப்பட்டு வந்தது?

"துர்க்கைபூசை" யென்று பிரதிமையின்றி கும்ப முதலியவற்றில் ஆவாகனஞ்செய்து தேவி மந்திர ஜெப முதலியன நடந்துவந்தன. அக்காலத்துச் சர்வலோகாதி பத்தியத்துக்கும் ஈசுவராதி பத்தியத்துக்குஞ் சக்தியே இன்றியமையாததாலும் அதுவன்றியொன்றும் நடைபெறாதாதலாலும் ஸ்ரீவித்தை முதலிய மகாமந்திரங்களை ஜெபம் பண்ணி வந்தார்கள். ஆனால் ஈசுவரியும் ஒவ்வொருகாலத்து சகளீகரித்துவந்து திருவிளையாடல்கள் செய்தருளினார்.

**134.** அவ்வாறு தோன்றிய அருள்வடிவங்கள் யாவை?

மகாமாயை, மகிஷாசுரமர்த்தினி, காளி, சாமுண்டி, சண்டிகாதேவி, சாமளாதேவி, சிவதூதி முதலியனவாம்.

**135.** மகாமாயையின் வரலாறு என்னை?

மகாப்பிரளயத்துக்கப்பால் ஸ்ரீமந்நாராயணன் க்ஷீராப்தியின்கண்ணே யோகநித்திரை செய்துகொண்டிருந்த காலையில் தமது உந்திக் கமலத்தினின்றும் பிரம்மாவை யுண்டாக்கினார். அதேகாலையில் நாராயண மூர்த்தியின் ஸ்தோத்திரங்களினின்று மது கைடவர்களென்னும் அசுரரிருவர் தோன்ற, அவர்களைக்கண்டு நடுங்கிப் பிரமன் தன் பிதாவை எழுப்பும்படி யோகநித்திரைக்குக் காரணமான மகாமாயையை வேண்ட அவளவ்வாறே அரியைவிட்டகல அவரெழுந்து அவ்வசுரர்களுடனே ஆயிரந்தேவ வருஷம் போர்புரிந் தாற்றாதவராகி ஸ்ரீ பராசத்தியாரின் ஒரு பகுதியாகிய மகாமாயையை வேண்ட அவ்வசுரர்கள் மயக்கமுண்டானவர்களாகித் தங்களுடன் சமானமாய் மற்போர் செய்த முகுந்தனைமெச்சி யுனக்கு வேண்டியவரம் யாதென க்ஷீராப்திநாதனுந் தன்னாலவர்கள் மடியவேண்டுமென்று

வேண்டிக்கொண்டார். அவ்வாறே அவர்களுமிசைந்து உயிர் நீங்கினர். இதுவே மகாமாயையின் வரலாருகும்.

136. மகிஷாசுரனென்பவன் யார்? அவனை உமாதேவி ஏன் வதைத்தருளினுர்?

முற்காலத்திலே வரமுனியென்ருெரு ரிஷியிருந்தார். அவர் மகா தபோபலமுடையவராதலால் அவரைக் காண விரும்பி அகஸ்தியர் முதலான ஐம்பது முனிவர்கள் சேர்ந்து அவரது ஆசிரமத்துக்குச் செல்ல அவர் தமது தவத்தா லிறுமாந்து அங்குவந்த தபசிகளை மதியாதிருந்தார். அதுகண்ட மகா தவசிரேஷ்டர்கள் சினப்படைகொண்டு "வரமுனிவரே, நீரெம்மை மதியாதிறுமாந்து இருந்தமையால் எருமைக்கடாவாகப் பிறக்கக் கடவீர்" என்று சபிக்க அம்முனி மனந்தளர்ந்து "சுவாமி, அடியேன்செய்த பிழையைப் பொறுத் தனுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க அவர்கள் கருணைசுரந்து "முனிவரே, நீர் எருமைமுக அசுரனுய்ப் பிறந்து வானவர் தானவராதியோரை வென்று திரிலோக கண்டகனு யரசுசெய்யுங்கால் சக்திளெல்லாங் கூடி அவயவங்களா யமையத் துர்க்கை தோன்றுவள். அந்தத் தேவி உன்னை வதைத்தருளுவாள். அப்போது சாபம் நீங்கும்" என்று கட்டளையிட்டார்கள். அவருமவ்வாறே மகிஷாசுரனுய்ப் பிறந்து நீலகிரியில் மகிஷபுர நகரிலிருந்து திரிலோகாதிபத்தியஞ் செய்து வருகையில் ஸ்ரீ பரமேசுவரி துர்க்கை வடிவங்கொண்டு அம்மகிஷனை வதைத்துத் தேவர்களுக்கு இதஞ்செய்தனர்.

137. காளிமுதலானவர்களின் வரலாறு என்னை?

ஸ்ரீஉமாதேவியார் தக்ஷன் புத்ரியாகவே அவன் பெருமானுக்குத் தீங்கிழைத்து அபராதியாயினமையால் பிராட்டியார் தன் உருவத்தை மாற்றிக்கொள்ள விரும்பித் தவம்

இழைத்த காலையில் தேவர்கள் சும்பன் நிசும்பன் என்னும் அசுரர்களுக்குப் பயந்து பூவுலகத்திலேவந்து அநேககாலம் சஞ்சரித்துக்கொண்டிருந்து பரமேசுவரியை வேதங்களினுலே தோத்திரஞ்செய்துவந்தார்கள். அவர்களுக்குமுன் ஈசுவரி பிரசன்னமாகி உங்களுக்கு வேண்டும் வரம் யாது என, தேவர்கள் "அவ் அசுரர்கள் இருவரையும் வதைத்துத் தேவலோகத்தை எங்களுக்கு மீண்டும் அளித்து ரக்ஷிக்கவேண்டும் அன்னையே" என, நாராயணியும் அவ்வாறே அபயப்பிரதானங்கொடுத்து முன்போலத் தவஞ்செய்துகொண்டிருந்தார். சும்பன் நிசும்பன் என்னும் அசுரர்களின் சேனுவீரனுன தூமக்கண்ணன் அநேக சேனைகளுடன் தேவியாரை அணுக ஸ்ரீஜகன்மாதா கோபாவேசங்கொண்டு தன் திருமேனி எங்கும் சேனைகள் உண்டாமாறு செய்து அசுரர்களின் சேனைகளை அழித்து ஹூங்காரத்தினுல் தூமக்கண்ணனை மாய்த்தனர். பின்பு சண்டன் முண்டன் என்னும் வீரர்கள் அநேகங்கோடி சேனைகளுடன் அம்மையாரைவந்து அணுக, தாக்ஷாயணி சினந்து தன் தேகத்தைப் போர்த்திருந்த கருமையான சரமத்தைக் கழற்றி எறிய, அதுவே காளியாய் அவ் இரண்டு அசுரர்களையும் சிரச்சேதனஞ்செய்து அச்சிரசுகளை ஸ்ரீபார்வதியாருக்குப் பாதகாணிக்கையாய்வைத்தது. அந்தச் சக்தியையே தேவியார் சாமுண்டி என அழைத்தனர். பிறகு சும்பன் நிசும்பன் என்ற இருவர்களின் சகோதரியான குரோதியின் குமாரன் ரக்தபீஜன் வர, பிராமி, வைணவி, மாகேசுவரி, கௌமாரி, வராகி, இந்திரை, நாரசிம்மி என்னும் சப்தமாதர்களும் அவன் சேனைகளை அழித்து அவன்தலையை அறுக்க அவன் உடலிலிருந்து விழும் ரத்தத்துளி ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு அசுரன் உண்டாகிச் சமர்செய்ய, அதைக்கண்டு அஞ்சி ஜகதீசுவரியினிடம்

அறிவிக்க, அவர் காளியை அனுப்ப அவள், அவ் அசுர னுடலிற் சிந்தின உதிரத்தில் உதித்து அவனைப்போலவே யுத்தஞ்செய்யும் அசுரர்கள் அனைவரையும் கொன்று உதிர மாமிசம் கீழே விழாது தன் கபாலத்தில் ஏந்தி ரத்தபீஜனை யும் கொன்று தேவர்களுக்குச் சுகத்தைக் கொடுத்தனள். பின் நிசும்பன் சேனைகளுடன்வர அச்சேனைகளைச் சப்த மாதர்களும் நிசும்பனைத்தாமும் முடித்துச் சும்பனையும் அவ்வாறே தொலைத்தனர். தேவியார் தன் கருநிறச்சரமத் தைக் கழற்றி எறிந்து, *காளியை உண்டாக்கின பின் னரே கௌரி எனப் பெயர்பெற்றனர். இவ் அசுரர்களைக் கொன்ற அவசரம் சண்டிகை எனவும், போர்முகத்துச் சிவனைத் தூதாகக்கொண்டமையால் சிவதூதி எனவும் தேவியார் பெயர்பெற்றனர். தேவியாருக்குப் பெயர் தண்டிணி, வராகி, மந்திரிணி, சாமளாதேவி.

138. பண்டாசுரன் வரலாறு என்னை?

இவனும் ஏனைய அசுரர்களும் மகிஷாசுரன் சகோதரர் கள். இவன் மகாமந்திரசக்தி உடையவன். ஈசுவரியி னுடன் மந்திர தந்திர யந்திர சண்டைகள்செய்து இறுதி யில் "லோகாம்பிகை! அடியேன் உன்முன்னர் என் வித்தைகளைக் காட்டினேன் என்று கோபியாதே, என்னை ரக்ஷித்தருளுவாய்" என்று சொல்லி ஈசுவரியினது பாதார விந்தங்களிற் சரணாகதி அடைந்தனன்.

139. மேற்கூறிய மந்திர தந்திர யந்திர சண்டைகளாவன என்னை?

பண்டாசுரன் மலைகளை உண்டாக்கினான். ஈசுவரி வச்சிராயுதத்தை உண்டாக்கினாள். பின்பு நரசிங்கத்தை

* காளி – கருநிறம் உடையவள்.

உண்டுபண்ணினன். அம்மை சரபேசுவரரைத் தோன்றச் செய்தனள். ஒருவருக்கு ஒருவர் விரோதமான யந்திரங்களை உண்டுபண்ணினர்கள். தந்திரமாய் மறைந்தும் வேறு உருக்கள்கொண்டும் அசுரன் சண்டைசெய்தான். இவ்வாறு செய்யும் மந்திர சண்டையில் சமர்த்தன் அந்தப் பண்டாசுரன். தேவி ஒருவர் தவிர வேறு ஒருவரும் அவன் முன்னின்று போராடவல்லரோ? இவ்வாறு போராடி முடிவில் தேவியார் வென்றருளினர்.

**140.** நவராத்திரி பூஜையில் பிரதிமை முதலிய வைத்துப் பூஜிப்பது எப்போது உண்டாயது?

மேதஸ் மகரிஷியை அடைந்த சுரதன் என்னும் இராஜன் தன்னைவிட்டு நீங்கிய இராஜாதிபத்தியம் மீட்டுங் கிடைக்க இவ்விதமாய்ப் பூஜைசெய்தார். அதுமுதல் பிரதிமை வைத்துப் பூஜைசெய்வது வழக்கம்.

**141.** அவர் பூஜைசெய்தது புரட்டாசிமாதத்தில்தானே?

அன்று; சக்தி உலகினை வளர்ப்பது தெற்றென விளங்கும் வசந்தகாலத்தில் பூஜைசெய்தனர். அதனையே இப்போது வசந்தத் திருவிழா எனக் கூறுவது.

**142.** பின் எவ்வாறு புரட்டாசிமாதத்தில் நவராத்திரி உற்சவம் கொண்டாடப்படுகின்றது?

ஸ்ரீசக்கரவர்த்தி திருமகனர் இராவண சம்ஹாரத்தின் பொருட்டு அகஸ்தியபகவான் வாயிலாக ஸ்ரீ பஞ்சதசாக்ஷரி உபதேசிக்கப்பெற்று, புரட்டாசிமாதம் சுக்கிலபக்ஷப் பிரதமை முதல் நவமி ஈருக ஒன்பதுநாளும் ஸ்ரீ பராசக்தியாரைப் பூஜைசெய்தனர். இதுமுதல் புரட்டாசிமாதத்தில் நவராத்திரி கொண்டாடப்பெற்று வருகின்றது.

143. பின்னும் யார் இந்தவிதமாக நவராத்திரி பூஜை செய்தனர்?

ஸ்ரீ கண்ணபிரான் பிருந்தாவனத்தில் இவ்விதமாகப் பூஜை செய்தனர்.

144. ஸ்ரீ பராசக்தியார், காளி, துர்க்கை முதலிய வடிவங்களில் பேதம் உண்டோ?

இல்லை. ஸ்ரீ உமாதேவியாரே கோபவேளையில் காளி என்றும், போர்முகத்தில் துர்க்கை என்றும், ஆன்மாக்களுக்கு ஐசுவரிய போக போக்கியங்களைக் கொடுக்கும்போது பவானி என்றும், புருஷரூபமானகாலையில் புருஷோத்தமன் என்றும் திருநாமம் பெறுவர்.

145. நவராத்திரிகாலம் தேவி தவஞ்செய்தகாலம் என்பது என்னை?

அம்மையார் பஞ்சாக்கினிமத்தியிலிருந்து ஸ்ரீ சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து இடப்பாகம் பெற்ற காலம் நவராத்திரி என்று கூறுவதும் உண்டு.

146. பிராட்டியார் தவம்புரியக் காரணம் என்னை?

பிராட்டியார் இமயபர்வதராஜ புத்திரியாய் அவதரித்துக் காளகண்டமூர்த்தியைத் திருமணம் புரிந்த பின்னர் ஒருநாள் லீலாமாத்திரமாய் ஸ்ரீ பரமேசுவரனை நோக்கிச் சந்திரசூரியர்கள் யார் என்று வினவ, அவை எமது விழிகள் என்று பெருமான் திருவுளம்பற்ற, அம்மையார் நாயகனிடத்துள்ள நயப்பால் ஐயன் இருகண்களையும் தமது அருமைத் திருக்கரங்களால் மூட, சர்வலோகங்களும் இருளாவரித்துச் சராசரப்பொருள்களனைத்தும் வருந்தித்

தடுமாறின; பூதங்கள் நிலைகுலைந்தன; புவனங்கள் நிலை குலைந்தன; காலம் நிலைகுலைந்தது; பிர்ம்மாதி பீபிலிகாந்த முள்ள யாவத் உயிர்களும் நிலைதடுமாறின; சூரிய சந்திரர் கள் ஒளி மழுங்கி இருட்பிழம்பாயினர்கள்; சிருட்டியாதித் தொழில்கள் நடையற்றுத் தடையுற்றன; வாயுசலிக்க வில்லை; அக்கினி தண்ணெனநின்றது; இல்லறம் துறவறம் இரண்டும் தவறுதல் அடைந்தன. அப்போது தேவர்கள் ஸ்ரீ சர்வலோகநாயகனுகியும், சம்புசப்தவாச்சியனுகியும் சாம்பசிவசங்கர திரிநேத்திரதார மகரகுண்டல திரிசூல மான்மழு சதுர்ப்புஜ சர்வதேவதா சிரமாலாதர சங்கரி சாம்பவி ஸ்ரீ பார்வதிதேவி சகித க்ஷீராப்தி நித்திரா ரிஷப வாகனூட சர்வாதாரமூல சர்வதத்துவாம்ச ரகசியா பரனு லங்கிருத ஸ்ரீ பஞ்சாக்ஷரரூப பஞ்சகிருத்திய சதாநந்த நிர்த்தனகுஞ்சித பாதனுகியும் விளங்கும் அண்ணலாரை அடிபணிந்து தங்கள் நிலைதடுமாற்றத்தைத் தெரிவிக்க, ஸ்ரீ கங்காதரமூர்த்தி அவர்களை நோக்கி 'அஞ்சாதீர்கள்' என்று அபயப்பிரதானங்கொடுத்துத் தமது லலாட நேத் திரத்தைச் சற்றுத் திறந்தருள அநேககோடி சூரியன் உதித்தாலன்ன ஒளிவீசச் சராசரங்கள் எல்லாம் இருள் நீங்கிக் களிபேருவகை அடைந்தன.

**147.** அப்போது பிராட்டியார் செய்தது என்னை?

அம்மையார் எமது அப்பனைப் பணிந்து "சுவாமி! சோமசூரியர்களுக்கு ஒளிகொடுக்கும் தமது நேத்திரத்தை மூடி உலகுயிர்களை வருத்தியதை மன்னித்தருளுக; நான் தவம் செய்யவேண்டும்; அதற்காக ஒரு க்ஷேத்திரம் குறிப் பிட்டருளுதி" என்று பிரார்த்திக்க, ஜகதீசன் "பெண்ணே! நீ தவம் செய்யப்புகில் உலககிருத்தியம் நடைபெருது என்பது பலகாலும் கண்டாயாயினும், உன் கருத்து

இதுவேல் காஞ்சிமாநகரம் சென்று தவம்புரிவை'' என்று விடைகொடுத்து அனுப்பினுர். அன்னேயார் அக்காஞ்சிமா நகருற்று எண்ணுன்கு அறங்களும் வளர்த்து ஸ்ரீ ஏகாம்பர நாதனே நோக்கித் தவம்புரிய, அவர் பிரசன்னமாகி "நங்காய்! உனக்கு வேண்டும் வரம் யாது'' என்று வினவ, அறம்வளர்த்த தாயும் "பிராணநாதா! உன்னேவிட்டுப் பிரிந்திருந்த காரணம் உன்னுடன் ஒரு கூருயிராததே ஆதலால் உன் இடப்பாகம் தந்தருள்'' என, சிவபெருமான் "நன்று. நீ அருணகிரி அடைந்து தவம்புரிவை; ஆண்டு உனக்கு இடப்பாகம் தருவோம்'' என்று அருள்செய்து அந்தர்த்தானமாயினுர். அம்மையார் அவ்வாறே அருணேயை அடைந்து தேவேந்திரனுக்கு ஆயிரம் கண்கள் அளித் தருளின ஸ்ரீ கௌதமராச்சிரமம் சென்று மேற்கூறிய வாறு தவம் செய்ய, அக்காலத்து பிரம்மாதி தேவர்கள் அம்மையை வணங்கி மகிஷாசுரனே வதஞ்செய்ய வேண்டிக் கொண்டார்கள். அம்மையார் அதற்கு இசைந்து முன் கூறியவாறு தன்னினின்றும் வேருகாத துர்க்கையைக் கொண்டு மகிஷாசுர மர்த்தனம் செய்து உலகத்துக்கு க்ஷேமம் உண்டாகச்செய்தனர். உமாதேவியாரும் ஈசன் இடப்பாகம் பெற்று வீற்றிருந்தருளினர். மகிஷனேக் கொன்று உலகத்தைக்காத்த காலமாதலாலும், அம்மையார் இடப்பாகம்பெற்ற காலமாதலாலும் நவராத்திரி விசேட மாகியது.

148. ஒன்பது நாட்களிலும் தேவியாரை எந்த உருவமாகப் பாவிப்பது? ஆராதிப்பது?

அபின்னபரை சகளீகரித்தவளவில் பிரதமை முதல் மூன்றுநாளும் தமோகுண மயமான கருநிறங்கொண்ட துர்க்காதேவி சொரூபமாகவும், சதுர்த்தி முதல் மூன்று

நாளும் ரஜோகுணமயமான செந்நிறம் சிறந்த இலக்ஷ்மி வடிவாகவும், ஸப்தமி முதல் மூன்றுநாளும் சத்துவகுண மயமான வெண்ணிறம் உள்ள சரஸ்வதி உருவாகவும் பாவித்துப் பிம்பாதிகளில் ஆவாகனஞ்செய்து பூஜிக்க வேண்டியது.

**149.** இங்ஙனம் ஆராதிப்பதன் பலன் என்னை ?

இஷ்ட காமியார்த்தங்களைப் பெற்று இறுதியில் முக்குணங்கடந்த நிர்க்குணக்கடலாகிய முதற்பொருளை அடைந்து சிவானந்தப் பெரும்பேற்றை அனுபவிப்பார்கள். இக்கருத்துப்பற்றியே எல்லாக் கோயில்களிலும் அரண் மனைகளிலும் வீடுகளிலும் கொலு முதலியன வைத்துச் சகல சாம்பிராஜ்யத்தையும் கொடுப்பவள் ஈசுவரி என்று கொண்டாடுவது.

**150.** பத்தாவதுநாள் விஜயதசமியின் வரலாறு என்னை ?

விஜயை என்னும் சக்திக்குரிய தினம் என்பதாகக் கூறுவர். அவள் யாவத்காரியத்துக்கும் ஜயம் விளைவிக்கும் சக்தியானதால் அன்றைய தினத்தில் அவளை ஆராதித்து அவரவர்களுக்குரிய ஆயுதமோ, வித்தையோ இவற்றிற் பயிற்சிசெய்தால் அவ்வித்தைகளிற் பூரணசக்தி உண்டா கிச் சர்வமங்களமும் உண்டாகும் என்பது அறிக. அன்றி இன்றே பண்டாசுரவதம் எனவும் கூறுவர்.

**151.** விஜயன் சரிதத்துக்கும் இத்தசமிக்கும் சம்பந்தம் உண்டோ ?

உண்டு, இத்தசமி, பஞ்சபாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் சென்ற மறுநாளாதலால், அன்று வன்னி விருக்ஷத் தில் மறைத்துவைத்த தங்கள் காண்டீப முதலிய ஆயுதங் களை வெளியிலெடுத்து ஆயுதபூஜை செய்த தினமாம்.

**152.** இவ்விஷயங்களுக்குப் பிரமாணம் என்னை ?

தேவிபாகவதம், மார்க்கண்டேயபுராணம், அருணை மான்மியம், தேவிமகாத்மியம், இலளிதம் முதலியனவாம்.

## 6. சிவகுமாரவியல்

**153.** இப்படியாக அடியார்களுக்குக் கிருபைசெய்யும் பரம சிவனுக்கும் பார்வதியாருக்கும் புத்திரர்களிருக்கிறார்களா ?

விநாயகமூர்த்தி என்றும், சுப்பிரமணிய சுவாமி என்றும் இரண்டு புத்திரர்கள் இருக்கிறார்கள். அல்லாமல் வீரபத்திரரும், வைரவரும் புத்திரர்கள் என்று சொல்லப் படுவார்கள். இவர்கள் சிவசொரூபமேயன்றி அந்நியமன்று.

### விநாயகர் சரித்திரம்

**154.** விநாயகமூர்த்தி அவதரித்த காரணம் என்னை ?

கயமுகாசுரன் என்னும் அசுரனைச் சங்கரிக்கும் பொருட்டுத் திருவவதாரமாயினார்.

**155.** விநாயகர் யானைமுகத்துடன் திருவவதாரஞ் செய்த காரணம் என்னை ?

கயமுகாசுரன் தேவர்களாலும், பூதங்களாலும், மனிதர்களாலும், மிருகங்களாலும் இறவாவரம் பெற்றிருந்ததால் பலவுருவமும் கலந்த திருமேனிகொண்டு அவதரித்தருளினார்.

**156.** கயமுகாசுரன் வரலாறு என்னை?

மாகதனென்னும் ஒரு முனிவனுக்கு விபுதையென்னும் ராக்ஷஸ ஸ்திரீ வயிற்றில் யானைமுகத்துடன் புத்திரனாகப் பிறந்து, பரமசிவனை நோக்கித் தவஞ்செய்து தேவர்களெல்லாரும் தன்னேவல் கேட்கவும், தான் தேவர் முதலானவர்களாலும் எவ்வித ஆயுதங்களினாலும் இறவாமலிருக்கவும் வரம்பெற்றிருந்தான்.

**157.** விநாயகர் எவ்வாறு திருவவதாரமாயினர்?

தேவர்கள் கயமுகாசுரன் உண்டுபண்ணும் துன்பத்தால் வருந்திப் பரமேசுவரனிடத்துக்குப்போய் முறையிட்டார்கள். அவர்களை இரட்சிக்கவேண்டும் என்கிற இரக்கத்தினாலே பரமேசுவரர் பார்வதியாருடன் கைலாசகிரிச் சாரலில் ஒரு சோலையின் மத்தியிலிருக்கும் சித்திர மண்டபத்திற்கு எழுந்தருள, அதில் எழுதியிருந்த சித்திரங்களில் ஒரு சித்திரமாயிருந்த சிவசத்தி பிரணவங்கள் பரமேசுவரருடைய அனுகிரகத்தினால் ஆண்யானை வடிவும் பெண்யானை வடிவுமாய்ச்சேர அதனிடமாக யானை முகத்துடன் திருவவதாரமாயினர்.

**158.** கயமுகாசுரனை எவ்வாறு வதைத்தார்?

விநாயகமூர்த்தியானவர் பிரணவசொரூபமாய்த் திருவவதாரஞ்செய்து சிவகணங்களுக்குத் தலைவராய்க் கணபதி என்னும் பெயருடன் கயிலாயத்தில் வீற்றிருக்கையில் கயமுகாசுரனால் வருந்திய தேவர்கள் யாவரும் போய்ப் பணிந்து முறையிட்டார்கள். விநாயகமூர்த்தி திருவுளம் இரங்கிக் கணங்கள் சூழ்ந்து வரும்படிச்சென்று கயமுகாசுரனுடன் போர்செய்து அவன் எவ்வகைப்பட்ட ஆயுதங்

களாலும் இறவாமலிருக்கும்படிப் பெற்றுக்கொண்ட வரத்தையுணர்ந்து தமது திருமுகத்தில் வலப்பக்கத்திலிருக்கும் ஒரு கொம்பையொடித்து எறிந்து வதைத்தார். இதனுலவருக்கு ஒற்றைக் கொம்பரென்று பெயராயது.

159. அவன் பின்பு எப்படியானுன்?

அவன் வரம்பெற்றவனுதலால் அந்தச் சரீரமாறிப் பெருச்சாளி வடிவங்கொண்டு போர்செய்ய வந்தான். அதைக்கண்ட விநாயகர் அதன்மேல் ஆரோகணித்துக் கொண்டார். இந்தக் காரணத்திஞல் அவருக்கு மூஷிக வாகனரென்று பெயராயது.

160. விநாயகருக்கு ஆயுதங்கள் எவை?

அங்குச பாசங்களாம். இவ்விரண்டில் அங்குசம் வலக்கரத்திலும் பாசம் இடக்கரத்திலும் இருக்கும்.

161. மற்றெருரு வலக்கரத்தில் என்ன வைத்திருக்கிருர்?

தமது கொம்பிலொடித்த பாகத்தை வைத்திருக்கிருர்.

162. மற்றெருரு இடக்கரத்தில் என்ன வைத்திருக்கிருர்?

மோதகம் வைத்திருக்கிருர்.

163. விநாயகரைத் தரிசிக்கிறவர்கள் தலையிற் குட்டிக் கொண்டு தோப்பணம் போடும்படியான காரணம் என்ன?

கயமுகாசுரன் அதிகாரஞ்செலுத்திக் கொண்டிருக்கும்போது தேவர்கள் அவனிடத்துக்கு வருகையில் அப்படிச் செய்துகொண்டிருந்தார்கள். அவனை விநாயகர் வதைத்த பின்பு தேவர்கள் விநாயகரைப் பணிந்து குட்டிக்கொண்டு

தோப்பணம் போட்டு இனி இப்படியே அடியேங்கள் வந்தனையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

**164.** இன்னம் யாராவது இப்படித் தொழுது வரம்பெற்ருர்களா?

இராவணனும், அகஸ்திய முனிவரும் அவ்வாறு தொழுது வரம்பெற்ருர்கள்.

**165.** இராவணன் தொழுததற்குக் காரணம் என்னை?

இராவணன் ஸ்ரீ கயிலாயகிரியில் தவஞ்செய்து இலங்கைப் பட்டணம் அழியாமலிருக்கும் பொருட்டு, பரமேசுவரர் ஒரு சிவலிங்கம் கொடுத்தருளப் பெற்றுக்கொண்டு வருவதைத் தேவர்கள் அறிந்து அதைத் தடுக்கவேண்டும் என்று விக்கினேசுவரரைத் துதித்தார்கள். அவர் இராவணனுக்கு நீரதிகரிக்கும்படி வருணனையேவித் தாம் ஒரு சிறு பிராமணப்பிள்ளைபோல இராவணன் எதிரில் போனுர். இராவணன் பிராமணப்பிள்ளையாய் வந்தவரைக்கண்ட மாத்திரத்திலே அவருக்குபசாரஞ் சொல்லி நான் ஜலஸ்பரிசத்துக்குப் போய்வருகிறவரைக்கும் இந்தச் சிவலிங்கத்தைப் பூமியில் வைக்காமல் கையிலேதானே வைத்துக்கொண்டிரு என்று சொன்னுன். அதற்கு அவர் நான் சிறுபிள்ளையானபடியினுலே இந்தச் சிவலிங்கத்தை நெடுநேரந்தாங்கிக்கொண்டிருக்கும் வல்லமையில்லாதவனுயிருக்கிறேன். ஆதலால் மூன்றுதரம் அழைப்பேன்; அதற்குள் வராவிட்டால் சிவலிங்கத்தைக் கீழேவைத்துவிடுவேன் என்று சொன்னுர். இராவணன் சம்மதித்துச் சிவலிங்கத்தை அந்தப் பிராமணப்பிள்ளை கையில் கொடுத்து ஜலஸ்பரிசத்துக்குப்போனுன். போனவுடனே

மூன்றுதரம் அழைத்து அவன் வராமையினாலே சிவலிங்கத்தைத் தரையிலே வைத்துவிட்டார்.

166. இராவணன் என்னசெய்தான்?

ஜலஸ்பரிசஞ் செய்துவந்து சிவலிங்கம் தரையில் வைக்கப்பட்டிருப்பதை நோக்கி விசனமுற்றவனாய்த் தனது இருபது கைகளையுங்கொண்டு தூக்கினான். அந்தச் சிவலிங்கம் தூக்கப்படாமல் பசுவின் காதுபோலக் குழைந்துவிட்டது.

167. இப்போது அந்த சிவலிங்கத்துக்குப் பேரென்ன?

இராவணனால் தூக்கப்படாமல் மகா பலமுள்ளதாயிருந்தபடியினாலே அந்தச் சிவலிங்கத்துக்கு மகாபலலிங்கம் என்று பெயர். அந்தச் சிவலிங்கம் பசுவின் காதுபோலக் குழைந்தபடியினாலே அந்த ஸ்தலத்துக்குக் *கோகர்னம் என்றுபெயர்.

168. பின்பு இராவணன் செய்ததென்ன?

அவன் அதிக கோபங்கொண்டு பிராமணப்பிள்ளை வடிவமாய் நிற்கிற விநாயகமூர்த்தியினது சிரசில் குட்டினான்.

169. அதற்கு அவர் என்னசெய்தார்?

இராவணன் குட்டவே மிகுந்த கோபத்துடன் தம்முடைய சொரூபங்கொண்டு துதிக்கையினாலே இராவணனைத் தூக்கியெறிந்து பந்தாடினார்.

* கோ - பசு. கர்னம் - காது.

170. அவன் என்ன செய்தான்?

அவன் அதிகபராக்கிரமசாலியானதாலும் ஈசுவரவரம் பெற்றிருப்பவனுதலாலும் இறவாதவனுய் மிகுந்த வருத்தப் பட்டு 'என் ஐயனே! தெரியாமையால் அடியேன்செய்த பிழைபொறுத்து இரட்சிக்கவேண்டும்' என்று தோத்திரஞ் செய்தான். அதனுலே விநாயகமூர்த்தி கிருபைகூர்ந்து, "நீ நம்மைக் குட்டினபடியினுலே உன் இருபது கைகளாலும் குட்டிக்கொள்" என்று சொல்ல அப்படியே குட்டிக் கொண்டு விநாயகரைத் தோத்திரஞ்செய்து விடைபெற் றுக்கொண்டு இலங்கைபோய்ச் சேர்ந்தான்.

171. அகஸ்தியமுனிவர் தொழுததற்குக் காரணம் என்னே?

தேவேந்திரன் சூரனுக்குப்பயந்து சொர்க்கலோகத்தை விட்டுச் சீகாழியில்வந்து, பரமசிவனைப் பூசிப்பதற்காக ஒரு நந்தனவனம் வைத்து, அது மழையில்லாமல் உலர்ந்து போகவே அவன் மனவருத்தமுற்றிருக்கையில் "நதிப்புனல் வந்து பாயுமாகுல் நந்தனவனம் தழைத்துப் பூசைக்கு வேண்டிய மலர்களைத் தரும்" என்று சிவன் கிருபை யினுலே அசரீரிவாக்கு உண்டாகியது.

172. நதிப்புனல் எவ்வண்ணம் வந்து பாய்ந்தது?

தேவேந்திரன் சிவகாருண்யத்தினுலுண்டான அசரீரி வாக்கைக் கேட்டுச் சந்தோஷமுற்றிருக்கையில் நாரத முனிவர் வந்து நதிவருவதற்கு ஒரு உபாயம் சொன்னுர்.

173. என்ன உபாயஞ் சொன்னுர்?

தேவேந்திர மகாராஜனே! கைலாசகிரியில் அகத்திய முனிவர் வந்திருக்கிருர். அவர் கமண்டலத்தில் காவிரிநதி யிருக்கின்றது. நீர் விநாயகமூர்த்தியைப் பிரார்த்தித்தால்

அந்த நதிவந்து பாயுமென்று சொன்ஞர். அவர் சொன்ன படி தேவேந்திரன் விநாயகமூர்த்தியைப் பிரார்த்திக்க, விநாயகர் காக்கை வடிவங்கொண்டு அகஸ்தியர் கமண்டலத்தின்மேல் உட்கார்ந்து கவிழ்த்துவிட அந்த நதிப்புனல் தேவேந்திரன் நந்தனவனத்தில்வந்து பாய்ந்தது.

174. அதற்குமேல் அகஸ்தியர் என்னசெய்தார்?

காக்கை வடிவங்கொண்டு கமண்டலத்தைக் கவிழ்த்து விட்ட விநாயகர் ஒரு பிராமணப்பிள்ளை வடிவங்கொண்டு தமக்கெதிரில் வருகையில் தம்முடைய கையினுல் அந்தப் பிராமணப்பிள்ளையினது தலையில் குட்டப்போஞர். விநாயகமூர்த்தியாகிய குழந்தையோ அம்முனிவர்க்கு எட்டாமல் வளைய வளைய ஓடி இளைக்கச்செய்து பின்பு தம்முடைய சொரூபத்துடனே நின்ருர். அதைக்கண்ட முனிவர் பயந்து சாஷ்டாங்கமாய்ச் சேவித்து விநாயகரைத் தோத்திரஞ்செய்து அவர் கட்டளையின்படி குட்டிக்கொண்டு வேண்டிய வரங்களையும்பெற்று பொதிகைமலைக்குப் போய் விட்டார். நந்தனவனம் தழைத்துப் பூசைக்கு வேண்டிய மலர்களைத்தரத் தேவேந்திரன் பரமசிவனைப் பூசித்துத் தன்னுடைய செல்வத்தைப் பெற்றுக்கொண்டான்.

175. பரமசிவனுக்குப் பார்வதியென்கிற சக்தி இருப்பது போல விநாயகருக்குச் சக்தி உண்டா?

உண்டு. சித்தி புத்தி என்கிற சக்திகளோடு கூடிச் சித்திபுத்தி விநாயகர் என்றும், வல்லபை என்கிற சக்தியோடு கூடி வல்லபைகணபதி என்றும் வழங்குவதால் அறிக.

176. அவருக்காக எந்ததினத்தில் விரதமிருக்க வேண்டியது?

சதுர்த்தியில் விரதமிருக்க வேண்டியது.

177. எந்தச் சதுர்த்தியில் விசேஷமாய் அனுஷ்டிப்பது?

விநாயகசதுர்த்தியாம். இது ஆவணிமாதத்தில் வரும் பூர்வபக்ஷ சதுர்த்தி திதியில் விசேஷமாய் அனுஷ்டிப்பது உண்டு. இதுவுமல்லாமல் அங்காரக சதுர்த்தி, சங்கட சதுர்த்தி என விசேஷமாக அனுஷ்டிக்கிற காலங்களும் உண்டு.

178. அங்காரக சதுர்த்தியாவது யாது?

மாசிமாதம் கிருஷணபக்ஷம் செவ்வாய்க்கிழமை கூடிய சதுர்த்தியாம்.

179. இதன் காரணமும் விசேஷமும் யாது?

அங்காரகன் விநாயகரைப் பூசித்து அருள்பெற்றநாளன்று சந்திரோதயமானபின்பு பூஜைசெய்வது உத்தமம். அன்று பூஜித்து வழிபடுவோர் அங்காரகனைப்போல் வாழ்வார்கள்.

180. சங்கட சதுர்த்தியாவது யாது?

ஒவ்வொருமாதமும் கிருஷ்ணபக்ஷத்தில்வரும் சதுர்த்தியாம்.

181. இதன் விசேஷம் என்னை?

இச்சதுர்த்திவிரதம் ஒருவருடம் வரையில் அனுட்டிக்கிறவர்களுக்குப் புத்திரப்பேறு முதலாகிய பாக்கியங்கள்

உண்டாம். கூன் குருடு முதலிய எச்சங்களில்லாது மிக்க சௌந்தரியமான குழந்தைகளைப் பெறுவார்கள்.

*182. விநாயக சதுர்த்தியிலும் விசேஷமாய் எல்லாப் பூர்வபக்ஷ சதுர்த்திகளிலும் சந்திரனைப் பார்க்கலாகாது என்கிறார்களே அதன் காரணம் என்னை?*

அச்சதுர்த்தியிலே சந்திரன் குருபத்தினியாகிய தாராவுடன் சங்கமம் செய்தானுதலால் பாபியாகிய அவனையன்று பார்க்கப்படாது என்றே அவ்வாறு சொல்வது. பின் சந்திரன் அந்நாளிற்றுனே ஸ்ரீமூத்தபிள்ளையாரைப்பூசித்து அப்பாபம் நீங்கப்பெற்றுன். ஆதலால் ஆவணி விநாயக சதுர்த்தி விசேஷமாகியது.

*183. விநாயக மூர்த்தியைத் தொழுது பேறுபெற்ற அடியார்கள் யார்?*

புருசுண்டமகரிஷி முதலான ரிஷிகள் விநாயகரைத் தொழுது பேறுபெற்றிருக்கிறுர்கள். இவர்களுமல்லாமல் திருநாரையூர் நம்பியாண்டார்நம்பி, சந்தானகுரவர்களில் தலைவராகிய திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட சிவாசாரியார், ஔவையார் மற்றும் அநேகம்பேர் தொழுது பேறுபெற்றிருக்கிறுர்கள்.

*184. எந்தக்காரியம் செய்யத்தொடங்கினுலும் விநாயக பூசை முதலில் செய்வதேன்?*

அவர்கள் செய்யும் காரியங்களுக்கு விக்கினம் வராமல் காப்பாற்றுகிற கடவுள் ஆகையால் விநாயகரை முதலில் பூசிக்கிறது. இந்தக் காரணத்தினுல் அவருக்கு விக்கினேசுவரர் என்று பெயர் உண்டாயிற்று.

**185.** அவரை எந்த இடத்திலும் ஸ்தாபித்துப் பூசிக்கலாமா?

பூசிக்கலாம். ஆனால் வன்னி விருக்ஷத்தினடியிலும், மந்தார விருக்ஷத்தினடியிலும் ஸ்தாபித்துப் பூசிப்பது விசேஷமாம். * சமி என்கிறவள் ஒரு ரிஷியினுடைய புத்திரி. மந்தாரன் என்பவன் மற்றொரு ரிஷியினுடைய புத்திரன். இவர்கள் இருவரும் தம்பதி சமேதராய் ஒரு வனத்திற் செல்லுகையில், விநாயகர் சாரூபம்பெற்ற புருசுண்டமகாரிஷியைக் கண்டு நிந்தித்து அவருடைய சாபத்தினால் சமிவிருக்ஷமும், மந்தார விருக்ஷமும் ஆயினார்கள்.

**186.** பின்பு அவர்களுக்கு அந்தச் சாபம் நீங்கவில்லையா?

அந்த மரவுருவம் நீங்கினதில்லை. ஆனால் விநாயகரை அந்த மரங்களின் நிழலில் ஸ்தாபித்து விசேஷமாகப் பூசிக்கவும், அந்தப் பத்திரபுட்பங்கள் அவருடைய அர்ச்சனைக்கு யோக்கியமாகும்படிக்கும் வரம்பெற்றார்கள்.

**187.** விநாயகரை வீடுகள்தோறும் வைத்துப் பூசிப்பதற்குக் காரணம் என்னை?

அவருடைய பன்னிரண்டு திருவவதாரத்தில் ஒரு திருவவதாரம் காசிப்பட்டணத்தில் செய்திருந்தபோது எல்லாருடைய வீட்டிலும் ஏககாலத்தில் விருந்தமுது கொண்டருளினார். அன்றுமுதல் யாவரும் அவரவர்கள் வீடுதோறும் வைத்துப் பூசிக்கும்படி அனுக்கிரகம் செய்தருளினார்.

---

* சமி – வன்னி.

188. அவருடைய பன்னிரண்டு திருவவதாரங்கள் யாவை?

வக்கிரதுண்டர், சிந்தாமணி, விநாயகர், கஜானனர், விக்கினராஜர், மயூரேசர், பாலசந்திரர், தூமகேது, கணேசர், கணபதி, மகோற்கடர், துண்டிவிநாயகர், வல்லபைகணேசர் என்னும் பன்னிரண்டுமாம்.

189. வக்கிரதுண்ட விநாயகரின் வரலாறு என்னை?

பிரளயமுடிவில் இம்மூர்த்தி தோன்றி பிரமனாதி மூவர்களைப் படைத்துச் சிருஷ்டியாதி முத்தொழில்களைக் கற்பித்தனர்.

190. சிந்தாமணி விநாயகர் வரலாறு என்னை?

கபிலருடைய சிந்தாமணியைக் கவர்ந்துசென்ற கணராஜனை வென்று அதனை மீட்டும் அவர்க்கு அளித்தனர்.

191. கஜானன விநாயகர் வரலாறு என்னை?

பிரமதேவன் கொட்டாவியினின்றும் உற்பவித்த சிந்தூரனைக் கொன்று தேவர்களைக் காத்தனர்.

192. விக்கினராஜ விநாயகர் வரலாறு என்னை?

காலரூபன் என்கின்ற விக்கினனை அழித்து உலகத்தைக் காத்தனர்.

193. மயூரேச விநாயகர் வரலாறு என்னை?

பிரமதேவனிடத்திருந்து வேதங்களைக் கவர்ந்துசென்ற கமலாசுரனையும் தேவர்களைச் சிறையில்வைத்த சிந்தாசுரனையும் கொன்று, ஏனைய அவுணர்கள் செய்த மாயையினை ஒழித்து, மீட்டும் அவ்வேதங்களைப் பிரமனுக்கீந்து, தேவர்களை மீட்டு உலகினுக்கு இதஞ்செய்தனர்.

**194.** பாலசந்திர விநாயகர் வரலாறு என்னை?

யமனிடத்தினின்றும் உதித்த அனலாசுரனை ஒரு சிறு பிராமணப்பிள்ளைபோல் சென்று அவ் அசுரனை விழுங்கித் தேவர்களைக் காத்தனர்.

**195.** தூமகேது விநாயகர் வரலாறு என்னை?

மாதவராசனுக்கும் அவர் மனைவியாராகிய சுமுதைக்கும் தீங்குசெய்த தூமராசனைக்கொன்று அவ்விருவரையும் பாதுகாத்தருளினர்.

**196.** கணேச விநாயகரின் வரலாறு என்னை?

தம்மிடத்தில் அளவற்ற வரங்களைப் பெற்ற பெலி என்னும் ஓர் அசுரன் திரிலோகங்களையும் அழிக்கத் தேவர்கள் அதனை ஆற்ருது அஞ்சி விநாயகரை வேண்ட அவர் ஐந்துமுகத்தோடும் தோன்றி அவ் அசுரனை ஒழித்துத் தேவர்களுக்கு இதஞ்செய்தனர்.

**197.** கணபதி விநாயகர் வரலாறு என்னை?

கஜமுகாசுரனைக் கொன்று விஷ்ணுவின் சாபம் தீர்த்தருளினர்.

**198.** மகோற்கட விநாயகர் வரலாறு என்னை?

நராந்தகனையும், தேவாந்தகனையும் நாசஞ்செய்து காசிராஜனுக்கு முத்தி அளித்தனர்.

**199.** துண்டி விநாயகர் வரலாறு என்னை?

துராசதனைவென்று திவோதாசன் மனதைக் களிக்கச் செய்து விசுவநாதமூர்த்திக்குக் காசிமாநகரை அளித்தருளினர்.

200. வல்லபை கணேசர் வரலாறு என்னை?

மரீசிரிஷி புத்திரியாகிய வல்லபையையும், விஷ்ணு புத்திரிகள் பன்னிருவரையும் திருமணஞ்செய்து அவ் விஷ்ணுவுக்கு யோகஞானதத்துவம் என்னும் கணேச கீதையை உபதேசித்தனர்.

201. விநாயக விரதத்துக்குரிய காலங்கள் எவை?

சுக்கிரவாரம், விநாயகசதுர்த்தி, விநாயகசஷ்டி முதலியனவாம்.

## சுப்பிரமணியர் சரித்திரம்

202. சுப்பிரமணியர் திருவவதாரமானதற்குக் காரணம் என்னை?

சூரபத்மன் முதலாகிய அசுரரை வதைத்துத் தேவர்களை இரக்ஷிக்கும் பொருட்டுத் திருவவதாரஞ்செய்தார்.

203. எவ்வாறு திருவவதாம் செய்தார்?

இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாரும் சூரபத்மனால் வருந்திக் கயிலாசத்திலே சுவாமிசந்நிதியிலேபோய் முறையிடக் கயிலாசபதி கிருபைகூர்ந்து, சுப்பிரமணியர் திருஅவதாரமாகவேண்டும் என்று திருவுளமாகி ஆறுமுகங்கொண்டிருக்க, அவ்வாறு நெற்றிக்கண்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகள் உண்டாயின. அந்தப்பொறிகளைச் சரவணப் பொய்கையிலே கொண்டுபோய் விடும்படி அக்கினிதேவனுக்கும் வாயுதேவனுக்கும் கட்டளையிட, அவர்கள் தாங்கிக் கொண்டுபோய்ச் சரவணப்பொய்கையில் விட்டார்கள். அந்த ஆறு பொறிகளும் கயிலாசபதியினுடைய கிருபையினாலே ஆறு குழந்தைகளாகிக் கார்த்திகை நக்ஷத்திரங்

களாகிய ஆறுமாதர்களின் முலைப்பால் உண்டு பார்வதியார் வந்து எடுக்கையில் ஆறு திருமுகமும் பன்னிருபுயமுமுள்ள ஒரு திருமேனிகொண்டு முருகன், கார்த்திகேயன், காங்கேயன் என்னும் திருநாமம்பெற்று வளர்ந்தனர்.

204. இப்பெயர்கள் வந்ததற்குக் காரணம் என்னை?

இளமை மாறு திருப்பதனுல் முருகன் என்றும், கார்த்திகை நக்ஷத்திரத்தின் பாலுண்டு புத்திரன் ஆனதினுல் கார்த்திகேயன் என்றும், கங்கையில் வளர்ந்த புத்திரன் ஆனதினுல் காங்கேயன் என்றும் பேர்வந்தது.

205. இத்திருநாமங்கள் பெற்ற சுப்பிரமணியக்கடவுள் அதன்பின்பு என்னசெய்தார்?

தம்முடைய சகோதரர்களாகிய லக்ஷத்தொன்பது வீரர்களோடு கூடிக்கொண்டு பலபல அற்புதமான திருவிளையாடல்கள் செய்தார்.

206. அந்த வீரர்கள் உண்டானது எப்படி?

கயிலாசபதியினுடைய நெற்றிக்கண்களிலிருந்து தீப்பொறிகள் சிந்தினபோது பார்வதியார் பயந்து ஓடினர். அப்படிப் பயந்து ஓடுகையில் பார்வதியின் திருவடிகளில் அணிந்திருக்கும் சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்க அவ் இரண்டிலிருந்தும் நவரத்தினங்கள் சிந்தின. அந்த ரத்தினங்களில் பார்வதியாருடைய திருவுருவம் தோன்றி அவ்வுருவம் ஒன்பது ஸ்திரிகளாகி சுவாமியினுடைய திருவருளால் கருப்பமடைந்தார்கள். அதனைப் பார்வதியார் கண்டு கருப்பம் உற்பத்தியாகாமல் இருக்கும்படி சபிக்கையில் அவ் ஒன்பது ஸ்திரிகளும் பயந்தபோது சரீரத்தில் உண்டான வேர்வையில் லக்ஷம்வீரர்கள் உடனே உற்பத்தியானர்கள்.

207. பின்பு அவர்கள் வயிற்றிலிருந்து கருப்பும் உற்பத்தி யாகவில்லையா?

சிலகாலம் சென்றபின்பு பார்வதியின் அனுக்கிரகத்தினால் வீரவாகு, வீரகேசரி, வீரமயேந்திரன், வீரமகேசுவரன், வீரமாபுரந்தரன், வீராக்கதன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதிரன் என்னும் நவவீரர்கள் உற்பத்தியானார்கள்.

208. சுப்பிரமணியர் பின்பு என்னசெய்தார்?

கயிலாசபதியினுடைய கட்டளையின்படி மேற்சொல்லிய வீரர்களும், இரண்டாயிரம்வெள்ளம் பூதகணங்களும் கூடவரும்படி ரதாரூடராகப் பூலோகத்தில்வந்து கிரவுஞ்சகிரியையும், சூரனுடைய தம்பியான தாருகனையும் வதைத்தார். திருச்செந்தூரில் எழுந்தருளியிருந்து சூரனுக்குப் புத்திசொல்லும்படி வீரவாகுதேவரைத் தூதாக அனுப்பி அவன் அகங்காரத்தை அறிந்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டுச் சேனைகளுடன் வீரமயேந்திரபுரிக்குப்போய் யுத்தஞ் செய்து வீரவாகுதேவரால் சூரனுடைய மகனாகிய பானுகோபனைக் கொல்லுவித்துச், சூரன் தம்பியாகிய சிங்கமுகனையும் சூரனையும் தமது வேலாயுதத்தால் வதைத்தருளினார். திருச்செந்தூரினின்றும் எழுந்தருளி வீரவாகு முதலாகிய துணைவர்களும் மற்றவர்களும் சூழ்ந்துவரும்படிச் சென்று திருப்பரங்குன்றம் என்னும் ஸ்தலத்திற்போய்ச் சேர்ந்தார். அங்கே தேவேந்திரன் தன் புத்திரியாகிய தெய்வயானையை விவாகஞ்செய்துகொள்ளும்படி விண்ணப்பஞ் செய்யக் கிருபைகூர்ந்து திருக்கல்யாண மகோற்சவங் கொண்டருளினார். அங்கிருந்து எழுந்தருளி ஸ்கந்தகிரியிற்போய்ச் சேர்ந்து தெய்வயானை சமேதராய் வீற்றிருந்தார். அங்கிருந்து வள்ளிமலைக்கு எழுந்தருளிக் குறவர்

வீட்டில் வளர்ந்துகொண்டிருந்த வள்ளியம்மையாரை விவாகஞ்செய்துகொண்டருளித் திருத்தணிகையில் வந்து வீற்றிருந்து மறுபடியும் ஸ்கந்தகிரியில் எழுந்தருளி வீற்றிருந்தார்.

209. சுப்பிரமணிய சுவாமியினுடைய ஆறுமுகங்களும் எவற்றினைச் சூசிப்பிக்கின்றன?

சிவபெருமானுக்குரிய சர்வஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், அலுப்தசக்தி, அநந்தசக்தி, சுவதந்திரத்துவம் என்னும் சுத்தசாட்குணங்களும் முகங்கள் ஆறாய் வந்தன என்பர்.

210. அவர் வேலாயுதம் எதனைக் குறிக்கும்?

ஆன்மாக்களுக்கு முத்திகொடுக்க விரும்பும் விருப்பமாகிய இச்சாசக்தியும் அதற்கு வேண்டுபவைகளையறியும் அறிவாகிய ஞானசக்தியும் அறிந்தவைசெய்யும் செயலாகிய கிரியாசக்தியும் ஆகிய மூன்று சக்திகளினடுக்கு வேலாயுதம் என உணர்க.

211. அவர் மனைவிமாராகிய வள்ளியம்மை, தெய்வயானை யாவர்?

முறையே சுப்பிரமணிய சுவாமியினுடைய இச்சாசக்தியும், கிரியாசக்தியும் ஆவர்.

212. சுப்பிரமணிய சுவாமிக்கு உரிய விரதங்கள் எவை?

கார்த்திகை நக்ஷத்திரமும், சஷ்டி திதியும், சுக்கிர வாரமுமாம்.

**213.** அவரைத் தொழுது பேறுபெற்றவர்கள் யாவர்?

நாரதர் முதலாகிய முனிவர்களும், முசுகுந்தச் சக்கர வர்த்தி முதலாகிய அரசர்களுமாம்.

**214.** இந்தயுகத்திலே தொழுது பேறுபெற்றவர்கள் யார்?

நக்கீரதேவர், அருணகிரிநாதர் முதலானவர் தொழுது பேறுபெற்ருர்கள்.

**215.** அவர் அடியார்களுக்கு அருள்செய்யும் பொருட்டுத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தலங் கள் எவை?

திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி, திருச்செந்தூர், திருவேரகம், சோலேமலே, குன்றுதோருடல் ஆகிய ஆறு தலங்களும் மற்றும் அநேக தலங்களுமாம்.

## வீரபத்திரசுவாமி சரித்திரம்

**216.** வீரபத்திரசுவாமி திருவவதாரம் ஆனதற்குக் கார ணம் என்னே?

கயிலாசபதியாகிய பரமேசுவரனே மதியாமல் தக்கன் என்பவன் ஒரு யாகஞ்செய்தான். அந்தயாகத்தை அழிக் கும் பொருட்டுப் பரமேசுவரன் திருவுளங்கொள்ள அவரு டைய நெற்றிக்கண்ணினிடமாகத் திருவவதாரமாயினுர்.

**217.** வீரபத்திரர் அந்த யாகத்தை எப்படி அழித்தார்?

பூதப்படைகளோடும் போய் அங்கிருந்த தேவர்களே எல்லாம் ஹதப்படுத்தித் தக்கன் தலேயையறுத்து யாகத்தை அழித்தார்.

218. பின்பு தக்கன் பிழைக்கவில்லையா?

பரமேசுவரர் கிருபையாலே பிழைத்தான். ஆனால் ஆட்டுந்தலை பெற்றுப் பிழைத்தான்.

219. வீரபத்திரருக்குரிய விரதநாள் எது?

மங்களவாரமாம்.

LIBRARY 1957 RAS

## வைரவர் சரித்திரம்

220. வைரவமூர்த்தி ஏன் திருவவதாரம் செய்தனர்?

பிரமனது ஆணவத்தை நீக்கித் திருவருள் செய்யத் திருவவதாரம் செய்தனர்.

221. பிரமன் ஏன் ஆணவங்கொண்டனன்?

உலகம் முதலிய யாவையும் படைத்தலால் தானே பிரமம் என்றனன்.

222. அப்போது பிரமன் பிரமம் அல்ல என வாதஞ்செய்தவர் யாவர்?

திருமாலும், வேதமும் வாதஞ்செய்தார்கள்.

223. திருமால் செய்த வாதம் என்ன?

'பிரமனாகிய உன்னைப் பெற்ற தந்தையாகிய நானே பிரமம்; நீ பிரமம் ஆகாய்' என்றனர்.

224. வேதஞ்செய்த வாதம் என்ன?

'நீங்கள் இருவரும் பிரமமல்லீர்; வேதமுதல்வனும், தியானிக்கப்படுபவனும், துரியப்பொருளாயுள்ளவனும்,

காரணனும், ஆக்கலளித்தலே அளிப்போனுமாகிய சிவபெருமானே பிரமம்' என்றது.

225. இவர்கள் எவ்வாறு உண்மைகண்டனர்?

சிவபெருமான் சோதிசொரூபராய்த் தோன்றியும் உண்மைகாணுது மயங்கினவர்களாயிருத்தலேக்கண்டு உமையொரு கூறுடைக் கோலத்தைக்காட்டி வைரவமூர்த்தியைத் தோற்றுவித்துப் 'பிரமன் தலைகள் ஐந்தில் ஒன்றை ஒரு நகத்தாற்கிள்ளி அவன் அகந்தையை அடக்குக' என்று சிவபெருமான் அருளினர். தோன்றிய வடுகநாதனும் அவ்வாறு செய்து கபாலத்தைக் கையிற்கொண்டு நின்றனர்.

226. பிரமன் பின்னர் எவ்வாருயினுன்?

வடுகநாதர் கிள்ளிய தலையை மீட்டுஞ் சிருஷ்டிக்க வலியற்றவராய் முன்னிருதொழிலும் சங்காரத்திலடங்குவதாலும் சிவபெருமானே பிரமன் என ஓர்ந்து அடிதொழுது நின்று'விடைபெற்றுத் தன் இருக்கை சேர்ந்தனர்.

227. பின்னர் வைரவருக்குச் சிவபெருமான் என்ன கட்டளையிட்டனர்?

பிரமனது அகந்தையை நீக்கினமை தேவர்முதலோர் அறிந்துய்ய அன்னோரிடங் கபாலத்துடன்சென்று அதில் இரத்த பிட்சையேற்று அண்டங்களுக்கப்பால் நிருமித்த இடத்திலிருக்கக் கடவீர் என்றனர்.

228. பின்னர் வைரவர் எவ்வாருயினர்?

சிவன் அருளியபடி தேவர்களிடம் சென்று கபாலத்தில் ரத்தபிட்சை ஏற்று அண்டத்துக்கப்பால் அமர்ந்தருளினர்.

229. அவர்க்கு உரிய விரதங்கள் எவை?

மங்களவாரம், சித்திராபரணி, ஐப்பசிபரணி என மூன்றுமாம்.

# 7. பாசவியல்

230. மேற்கூறிய பதிப்பொருளை யாம் அறிந்து குணப்படுமாறு யாங்ஙனம்?

பாசபந்திகளாகிய யாம் ஆசாரியன் அருளினாலே அறிந்து குணப்படலாம்.

231. பாசபந்திகள் என்றதன் தாற்பரியம் என்னை?

பாசங்களினாலே கட்டுப்பட்ட பசுக்கள் என்பது பொருள்.

232. அப்பாசங்கள் யாவை?

ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என ஐந்தாம்.

## ஆணவம்

233. ஆணவம் எத்தன்மையது?

ஏகமாயும், நித்தியமாயும், அளவிறந்த வல்லமை உள்ளதாயும், செம்பிற் களிம்புபோலச் சீவனைப்பற்றி அறிவுமுழுவதையும் மறைப்பதாயும், சிவபுண்ணியமேலீட்டால் பக்குவப்படுவதாயும், பூதவிருளிலும் அதிக இருளாயிருப்பதாயும் விளங்குவது. பூதவிருள் தன்னைக் காட்டிக்கொண்டு உலகத்தை மறைக்கும். ஆணவ இருள் தன்னையுங்காட்டாமல் பிறபொருளையும் காட்டாமல் மறைப்பது.

அது ஜனனம் மரணமாகிய துக்கத்தையும் பேரின்பமாகிய வீட்டையும் எல்லாவற்றிற்கும் தாரகமாயிருக்கும் திருவருளினையும் இல்லை எனச் செய்யும். இருளானது தான் ஒன்றாயிருந்து பல கண்களையும் மறைத்தாற்போல, ஆணவமலமானது எண்ணிறந்த ஆன்மாக்களோடும் கூடிநின்று மறைத்துத் தான் ஒன்றுயிருப்பதாய், ஆன்மாக்களின் பக்குவாபக்குவங்களுக்குத் தக்கவாறு ஆங்காங்கு மறைந்து நின்று அவ்வவ் ஆன்மபோதங்களின் மீட்சியிலே அதாவது ஆன்மா பிரபஞ்சம் பொய்யென்று கண்டு நீங்குகையில் நீங்குவதாயிருக்கின்ற தன்காரியமான எண்ணிறந்த சத்திகளை உடையதாய், செம்பிற் களிம்பு செம்புள்ளவன்றே அதனை மறைத்து உள்ளும் புறம்புங்கலந்து வெட்டுவாய் தோறும் நின்றாற்போல ஆன்மபோதத்தோடும் கலந்து மறைந்து நிற்கிற அழியாத அனுதிமலமாய் செம்பெனும் பொருளுள்ளளவும் களிம்பு நின்றாற்போல ஆன்மபோதம் உள்ளளவும் ஒழியாத மறைப்புடையதாய், ஆன்மாவின் இச்சா ஞானக் கிரியைகளைச் சற்றும் சீவியாதபடிச் செய்வதாய் ஆன்மாவை மறைத்து நிற்கும்.

**234.** ஆணவமலத்தின் குணங்கள் என்ன?

தன்னையொழிய மற்றொருவரும் ஒவ்வாதவர் என்று நினைப்பதும், யாதொன்றையும் சங்கற்பிப்பதும், கோபம் பண்ணிக்கொண்டு நிற்கிறதும் விரோதம் நினைக்கிறதும், யாதொன்றுக்கும் ஆசைப்படுதலும், உயிரைக்கொல்லுதலும், துன்பம் வந்துற்றகாலத்து விசனப்படுதலும், யாதொன்று சொல்லுமிடத்தும் செய்யுமிடத்தும் அகங்காரமாய் நிற்றலும், யாதொன்றுக்கும் சிரித்துக்கொண்டு திரிதலும் ஆகிய குணங்கள் எட்டுமாம்.

## கன்மம்

235. கன்மம் எத்தன்மையது?

ஆன்மாக்கள் எடுக்கப்பட்ட தேகத்துக்கு முன்னிலைக் காரணமாய்ப் பலவிதமான புசிப்புக்களை உண்டாக்குவதாய், ஜனனமரணங்களை உண்டாக்குவதாய், பலபேதங்களாயிருப்பதாய், ஆன்மாக்கள்தோறும் சென்று பொருந்துவதாய், மனம் மொழி மெய்யாகிய திரிகரணங்களாலும் செய்யப்படும் இயல்பினையுடையதாய், புத்தியிலே நிற்பதாய், புண்ணிய பாவங்களாய், சம்ஹாரகாலத்திலே மாயா காரணத்தினலே சென்று பொருந்துவதாய், மாயையோடு கூடிக் காரியப்படுவதாய், அரூபமாய்ச் சடமாய் உள்ளது. (கன்மம் - முளை, மாயை - உமி, ஆணவம் - தவிடு.)

236. எடுக்கும் தேகங்களுக்கு முன்னிலைக் காரணமாவது எப்படி?

ஆன்மாக்கள் யாதொரு சரீரத்தை எடுக்குமிடத்து முற்செய்த கன்மங்களுக்கு ஏதுவாக எடுத்தலாலென அறிக.

237. பலவிதமான புசிப்புக்களை உண்டாக்குவது எவ்வாறு?

ஆன்மா இந்திரியங்களைக்கொண்டு விடயங்களைக் கொள்ளுமிடத்து ஒவ்வொரு விடயத்திலும் வெகுவிதமான கன்மங்களைப் புசித்தலால் என அறிக.

238. அநாதி என்றல் எவ்வாறு?

ஆன்மா உள்ள அன்றே அதனைப் பந்தித்த பாசங்களும் உண்டாதலால்.

**239.** பல பேதங்களாவது என்னை?

ஆன்மாக்கள் கன்மத்துக்கு ஈடாக எடுக்கும் உடல்களுக்கு அவ்வவ்வுடல்தோறும் வடிவு, நிறம், ஒழுக்கம், உணவு, சுகதுக்கம், ஆயுள் என்று இங்ஙனம் பலவகை ஆதலால்.

**240.** ஆன்மாக்கள்தோறும் சென்று பொருந்துவது எப்படி?

எடுக்கும் அச்சுகள்தோறும் அததற்கேற்ற புசிப்புக்களைக் கொடுத்து நிற்றலால்.

**241.** புத்தியிலே நிற்பதாவது யாது?

யாதொன்றிலும் புத்தி கன்மத்துக்கு ஈடாக நினைவு உண்டாகி நிச்சயிப்பதாம்.

**242.** கன்மம் புண்ணிய பாவங்களாவன யாங்ஙனம்?

இதாகிதங்களாலே விருப்பு வெறுப்பு உண்டாய் அதனால் புண்ணிய பாவங்கள் கட்டப்பட்டு அதனால் இன்ப துன்பங்கள் ஆகிய சுவர்க்க நரகங்களை அனுபவித்தலால்.

**243.** மாயா காரணத்திலே சென்று பொருந்துவது எவ்வாறு?

பிரபஞ்சமும், அதனோடு கூடி நிற்கும் ஆன்மாக்களும் மாயா காரணத்திலே ஒடுங்குகிற சம்ஹாரகாலம் இந்தக் கன்மமும் அந்த மாயா காரணத்திலே சென்று கூடும்.

**244.** கன்மத்தின் குணங்கள் என்னை?

ஒரு தலத்தைப்பற்றி யிருத்தலும். நோயாய்க் கிடத்தலும், புண்ணிய பாவங்களைச் செய்தலும், ஒவ்வொரு

பற்றுக்களாய் நின்ற தொந்தனைகளை விடுதலும், சர்வரையும் நிந்தித்தலும், உடல்மாறிப் பிறத்தலும் இகழ்ந்தாரோடு பொருந்தலும் ஆகிய குணங்கள் ஆறுமாம்.

**245.** இக்கன்மம் எத்தனை வகைப்படும்?

சூக்ஷமம், அதிசூக்ஷமம், தூலம் என மூவகைப்படும். இவை முறையே சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் எனப் பெயர் பெறும்.

**246.** சஞ்சிதமாவது யாது?

அநாதிதொட்டு ஜனனங்கள் தோறுஞ் செய்தவினைக் களஞ்சியமாயிருப்பது. மந்திரம், கலை, வன்னம், பதம், புவனம், தத்துவம் என்னும் அத்துவா ஆறினுங் கட்டுப்பட்டு பக்குவப்படும் வரையும் புத்தி தத்துவம் பற்றுக் கோடாக மாயையிலே கிடப்பது.

**247.** அவ்வத்துவாக்கள் இன்னவென்று விளக்குக?

மந்திரம் = சப்தகோடி மகாமந்திரங்கள், கலை = நிவர்த்தியாதி பஞ்சகலைகள், வன்னம் = அக்ஷராத்மகமா யுள்ளது, பதம் = உன்மிக முதலாயுள்ள எண்பத்தொருபதம், புவனம் = இருநூற்றிருபத்திநாலு புவனம், தத்துவம் = பிருதிவி முதல் நாதமீறுகவுள்ள தத்துவம் முப்பத்தாறு.

**248.** பிராரத்துவமாவது யாது?

இந்தச் சரீரத்தாற் புசிக்கப்படுவது. இது களஞ்சியத்திலிருந்து சிறிது எடுப்பதை ஒக்கும். பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்னும் ஆறுபலனையுங் கொடுப்பது, செய்யப்பட்ட கன்மம் பக்குவப்பட்டு அநுபவிக்கப்படும் பலனாய் வருவது. இது ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம், ஆதியான்மிகம் என முத்திறப்படும்.

249. ஆதிதெய்விகம் யாவை?

மாதாவின் கருப்பத்தில் உண்டாகும் விசனம், ஜனனம், நரை, திரை, யமதண்டம், நரகவேதனை முதலியவாம்.

250. ஆதிபௌதிகம் யாவை?

குளிர், வெப்பம், மழை, காற்று, மின், இடி, சுவர் விழுதல், கல்விழுதல், முதலியன.

251. ஆதி ஆன்மிகம் யாவை?

வியாதிகளினாலும், மிருகங்களினாலும், இராஜாங்கத்தாலும், கள்வராலும், ஏனைய மனிதர்களாலும் உண்டாகுந் துக்கம்.

252. ஆகாமியமாவது யாது?

பிராரத்துவம் புசிக்கும்போது உண்டாகும் விருப்பு வெறுப்பினாலீட்டப்படுவதும் மேல் சஞ்சிதத்துக்கு மூலமாயிருப்பதுமாம். இது களஞ்சியங் குறையாவண்ணம் விளைத்துச் சேர்கட்டுவதை ஒக்கும். கன்மம் செய்யப்படும் பொழுது ஆகாமியமெனப் பெயர் பெறும்.

253. பிராரத்துவத்துக்கும் ஆகாமியத்துக்கும் உள்ள பேதம் என்னை?

முன்னையது காரியம்; பின்னையது காரணம். ஒன்று பலன்; ஒன்று செயல். ஒன்று முயற்சியின்றி வந்து பொருந்தும்; ஒன்று முயற்சி வடிவாய் நிற்கும். ஒன்று இன்பதுன்பம்; ஒன்று புண்ணியபாவம். (ஆகாமியம்-வித்து, சஞ்சிதம்-மரம், பிராரத்துவம்-பலம்.)

**254.** பிராரத்துவம் வரும் விதம் யாது?

செய்த ஒழுங்கிலேயுஞ் செய்கைகளின் வன்மை மென்மைக் கேடாயும் வந்து பொருந்தும்.

**255.** வன்மை மென்மையாவது யாது?

ஒருவன் கீரைவிரைத்துப் பதினைந்து நாளையிலும், கத்தரி முப்பது நாளையிலும், தெங்கு ஐந்து வருஷத்திலும், பனை முப்பது வருஷத்திலும் பலன் அனுபவிக்குமாறு காண்க.

### மாயை

**256.** மாயை எத்தன்மையது?

இவ்வுலகமாகிய காரியத்துக்கு முதல் காரணமாகியும் ஆன்மாவின் அநாதிபந்தமாகிய ஆணவத்தோடுங் கூடி அதனைப் பக்குவப்படுத்துவதாகியும் ஒன்றையும் நினைக்கவொட்டாமல் எல்லா ஜகத்தையும் மயக்கத்தைப்பண்ணிச் சேட்டிப்பிக்கின்றதாகியும் உள்ளது.

257. அதன் குணங்கள் என்ன?

அஞ்ஞானத்தை உண்டுபண்ணுதலும், பொய் சொல்லுதலும், மயங்கி வருதலும், காம ஆசைப்படுதலும், ஆசை உண்டாய அதனை இல்லையாக ஒழித்தலும், மாச்சரியம் வைத்தலும், பயப்படுதலும் ஆகிய குணங்கள் ஏழுமாம்.

**258.** மாயை உலகத்தை எப்படி சேட்டிப்பிக்கின்றது?

சூரிய கிரணங்களை மேகங்கள் மறைக்குமாறு மனிதர்களுடைய ஞானக்கிரியைகளை மறைத்து நிற்கும். அன்றி

மாயையானது பொய்ம்மை உண்டாக்குகிற போகத்தைப் பண்ணுவதாம். அசத்தியத்தைச் சத்தியமெனத் தோற்று வித்துத் தன்னுடைய பிள்ளைகளாகிய தனுகரண புவன போகங்களிடத்தில் உண்டான குணதோஷங்களைக் காட்டாமல் அசுசியை அசுசி எனக்காட்டாது மறைத்து நின்று நமதறிவை இயக்கும். அது சுத்த மாயை அசுத்த மாயை பிரகிருதிமாயை என மூவகைத்து.

**259.** தனுகரணாதிகளை விளக்குக.

தனு-பஞ்சபூதங்களும் அவற்றின் காரியங்களும் உடன் கூடிய பூததேகம். கரணங்கள் - மனம் புத்தி சித்தம் அகங்காராதி யுட்கரணங்களும் புறக்கரணங்களும். புவனம் - கன்மம் புசிக்கைக்கு உண்டான விடம். போகம் புசிப்பாயுள்ள சப்த ஸ்பரிச ரூப ரச கந்தம் எனும் விடயங்கள்.

## சுத்தமாயை

**260.** சுத்த மாயையின் இலக்கணம் என்ன?

ஆணவ கன்மங்களுடன் கலவாது சுத்த காரியப் பிரபஞ்சத்துக்கு முதற்காரணமாய் மயக்கஞ் செய்யாத தாய் நித்தியமாய் வியாபகமாய் அருவாய் சடமாயிருப்பது. இது குடிலை எனவும் விந்து எனவும் பெயர்பெறும்.

**261.** சுத்தமாயையில் தோன்றுவன யாவை?

நாதம் தோன்றும். அதில் விந்து தோன்றும். பின் சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை மூன்றும் ஒன்றிலிருந் தொன்றாகத் தோன்றும். இவ்வைந்தும் சிவதத்துவமென் றும் சுத்த தத்துவமென்றும் பிரேரககாண்டம் என்றும்

பெயர்பெறும். முறையே இத்தத்துவ கர்த்தாக்கள் சிவம் சக்தி சதாசிவம் மகேசுவரன் ருத்திரர்களாவார்கள். மேற் கூறிய விந்துவிலே சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் வாக்குகள் நான்கும், ஐம்பத்தோரக்ஷரங்களும் எண்பத்தொரு பதமும், சப்தகோடி மகாமந்திரங்களும் வேதாகம சாஸ்திர புராணங்களும், விஞ்ஞான பிரளயா கலருக்குத் தனுகரண புவன போகங்களும், பதமுத்திகளும் பஞ்சகலைகளுந் தோன்றும்.

262. இச்சிவ தத்துவங்களை முறையே விளக்குக?

நாதம் ஆன்மகோடிகளுக்கு அறிவை எழுப்பி ஞான மாய்ச் சிவனுக்கிடமாம். விந்து அவர்களுக்குத் தொழிலை எழுப்பிக் கிரியையாய்ச் சக்திக்கிடமாம். சாதாக்கியம் மேலிரண்டுங்கூடி ஞானமுங் கிரியையுமொத்து அனுக்கிர கத்துக்கு இடமாம். ஈசுவரம் ஞானங்குறைந்து கிரியை ஏறித் திரோபவத்துக்கு இடமாம். சுத்த வித்தை ஞானம் ஏறிக் கிரியை குறைந்து சம்ஹாரத்துக்கு இடமாம்.

263. சூக்குமாதி வாக்குகளின் செயல்கள் என்னை?

சூக்குமை பரசரீரத்தினுள் நாதவடிவினதாய் நாபி யடியாய் வந்து பொருந்தி வெவ்வேறாய் வரும் அக்ஷரங்களி னுடைய சொரூபங்கள் தோன்றும் முறைமை தெரியாத படி மறைத்து நிற்கும். மயில் முட்டைக்குள் சலமானது புறம்பே மயிலின் நிறமாய் சொரூபிகரித்துத் தோன்றி யுடைத்தால் ஜலமாய் விடுமாறுபோல.

பைசந்தி - நினைவு மாத்திரமாய் நிற்கும். வடிவு பிரா ணன். த்தானம் உந்தி.

மத்திமை - அக்ஷரங்களினுடைய சொரூபங்களைப் பிராண வாயுவோடுங்கூடி ஒழுங்குபட நிறுத்திச் செவிக்கு விடயமாகாமல் ஆன்மாவினிடத்திலே உள்ளறிவுமாய்த் தொனியுமுண்டாய் நெஞ்சுங் கண்டமுந் தானமாய்க் கொண்டு அக்ஷரங்களை யொலிப்பிக்குஞ் செயல் இல்லாது எழும்.

வைகரி - முற்கூறிய பிராணவாயுவோடும் கூடிவந்து உதானவாயுவிலேயும் பந்தித்துச், செவிப்புலனிடத்தே கேட்கத்தக்கதாக நினைவிலுண்டான வசனத்தைச் சொல்லும். தானம் - தாலுமூலம்.

264. பரசரீரமாவது யாது?

மும்மலமுடைய சகலர்கட்கு அசுத்தமாயையில் காரண சரீரம் என்னும் சரீரம் ஒன்று உண்டு. இது ஆனந்தமய கோசம் எனப்படும். வித்தியாதத்துவத்தில் பஞ்சகஞ்சுகம் என்னும் பரசரீரம் ஒன்று உண்டு. இது விஞ்ஞானமய கோசம் எனப்படும். கலையிற்றோன்றிய அவ்வியக்த வியக்த ரூபமாகிய குணசரீரம் ஒன்று உண்டு. இது மனோமய கோசம் எனப்படும். இவை மூன்றும் பரசரீரமாம்.

265. இவையன்றி வேறுசரீரங்களும் உளவோ?

சூக்ஷுமம், ஸ்தூலம் என இரண்டு உண்டு.

266. அவற்றினை விளக்குக.

மனம், புத்தி, அகங்காரம், தன்மாத்திரை ஐந்தும் கூடியது சூக்ஷுமம். இது புரியட்டகம் எனவும் பிராண மயகோசம் எனவும் படும். இப்போது உலகில் உலாவித் திரிவது ஸ்தூலம். இது அன்னமயகோசம் எனப்படும்.

**267.** பூதனுசரீரம், யாதனுசரீரம் என்பன யாவை?

பிருதிவியாதி பஞ்சபூதங்களினால் ஆக்கப்பட்டது பூதனுசரீரமாகிய ஸ்தூலவுடல். மேலேகூறிய புரியட்டகம் ஆன்மாக்களின் இன்ப துன்பங்கள் அனுபவிக்கும் அவசரம் யாதனு சரீரம் எனப்படும்.

**268.** பூதசாரசரீரம், பூதசரீரம் என்பன யாவை?

புண்ணியகன்மத்துக்கு ஈடாக சுவர்க்கபலன்களைப் புசிப்பது பூதசாரசரீரம் எனப்படும். பாவபலத்துக்கு ஈடாக நரகபலனை அனுபவிப்பது பூதசரீரம் எனப்படும்.

**269.** விஞ்ஞான பிரளயாகலராவார் யாவர்?

விஞ்ஞானகலர் மாயாகன்ம மலமற்றவர்கள். இவர்கட்கு ஈசன் அறிவுக்கு அறிவாயிருந்து முத்தியளிப்பன். பிரளயாகலர் - மாயாமலம் அற்றவர்கள். இவர்கட்கு ஈசன் மான் மழு சதுர்ப்புஜ காளகண்ட திரிநேத்திரதாரியாகப் பிரசந்நமாகி இரக்ஷிப்பன்.

**270.** பஞ்சகலைகள் யாவை?

நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீதகலை என்பவைகளாம்.

**271.** இவற்றினை முறையே விளக்குக.

முதலாவது சங்கற்ப நிவர்த்திசெய்யும்; இரண்டாவது நிவர்த்திசெய்த ஆன்மாவைத் திடப்படுத்தும்; மூன்றாவது இத்தகைய ஆன்மாவினுக்குச் சர்வார்த்தஞானம் பிரகாசிப்பிக்கச்செய்யும்; நான்காவது ராகத்துவேஷமின்றி இருக்கச் செய்யும். மற்றையது மேல் நினைவுகள் எல்லாம் கழிந்து சொரூபஞானமாய் நிற்கச்செய்யும்.

## அசுத்தமாயை

272. அசுத்தமாயையின் இலக்கணம் என்ன ?

சுத்தமாயையின் கீழாயடங்கி ஆணவ கன்ம மலங்களுடன் கலந்து சுத்தாசுத்தகாரிய பிரபஞ்சத்துக்கு முதற் காரணமாயிருப்பது. இது மோகினி எனப்படும். இது தனு கரண புவன போகம் எனும் நான்குவிதமாய் அவை நாலினுள் ஒன்றையொன்று ஒவ்வாமுறையினையுடையதாய் ஒருகாலும் அழிவில்லாததாய் கன்மம் புசித்து முடிந்து போகும்படிக்கு ஏதுவாயுள்ள ஆன்மாக்களுக்கு எல்லாம் தாரகமாய்ச் சலனமில்லாததாய் தன் காரியமாயுள்ள எல்லாம் தோன்றின அடைவிலே தானும் ஒக்கக் கூடி நின்று ஒடுங்கத்தக்கதாகவருகின்ற சம்ஹாரகாலம், அந்தக் காரியரூபத்தைப்பற்றி நின்ற ஆன்மாக்களுக்குத் தன்னிடத்தே பொருந்துகைக்கிடமாய் அருவாய் ஜடமாய் சர்வ வியாபகமாய் விளங்கும். இதில் காலமும் நியதியும் கலையும், கலையில் வித்தையும் வித்தையில், இராகமும் தோன்றும். இவை பஞ்சகஞ்சுகமாம். இவற்றோடு கூடிய ஆன்மா பஞ்சகஞ்சுகன் எனப்படும்.

273. காலம் என்பது என்ன ?

காலம், பருவம், சமயம் என்னும் இவை ஒரு பொருட் பன்மொழி. அது இன்னவிஷயம் இன்னசமயத்தில் தொடங்கினது என்னும் இறந்தகாலத்து எல்லையையும், நிகழ்காலத்துப் பலத்தையும், எதிர்காலத்துப் புதுமையையும் பொருத்துவிப்பதொன்றும்.

274. நியதி என்பது என்ன ?

இன்னகாலத்தில் இன்னபோகம் புசித்தல் என்றும், தீமை தண்டனை பயக்கும் நன்மை நன்மைபயக்கும் என்றும் நிச்சயம் பண்ணும்.

275. கலை என்பது என்ன ?

ஆணவம் சிறிது சிறிதாக நீங்கும்படிக் கிரியையை எழுப்பிச் சுகதுக்கபோகமே ரூபமாகும் பலன்களைப் புசிப்பிக்கும்.

276. வித்தை என்பது என்ன ?

நமக்கு அறிவு பிரகாசப்படும் அவதரம்.

277. இராகம் என்பது என்ன ?

கன்மத்துக்குத் தக்கவாறு பெற்றதைச் சிறிதாக்கிப் பெருததில் இச்சையுண்டாக்குவது.

278. மேற்கூறிய ஐந்து தத்துவங்களோடு கூடிய ஆன்மா எவ்வாறு பெயர்பெறும்? அதன் செயல் என்னை ?

புருடதத்துவம் எனப் பெயர்பெறும். விஷயத்திலே அழுத்துவிக்கும்.

279. மேற்கூறிய மாயைமுதல் புருடன் ஈருகவுள்ள தத்துவங்கள் ஏழும் எவ்வாறு பெயர்பெறும்?

வித்தியாதத்துவம் எனப் பெயர்பெறும். இதற்குச் சுத்தாசுத்ததத்துவம் என்றும், யோககாண்டம் என்றும் பெயர்.

## பிரகிருதிமாயை

280. பிரகிருதி மாயை யாது?

அசுத்தமாயையின் தூலபரிணாமமாய் அசுத்தகாரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாயிருப்பது. இதில் ஆன்ம தத்துவம் இருபத்துநான்கும் தோன்றும்.

281. ஆன்ம தத்துவங்கள் யாவை?

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பூதங்கள் ஐந்தும்; சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்னும் புலன்கள் ஐந்தும்; மெய், நா, கண், மூக்கு, செவி என்னும் பொறிகள் ஐந்தும்; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்தும்; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணம் நான்கும் ஆகிய இருபத்துநான்குமாம். இதற்கு அசுத்ததத்துவம் என்றும், போக்கியகாண்டம் என்றும் பெயர்.

282. இவை தோன்றும் முறைமையை விளக்குக.

கலையிலே மூலப்பிரகிருதியுண்டாகி வியக்தாவியக்த என இருவகைப்பட்டு முன்னதில் சாத்துவிக ராசத தாமதமெனும் குணங்கள் மூன்றும் தோன்றும். அவற்றுள் ஒவ்வொன்றும் முத்திறப்படும்.

283. சாத்துவிக குணத்தின் தொழில்கள் என்னை?

தவம், கல்வி, சௌரியம், பொறுமை, கருணை, சந்தோஷம், அறிவு, அடக்கம் முதலியவாம்.

284. தாமதகுணத்தின் தொழில்கள் என்னை?

சோள், அகௌரவம், நித்திரை, அதர்மம், அறியாமை, சோம்பல் முதலியவாம்.

285. இராசத குணத்தின் தொழில்கள் என்னை?

சௌரியம், உத்ஸாகம், அபிமானம், கொடுமை, வன்னெஞ்சு, இடும்பை முதலியவாம்.

286. அவ்வியக்தப்பிரகிருதியில் உண்டாவன யாவை?

சித்தமும் புத்தியும் உண்டாம். புத்தியில் அகங்கார மும், அகங்காரத்தில் சாத்துவிககுணதைசத அகங்காரமும், ராசதகுணவைகரி யகங்காரமும், தமோகுணபௌதாதி அகங்காரமும் தோன்றும். இவற்றுள் தைசதத்தில் மனமும், மெய் வாய் கண் மூக்கு செவியாகிய ஞானேந் திரியம் ஐந்தும், வைகரியில் வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் ஆகிய கன்மேந்திரியம் ஐந்தும், பௌதாதிகத்தில் சப்த ஸ்பரிச ரூப ரச கந்தம் ஆகிய தன்மாத்திரை ஐந்தும் தோன்றும். இவ் ஐந்தினும் முறையே ஆகாசாதி பூதம் ஐந்தும் தோன்றும். ஆன்மா இவற்றினைப் பொருந்திக் கன்மம் புசிக்குமளவில் அவத்தைகளிற்றோய்வன்.

287. அவத்தை எத்தனை?

காரணவத்தை 3. காரியாவத்தை 15. ஆக 18.

288. காரணவத்தையாவன யாவை?

கேவலம், சகலம், சுத்தம் என மூன்றும்.

289. இவற்றினை முறையே விளக்குக.

சர்வசம்ஹாரகாலத்து ஆன்மாக்கள் சுத்த மாயா காரணத்திலே ஒடுங்கி சிருஷ்டிகாலமளவும் ஆணவமலத்தால் மறைப்புண்டு ஒன்றும் அறியாமல் கிடக்கும் அவதரம் கேவலமாம். கண்ணும் இருளும் ஒக்கும். சிருஷ்டிகாலந்தொடங்கி, சர்வசம்ஹாரம் வருமளவும் ஆன்மாக்கள் தத்துவங்களுடன்கூடி எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதத்திலும் பிறந்து இறந்து உழலும் அவதரங் காரண சகலமாம். கண்ணும் விளக்கும் ஒக்கும். இங்ஙனம் கேவல சகலப்பட்டுப் பிறந்து இறந்து உழலும் அவதரத்து ஆணவமலபாகம் வந்த ஆன்மாக்களுக்கு இருவினையொப்புஞ் சத்திநிபாதமும் உண்டாமாகையால் அந்த அவதரத்துச் சிவன் ஆசாரியமூர்த்தமாய் எழுந்தருளி இரக்ஷித்துத் தனது திருவருளால் ஞானத்தையும் கடாக்ஷித்து நிஷ்டாபரராகிப் பிராரத்தந்தொலைந்தவாறே தனது பூரணநிலையோடும் கூட்டிக்கொள்ளும் அவதரஞ் சுத்தமாம். கண்ணும் இரவியும் ஒக்கும்.

290. காரியாவத்தை யாவை?

கேவலாவத்தையின் காரியமாகிய கீழாலவத்தை 5. சகலாவத்தையின் காரியமாகிய மத்தியாவத்தை 5. சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மலாவத்தை 5. எனப் பதினைந்தாம்.

291. கீழாலவத்தை யாவை?

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்தாம்.

292. சாக்கிரமாவது யாது?

ஆன்மா தத்துவம் முப்பத்தாறோடுங்கூடி விஸ்வவியாத்தனாய் நிற்கும்பொழுது அறிகருவிகளாகிய சிவதத்துவம் ஐந்தும், வித்தியாதத்துவம் ஏழில் பிரகிருதிதத்துவம் நீங்கலாக கலாதிகள் ஆறும், ஆன்மதத்துவம் இருபத்துநாலில் பூதங்கள் ஐந்தும் ஆக 16ம், நீங்கலாகநின்ற கருவி 20ம், புறக்கருவி 60ல் வாயுக்கள் 10ம், வசனாதி 5ம் ஆக 35 கருவிகளோடுங்கூடி ஆன்மா கண்டத்துக்கு மேலதாகிய லலாடத்தில் நிற்கும் அவதரம் சாக்கிரமாம்.

293. புறக்கருவி 60 யாவை?

பிருதிவியின்கூறு 5. (மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை.) அப்புவின்கூறு 5. (நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை.) தேயுவின்கூறு 5. (ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்.) வாயுவின்கூறு 5. (ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல்.) ஆகாயத்தின் கூறு 5. (குரோதம், லோபம், மோகம், மதம் ஆச்சரியம்.) பிருதிவியின் வழிநாடி 10. (இடைகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, ஜிகுவை, அலம்புருடன், சங்குனி, வைரவன், குகுதை.) வாயுவின்வழிநாடி 10. (பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயன்.) ஆகாயத்தின்வழி ஈஷணாத்திரயம் 3. (அருத்தம், புத்திரன், உலகம்.) வாக்காதியின் தொழில் 5. (வசன, கமன, தான, விஸர்க்க, ஆநந்தம்.) பிரகிருதியின் வழிகுணம் 3. (சாத்துவிக, ராஜச, தாமதம்.) விந்துவின்வழி வாக்கு 4. (சூக்குமாதி நான்கும்) ஆக புறக்கருவிகள் 60 ஆம்.

294. மேலே கூறிய கருவி 35 எவை?

ஞானேந்திரியம் 5, கன்மேந்திரியம் 5, தன்மாத்திரை 5, அந்தக்கரணம் 4, வாயு 10, வசனுதி 5. ஆக கருவி 34 கூடி பிரகிருதி தத்துவம் உடம்பாக சாக்கிரத்தில் ஆன்மா நிற்பன். சொப்பனதானத்தில் பிரவேசிக்கும்போது ஞானேந்திரியமும் கன்மேந்திரியமும் சாக்கிரதானத்திலே நின்றுவிடும்.

295. சொப்பனமாவது யாது?

கண்டத்தில் மேற்கூறிய வாயுவாதி அந்தக்கரணுந்த கருவிகள் 24 கூடி பிரகிருதி தத்துவம் உடம்பாக நிற்கும் அவதரம். இவ்வான்மா சுழுத்தியிற் பிரவேசிக்கும்போது பிராணன் தவிர்ந்த 9 வாயுவும், வசனுதி 5ம், சப்தாதி 5ம், சித்தம் நீங்கலாக அந்தக்கரணம் 3ம் ஆக 22 கருவிகளும் கண்டத்தில் நின்றுவிடும்.

296. சுழுத்தியாவது யாது?

இருதய ஸ்தானத்தில் பிரகிருதி தத்துவம் உடம்பாக பிராணவாயுவோடும் சித்தத்தோடுங்கூடி ஆன்மா நிற்கும் அவதரம். துரியத்தில் செல்லும்போது சித்தம் சுழுத்தியில் நின்றுவிடும்.

297. துரியமாவது யாது?

மூலாதாரத்துக்கு மேலாகிய துரியஸ்தானமாகிய நாபியிலே பிரகிருதி தத்துவம் உடம்பாக பிராணவாயுவோடும் கூடி நிற்கும் அவதரம். துரியத்தைவிட்டு துரியாதீதத்தில் செல்லும்போது பிராணவாயு துரியத்தில் நின்றுவிடும்.

298. துரியாதீதமாவது யாது?

ஆன்மா ஆணவ மலமறைப்பாக பிரகிருதி தத்துவம் உடம்பாக மூலாதாரமாகிய அதீததானத்தில் ஜீவிக்கும் கருவிகளொன்றுமின்றி அந்தப் பிரகிருதியென்னத் தான் என்னப் பிரிவற்றுக்கிடக்கும் நிலை..

299. சகலாவத்தையின் காரியமாகிய மத்தியாவத்தை யாது?

இது சாக்கிர துரியாதீதம், சாக்கிரதுரியம், சாக்கிர சுழுத்தி, சாக்கிரசொப்பனம், சாக்கிரசாக்கிரம் என ஐந்து வகைப்படும்.

300. சாக்கிர துரியாதீதமாவது யாது?

ஒரு பொருளை மறந்தவன் அந்தப்பொருள் காணுத போது பிராணவாயுவும் இயங்காமல் மூர்ச்சித்திருந்த அவதரம். கருவி சிவதத்துவம்.

301. சாக்கிர துரியமாவது யாது?

அந்தப் பிராணவாயு இயங்கத்தக்கதாகப் பெருமூச் செறிந்து விசாரித்தறிவோம் என்று நின்ற அவதரம். கருவி சிவதத்துவம், சத்திதத்துவம்.

302. சாக்கிரசுழுத்தியாவது யாது?

அவ்விடத்திலே அல்லவோ போனோம் என்று நினைவு எழுந்த அவதரம். கருவி - சிவதத்துவ சாதாக்கிய வடிவங்கள்.

**303.** சாக்கிரசொப்பனமாவது யாது?

இன்னவிடத்திலே அல்லவோ அந்தப் பொருளை வைத்தோம் என்று விசாரப்பட்டு அறிந்த அவதரம். **கருவி** - சிவசத்தி சாதாக்கிய ஈசுவர தத்துவங்கள்.

**304.** சாக்கிரசாக்கிரமாவது யாது?

அந்தப் பொருளை வைத்தவிடத்திலே சென்று கண்ட அவதரம். கருவி - சுத்த தத்துவம் ஐந்தும்.

**305.** சுத்தாவத்தையின்காரியமாகிய நின்மலாவத்தையாது?

நின்மலசாக்கிரம், நின்மல சொப்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதமென ஐவகைப்படும்.

**306.** நின்மல சாக்கிரமாவது யாது?

ஆசாரியராலே ஞானதீக்ஷைபெற்று, பதி, பசு, பாச பதார்த்தத் திரயங்களின் உண்மை அறிந்து சிந்தித்துத் தெளிந்து கருவிகள் நீங்க விசாரித்து நிற்பது.

307. நின்மல சொப்பனமாவது யாது?

கருவிகள் நீங்கியும் நீங்காமலும் நடுவே சற்றுப் பதைப் புண்டாவது.

308. நின்மல சுழுத்தியாவது யாது?

தத்துவம் நீங்கி மேலான கேவலந் தானாய் நிற்பது.

**309.** நின்மல துரியமாவது யாது?

கேவலம் நீங்கி யருளினாலே தன்னையுங்கண்டு அருளையுங்கண்டு அதன்வசத்தாய் நிற்பது.

**310.** நின்மூல துரியாதீதமாவது யாது?

சிவத்தைத் தரிசித்துச் சிவானந்தத் தழுந்துதல்.

## மாயேயம்

**311.** மாயேயமாவது யாது?

சுத்த தத்துவ சமூகங்களாம். இது ஆன்மாக்களுக்கு ஞானக் கிரியைகளை வெளிப்படுத்தும் பொருட்டும், தான் செய்த வினைகளை அனுபவித்து ஒழிக்கும் பொருட்டும், தனு கரண புவன போகங்களோடும் பொருந்தி நடத்துவிக்கும்.

## திரோதாயி

**312.** திரோதாயியாவது யாது?

ஆணவமலம் நசிக்கும்படிப் பதியினுடைய அருட்சத்தியானது ஆணவ மலத்தோடுங்கூடி திரோபவித்து நின்று காரியப்படுத்தி மலபாகம் வருவித்த அருளானது அவர்களிடத்து கிருபை ஜனித்து பதியோடு இரண்டறப் பொருந்து முறைமையை உண்டாக்குவதாம்.

**313.** மேற்கூறிய பாசபந்தங்களை நீக்குவித்து ஆட்கொள்ளும் ஆசாரியரை எவ்வாறு அடையலாம்?

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு ஓர் - வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்றபடி எத்துணையுஞ் சிறிய எம்பொருட்டு எளிவந்தருளிய எத்துணையும் பெரிய எமது அப்பனாகிய ஏறுகந்தேறும் இறையவன் கொண்டருளிய அருண்மூர்த்தங்கள் அனைத்தையும் அன்பு செய்தலும், புண்ணிய

க்ஷேத்திரங்கள் பலவற்றிலும் வதிதலும், சிவதீர்த்தங்களிற் படிதலுஞ், சித்த சுத்தியை உண்டாக்கிக் கன்மம் ஏமுமைக் கேதுவாதலால் ஆசாரியர் 'முத்தாத்மாவாவான் எவன்' எனத் தாமே தேடி வருவர் என்பது உண்மைநூற் றுணிபாம்.

## 8. மூர்த்தியியல்

314. சிவபெருமானுடைய அருண்மூர்த்தங்கள் யாவை?

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆத்துமாவாகிய அட்டமூர்த்தங்களும், மகேசுர வடிவங்களாகிய லிங்கோற்பவர் முதல் கங்காதரமூர்த்தி ஈருகவுள்ள இருபத்தைந்து மூர்த்தங்களும், பிரமன் முதல் சிவம் ஈருகவுள்ள ஒன்பது மூர்த்தங்களும், சிவஸ்தலங்கள் பலவற்றுள்ளும் எழுந்தருளி இருக்கும் மூர்த்தங்களும், சிவபூஜை செய்யத்தக்க மூர்த்தங்களும் ஆம்.

315. மகேசுவர வடிவங்கள் எவை?

லிங்கோற்பவர், சுகாசனர், சக்திதரமூர்த்தி, கல்யாண சுந்தரமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், சோமாஸ்கந்தர், சக்ர வரதர், திரிமூர்த்தி, ஹரிஅர்த்தர், தக்ஷிணாமூர்த்தி, பிக்ஷாடனமூர்த்தி, கங்காளர், காமாரி, காலசம்ஹாரமூர்த்தி, சலந்தராரி, திரிபுராரி, சரபமூர்த்தி, நீலகண்டர், திரிபாதர், ஏகபாதர், பயிரவர், இடபாரூடர், சந்திரசேகரர், நடராஜ மூர்த்தி, கங்காதரமூர்த்தி என்னும் இருபத்தைந்துமாம்.

316. லிங்கோற்பவமூர்த்தி யாவர்?

பிரம விஷ்ணுக்களுக்கு நல்லறிவுறுத்த அழற்பிழம்பாய் நின்ற சிவபெருமான் லிங்கரூபமாய்த் தோன்றியதே

லிங்கோற்பவ மூர்த்தியாம். இம்மூர்த்தியை உபாசிப்போர் சரீராதி சுகப்பிராப்தி யடைவர்.

**317.** சுகாசனமூர்த்தி யாவர்?

உமாதேவியாருக்கு வேதசிவாகமங்களின் உண்மையை சுகாசனத்திலிருந்து உபதேசித்த மூர்த்தியாம். இம்மூர்த்தியை உபாசிப்போர் சுகதுக்காதிகளில் விருப்பு வெறுப்பின்றி இருந்து சங்கற்ப விகற்பங்கள் நீங்கப்பெறுவர்.

**318.** சக்திதரமூர்த்தி யாவர்?

சிவபெருமான் பிரம விட்டுணுக்களுக்குக் கிருத்தியம் நடைபெறச் செய்யத் தமது வாமபாகத்திலிருந்து உமா தேவியாரைத் தோற்றுவித்த மூர்த்தியாம். இம்மூர்த்தியை உபாசிப்போர்க்குப் போகமுண்டாம்.

**319.** கல்யாண சுந்தரமூர்த்தி யாவர்?

பிராட்டியார் பெருமானைநோக்கி, தமக்குள்ள தாக்ஷாயணி என்னும் பெயரை மாற்றவேண்டி மலையரையன் மகவாய்த்தோன்றி, பார்வதி என்னுந் திருநாமத்துடன் மேனைபால் வளர்ந்து வருங்காலத்து எமது ஐயன் திருமணக் கோலங்கொண்டு எழுந்தருளிய மூர்த்தமாம். இம்மூர்த்தியை உபாசிப்போர் சதா மங்களகரமா யிருப்பர்.

**320.** அர்த்தநாரீசுவரர் யாவர்?

இடப்பாதி பார்வதி தேவியாரும் வலப்பாதி பெருமானுமாக உள்ள திருக்கோலமாம். இம்மூர்த்தியை உபாசிப்போர் உலக இன்பத்தை யடைவர்.

321. சோமாஸ்கந்த மூர்த்தி யாவர்?

உமையோடும் ஸ்கந்தரோடுங் கூடியிருக்கும் மூர்த்தியாம். இதனை உபாசிப்போர்க்குப் புத்திரப்பேறு உண்டாகும். (மூர்த்த நாயகர் என்றும் கூறுவதுண்டு).

322. சக்கரவரதர் யாவர்?

திருமாலுக்குக் சக்கரமீந்த மூர்த்தியாம். உபாசகர் போகங்களை விக்னமின்றித் துய்ப்பார்கள்.

323. திரிமூர்த்தி யாவர்?

ஈசுவரன் பிரம விஷ்ணு ருத்ரர்களைப் பிறப்பிவிக்கும் அவசரம் ஆம். ஆன்மாக்கள் அவஸ்தாத்திரயத்தை யடையச்செய்வது.

324. ஹரி அர்த்தர் யாவர்?

ஈஸ்வரியின் வடிவம்பெற்ற விஷ்ணுவை இடப்பாகங் கொண்ட திருக்கோலம். புண்ணிய பாவங்களைச் சமானமாய்ச்செய்து அவரவர்களுக்குச் சத்திநிபாதங் கொடுப்பது.

325. தக்ஷிணாமூர்த்தி யாவர்?

சிவபெருமான் தக்ஷிண திசையை நோக்கி சநகாதி நால்வருக்கு உபதேசித்த அவசரம். யோகமுறைமையைக் காட்டினவர் யோக தக்ஷிணாமூர்த்தி என்றும், தும்புருவர், நாரதர், சுகர் முதலியோருக்கு வீணையின் இலக்கணத்தையுணர்த்தி அதனை வாசித்துக் காட்டினவர் வீணா தக்ஷிணாமூர்த்தி என்றும் கூறுவர் மேலோர். ஆன்மாக்கள் பிறவித் துன்பம் நீங்கி மோக்ஷபிராப்தி யடையும்பொருட்டு ஆஸ்ரயிக்கிறது.

**326.** பிக்ஷாடனமூர்த்தி யாவர்?

தாருகாவனத்து இருடிகள் சிவபக்தியில்லாராகிக் கன்மப் பிரமவாதிகளா யிருந்ததை மாற்றி அவர்களுக்கு நல்லுணர்வுண்டாக்கத் திகம்பரராய் பிரமகபாலம் கைக்கொண்டு பலியேற்கவந்த மூர்த்தம். பரிபாகமுள்ள ஆன்மாக்களுக்குப் போகசங்கிரகம் உண்டுபண்ணும்.

**327.** சரபமூர்த்தி யாவர்?

சிவபெருமான் இரணியனைச் சங்கரித்த நரசிம்ஹத்தின் அகந்தையைச் சரபரூபமேற்று வதஞ்செய்தமையால் ஸிம்ஹ ஹக்நமூர்த்தி என்றும் சரபமூர்த்தி என்றும் பெயர் பெறுவர். ஆன்மாக்கள் கன்மாதி மலநீக்கமடையும்.

**328.** நீலகண்ட மூர்த்தி யாவர்?

சர்வசுதந்தரனாகிய பதி சிவபெருமான் என்றறியாது தேவர் முதலானோர் அமிர்தம்வேண்டித் திருப்பாற்கடலைக் கடைய, ஆலகாலம்பெற்றுச் சிவபெருமானிடத்திற் சென்று தங்கள் குறையிரந்துநிற்ப, அம்மைபாகனார் அவ்வாலகாலத்தையுண்டு தாம் ஒருவரே இறப்பில்லாதவர் என்று சூசிப்பித்தற்பொருட்டுக் கண்டத்தில் அடக்கிக்கொண்ட அவசரமேயாம். ஆன்மாக்களுக்கு ஆணவமல நீக்கமுண்டாகும்.

**329.** திரிபாதமூர்த்தி யாவர்?

பிரளயத்தின் முடிவில் பிரம விஷ்ணு ருத்ரர்கள் மகேசுவரனிடத்தில் லயமாகும் அவசரமே திரிபாதமூர்த்தி எனப்படும். (இம்மூர்த்திக்கு இரண்டு சிரசும் நாலு கொம்பும் ஏழு புஜமும் மூன்று பாதமு முளவென அறிக). சரியை, கிரியை, யோகம் அனுஷ்டிக்கும்படி செய்யும்.

330. ஏகபாதமூர்த்தி யாவர் ?

சிவபெருமான் சர்வசம்ஹார காலத்தில் எல்லாம் லயமடைய ஏகபாதமூர்த்தியாய் விளங்கும் அவசரம். ஞான பாதத்தினை அனுஷ்டிக்கச் செய்யும்.

331. பைரவமூர்த்தி யாவர் ?

இரணியாக்ஷன் குமாரனாகிய அந்தகாசுர சம்ஹாரத்தின் பொருட்டு எழுந்தருளிய அவசரமாம். சர்வபந்தக நிவர்த்தி

332. இடபாரூடமூர்த்தி யாவர் ?

திரிபுரதகன காலத்து விஷ்ணு, சிவபெருமானுக்குத் தருமதேவதை விடையாய் அநாதி தொட்டிருப்பதையறிந்து, தான் அவ்விடைபோலாகி எம்பெருமானைத் தாங்கினர். அம்மால்விடையின்பேரில் ஆரோகணித்த மூர்த்தமே இடபாரூட மூர்த்தியாம். ஆசாரியன் பிரசாதிக்க வேண்டுமென்று திருவருள் கொண்டு வருவர்.

333. கங்காளமூர்த்தி யாவர் ?

விஷ்ணு வாமனவதாரத்தில் ஓரடியால் பூமியினையும் ஓரடியால் தேவலோகத்தினையும் அளந்து மற்றோரடிவைக்க இடமின்றித் தவித்து அகந்தைகொண்டு உலகை அழிக்க முயலுகையில் சிவபெருமான் வச்சிரதண்டத்தால் வாமனனைச் சம்ஹரித்து முதுகெலும்பைக்கொண்ட அவசரம். இம்மூர்த்தியை உபாசிப்போர் வைராக்கியத்தை அடைவர்.

334. காமாரி யாவர் ?

அம்மையாரைப் பிரிந்து அண்ணலார் பதார்த்தத்திரய போதகம் நால்வருக்கு உபதேசித்து நிட்டையிலிருந்த

காலத்து உலகம் நடைபெறு திருத்தலைத் தேவர்கள் கண்டு மதனனையேவி புஷ்பபாணம் அண்ணலார்பால் பிரயோகிப்பிவிக்க அண்ணலார் அநங்கனை அழலாக்கின திருக்கோலமாம். ஆன்மாக்களுக்கு மன்மதபீடை நிவாரணம்.

335. காலசம்ஹார மூர்த்தி யாவர்?

ஸ்ரீ மார்க்கண்டேயருக்கு "என்றும் பதினாறு" கொடுத்துக் காலனைச்சாய்த்த மூர்த்தியாம். காலாரி எனவும் கூறுவர் - காலபய நிவர்த்தி.

336. சலந்தராரி யாவர்?

ஸ்ரீ ருத்ரமூர்த்தியின் வேர்வையிற்றோன்றி, சமுத்திர ராஜனால் வளர்க்கப்பட்டு, பிருந்தையை மணந்து, பிரமனால் சலந்தரன் என அழைக்கப்பட்டு, தேவர்களைத் துன்பப்படுத்திவந்த அசுரன், சிவபெருமான் பாதத்தாற்கீறிய சக்கரமொன்றை எடுக்க அதுவே அவனைச் சங்கரித்தது. அவ்வாறு வதம் செய்வித்த மூர்த்தியே சலந்தராரி எனப் பெயர் பெறுவர். கோபம் நீங்கும்.

337. திரிபுராரி யாவர்?

பொன், வெள்ளி, இரும்பு ஆகிய மூன்று கோட்டைகளையுடைய திரிபுராதிகளைச் சிரித்தெரித்து அமரர் துயர் நீக்கி யருளிய அவசரமே திரிபுராரி, திரிபுரதகன மூர்த்தி எனப் பெயர்பெறும். திரிகுணராகித்ய முண்டாம்.

338. சந்திரசேகரர் யாவர்?

தக்ஷசாபத்தால் நாளொருகலையாய்க் குறையக்கண்ட சந்திரன் சிவபெருமானைச் சரணடைய அவன் நாளொரு

கலையாய் வளர அருள்செய்து தமது திருமுடியில் வைத்த அவசரமேயாம். பவசாகர நீக்கம்.

339. நடராஜமூர்த்தி யாவர்?

பிரணவமே திருவாசியாகவும் பஞ்சாக்ஷரமே திருவுருவாகவும் பராசத்தியே சிற்சபையாகவும் டமருகத்தால் சிருஷ்டியும், அபயாஸ்தத்தால் திதியும், எரியால் சம்ஹாரமும், ஊன்றிய திருவடியால் திரோபவமும், ஸ்ரீ குஞ்சிதபாதத்தால் அனுக்கிரகமும் ஆகிய பஞ்சகிருத்திய தாண்டவஞ்செய்யும் மூர்த்தியாம். சிவானந்த அநுபூதி.

340. கங்காதரமூர்த்தி யாவர்?

கங்கையைத் தமது வேணியிலணிந்த மூர்த்தியாம். சாயுச்சியானந்தத்தில் அழுந்தல்.

341. பிரமன் முதல் சிவமீருகவுள்ள மூர்த்தங்கள் யாவை?

பிரம, விஷ்ணு, ருத்ர, மகேஸ்வர, சதாசிவ, விந்து, நாத, சத்தி, சிவம் என்னும் ஒன்பதுமாம், இத்திருமேனிகளை ஒன்றிலொன்ருகக்கொண்டு பரமாநந்தத் தாண்டவம் நடிக்கும் மூர்த்தி சிவமொன்றேயாம்.

342. சிவஸ்தலங்களைத் தரிசனஞ் செய்யவேண்டிய முறைமை எப்படி?

விநாயகமூர்த்தி, மூலலிங்கம், சபாபதி மூர்த்தம், சோமாஸ்கந்த மூர்த்தம், பரிவார தேவர்கள், மூலஸ்தானம், அம்மையார், சண்டேசுரர், பயிரவர் என்னும் மூர்த்தங்களைக் கிரமமாகத் தரிசிக்கவேண்டும்.

**343.** பரிவார தேவர்கள் யார்?

இருபத்தைந்து மூர்த்தங்களில் சபாபதியும் சோமாஸ்கந்தமூர்த்தமுந் தவிரச் சந்திரசேகரர் முதலிய இருபத்து மூன்று மூர்த்தமுமாம். பிரமதேவன், விஷ்ணு, துர்க்கை, சுப்பிரமண்யர், வீரபத்திரர், நவக்கிரகங்கள், வாமாதி அஷ்ட சத்திகள் பரமேசுரர்களுமாம்.

**344.** எந்தப்புறத்திலிருந்து தரிசிக்க வேண்டும்?

கிழக்கு நோக்கிய சந்நிதியானால் சிவபெருமானுடைய வலப்பக்கமாகத் தென்புறத்தில் நின்று தரிசிக்கவேண்டும். தெற்கு நோக்கிய சந்நிதியானால் சிவபெருமானுக்கு வலப் பாகமாக மேற்புறத்தில் நின்றும், மேற்குநோக்கிய சந்நிதியானால் சிவபெருமானுக்கு இடப்பாகமாகத் தென்புறத்தில் நின்றும், வடக்குநோக்கிய சந்நிதியானால் சிவபெருமானுக்கு இடப்பாகமாக மேற்புறத்தில் நின்றும் தரிசிக்கவேண்டும்.

**345.** துவஜஸ்தம்பத்தில் பணியவேண்டிய கிரமமெப்படி?

கிழக்குநோக்கிய சந்நிதியானால் பலிபீடத்தின் அக்கினி மூலைக்கு எதிராகச் சமீபத்தில் சிரசுவைத்து மார்பு பூமியிலே படும்படி இரண்டு கைகளையும் வடக்காக நேரே நீட்டிப் பின்பு தோள்களிலே மண்படும்படி இரண்டு கைகளையும் தெற்கேநீட்டி இரண்டு காதுகளையும் பூமியிலே பொருந்தச்செய்து அஷ்டாங்க வந்தனஞ் செய்யவேண்டும். கைகளைத் தெற்கே நீட்டும்போது முன்னதாக வலக்கை நீட்டிப் பின்பு இடக்கை நீட்டவேண்டும். காது மண்ணில் பொருந்தச் செய்யும்போது முந்தி வலக்காதும் பின்பு இடக்காதும் பொருந்தவேண்டும். தெற்கு நோக்கிய சந்நிதியானாலும் மேற்குநோக்கிய சந்நிதியானாலும் பலிபீடத்தின்

நிருதிமூலையில் முன்சொன்ள முறைமைப்படியே சிரசு வைத்து நமஸ்காரம் செய்தல் வேண்டும். வடக்கு நோக்கிய சந்நிதியானுல் பலிபீடத்தின் வாயுமூலையில் சிரசுவைத்துக் காலை மேற்காகநீட்டி முன்சொன்னபடி பணியவேண்டும். ஆனுல் பகல் பதினைந்து நாழிகைக்கு மேற்பட்ட காலத்தில் தரிசிக்கப்போனுல் மேற்கே காலை நீட்டக் கூடாமையினுலே அஷ்டாங்க பஞ்சாங்கத்துடன் பணியாமல் நின்றபடி இரண்டு கைகளையுங் குவித்து உச்சியின்மேல் வைத்துக் கொண்டு தரிசிக்கவேண்டும்.

**346.** பகல் பதினைந்து நாழிகைக்குமேல் தரிசனம் செய்வதற்குக் காரணமென்ன?

சூரியகிரகணம், மகாசங்கராந்தி முதலாகிய புண்ணிய காலங்கள் பகல் பதினைந்து நாழிகைக்குமேல் வருமானுல் தரிசிக்கப் போகவேண்டும்.

**347.** சூரிய அஸ்தமனத்தின் பின் தரிசிக்கப்போனுல் எப்படிப் பணியவேண்டும்?

பகல் பதினைந்து நாழிகைக்குமேல் சூரிய அஸ்தமனமாவதற்கு முன்வரையில், அஷ்டாங்கத்துடன் பணியலாகாதேயன்றி மற்றக் காலங்களிலேயெல்லாம் அஷ்டாங்கத்துடனே தான் பணியவேண்டும்.

**348.** அஷ்டாங்க பஞ்சாங்கமென்பதையல்லாமல் வேறு விதமான நமஸ்காரங்களும் உண்டோ?

ஏகாங்கம், துவிதாங்கம், திரிவிதாங்கம் என மூன்றுமாம்.

**349.** மேற்கூறிய நமஸ்காரங்களை முறையே விளக்குக?

சிரசினால் மாத்திரம் வணங்குவது ஏகாங்கமாம். சிரசின்மேல் வலக்கரத்தைக் குவித்து வணங்குவது துவிதாங்கமாம். இரண்டு கைகளையும் சிரசின்மேல் குவித்து வணங்குவது திரிவிதாங்கமாம். பஞ்சாங்கமாவது சிரமும், இரண்டு கைகளும், இரண்டு முழந்தாள்களும் பூமியின்மேல் படும்படி வணங்குதலாம். அஷ்டாங்கமாவது சிரம், இரண்டு கைகள், இரண்டு முழந்தாள்கள், இரண்டு காதுகள், நெற்றி இவைகள் பூமியிற்படிய வணங்குதலாம்.

**350.** பிரதக்ஷணம் செய்யவேண்டிய முறைமை எப்படி?

காமியத்தை விரும்பினவர்கள் வலமாகவும், மோக்ஷத்தைப் விரும்பினவர்கள் இடமாகவும், காமியத்தையும், மோக்ஷத்தையும் வீரும்பினவர்கள் வலமிடமாகவும் பூரண கர்ப்பவதி எண்ணெய் நிறைந்த குடத்தைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு காலில் விலங்கு பூட்டப்பட்டவளாய் நடப்பதுபோல அதிக மெதுவாய்ப் பிரதக்ஷணஞ் செய்ய வேண்டும். அப்போது பரமசிவனது பாதங்களைச் சிந்தித்துக்கொண்டும் செபவடங் கையிலே வைத்துக்கொண்டும் பஞ்சாக்ஷர செபஞ்செய்துகொண்டும் இரண்டு கைகளையும் மார்புக்குச் சரியாக வைத்துக்கொண்டும் வரவேண்டும்.

**351.** சிவசந்நிதியில் எத்தனை பிரதக்ஷணம் செய்ய வேண்டும்?

மூன்று அல்லது ஏழு பிரதக்ஷணஞ் செய்யவேண்டும். இந்தத் தொகைக்கு மேற்படவும் செய்யலாம்,

**352.** எந்தக்காலங்களில் ஆலயத்துக்குப் போகவேண்டும்?

காலை, உச்சி, அந்தியென்னும் திரிசந்தி காலங்களிலும் போகலாம்.

353. இந்த மூன்றுகால மல்லாதகாலத்தில் தரிசனஞ் செய்ய ஆலயத்துக்குப் போகலாகாதோ?

கிரகண புண்ணியகாலம், சங்கராந்தி புண்ணியகாலம் நேரிடுமாகுல் தரிசனஞ்செய்யப் போகலாம்.

354. எந்த ஆவரணங்களில் பிரதக்ஷணம் செய்ய வேண்டும்?

முதலாவரணந் தவிர மற்ற ஆவரணங்களில் பிரதக்ஷணஞ் செய்யலாம்.

355. முதலாவரணம் நீங்கலாகச் சொன்னதென்ன?

முதலாவரணத்தில் ஆதி சைவப்பிராமணர்கள் பிரதக்ஷணம் செய்யலாமேதவிர மற்றவர்கள் யாவரும் போகக்கூடாதென்று ஆகமங்கள் சொல்லுகின்றன.

356. ஆவரணங்களின் முறைமை எப்படி?

சிவலிங்கப்பெருமானைக் கர்ப்பக்கிரகத்தில் சூழ்ந்து வரத்தக்கதாக இருப்பதே முதலாவரணம், மற்றைய ஒன்றின்பின் ஒன்ருய் இரண்டு முதல் ஐந்து ஆவரணங்களாம். அதற்கப்பால் ஊரின்புலமே ஆருமாவரணம்.

357. முதலாவரணத்தில் பிரதக்ஷணஞ் செய்யத்தக்க ஆதி சைவப் பிராமணர்கள் மற்ற ஆவரணங்களிற் பிரதக்ஷணஞ் செய்யலாகாதோ?

முதலாவரணத்திற் பிரதக்ஷணஞ் செய்வதினுல் வரும் பலனுக்குமேல் அதிகபலன் வருமென்று ஒன்றுக்கொன்று உயர்த்திச் சொல்லி இருப்பதினுல் ஆதிசைவரு மற்ற ஆவரணத்திற் பிரதக்ஷணஞ்செய்தால் விசேஷமான பலன் பெறுவார்கள். இப்படி வரும் ஆவரணங்களில் ஸ்தூபி

நிழலாவது, துவஜஸ்தம்ப நிழலாவது நேரிடுவதாயிருந்தால் அந்த ஆவரணத்தைவிட்டு அப்புறத்திலிருக்கும் ஆவரணத்தில் பிரதக்ஷணஞ் செய்யவேண்டும். சுவாமி உத்சவங் கொண்டருளுகிற காலத்தில் சுவாமியின்பின் வரும்போது மேற்சொன்ன நிழலிருக்குமானாலும் குற்றமில்லை.

**358.** பிரதக்ஷணம் இத்தனை நாழிகை செய்யவேண்டும் என்கிற நியதியுண்டோ?

ஒருஜாமப்பொழுதளவு செய்யவேண்டும்; அவ்வாறு செய்பவர்கள் ஜெனனமரணம் நீங்கிச் சிவலோகம் அடைவார்கள்.

**359.** சோமசூத்திர பிரதக்ஷணமென்பது யாது?

அதாவது பிரதக்ஷணஞ்செய்யத் தொடங்கும்போது நந்திதேவரைத் தரிசித்துக்கொண்டு அங்கிருந்தபடியே இடமாகச்சென்று சண்டேச நாயனாரைத் தரிசித்துச், சென்ற வழியே திரும்பிவந்து மறுபடியும் நந்திதேவரைத் தரிசித்து அங்கிருந்து வலமாகச்சென்று சண்டேச நாயனாரைத் தரிசித்துத் திரும்பிவந்து நந்திதேவரைத் தரிசித்துப் பின்பு சிவலிங்க தரிசனஞ்செய்து பணியவேண்டும். இவ்வாறு ஒரு பிரதக்ஷணஞ்செய்தால் அனந்தம் பலனுண்டு. பிரிந்து வருகின்றபடியே பிரதக்ஷணஞ் செய்யவேண்டும். இந்தப் பிரதக்ஷணம் பிரதோஷ காலத்தில் செய்தால் விசேஷமான பலனுண்டு.

**360.** பிரதோஷ காலமாவது எது?

பகல் இருபத்தாறேகால் நாழிகைக்கு மேற்பட்ட மூன்றேமுக்கால் நாழிகையளவும் சூரியாஸ்தமனமான மூன்றேமுக்கால் நாழிகைக்கு உட்பட்டதுமான காலம்

பிரதோஷகாலம். இக்காலத்திற் சிவதரிசனஞ் செய்வது முக்கியமானதால் சிவனடியார்களா யுள்ளார் யாவரும் அவசியம் சிவதரிசனம் செய்யவேண்டும்.

361. பிரதோஷம் என்பதற்குப் பொருளென்ன?

இராத்திரியின் முன் என்பதாம். சம்ஸ்கிருதத்தில் ரசனிமுகம் என்று சொல்லப்படுகின்றது. இவ்வாறு சொல்லப்படுகின்ற பிரதோஷகாலம் திரயோதசி திதியில் சிறந்தது. பிரதோஷ விரதமும் இந்தத்திதியில் அனுஷ்டிக்க வேண்டும்.

362. திரயோதசி திதியிற் சிறந்ததற்குக் காரணமென்ன?

கங்காதரமூர்த்தியாகிய பரமசிவன் ஆலகால விஷமுண்டருளினபோது ஒரு க்ஷணநேரம் சும்மாவிருந்தார். அன்று ஏகாதசிதிதி. அப்போது தேவர்கள் பரமசிவனை அருச்சித்துக் கொண்டிருந்து மறுநாள் துவாதசி திதியில் பாரணஞ்செய்து பூர்த்தியடைந்தார்கள். அன்று மறுநாள் திரயோதசி திதி பிரதோஷகாலத்தில் பரமசிவன் பராசத்தி எதிரில் சூலஞ் சுழற்றிக்கொண்டு கயிலாசகிரியில் ஒரு ஜாமம் நடனஞ் செய்தருளினுர். இந்தக் காரணத்தினுல் திரயோதசி திதி பிரதோஷகாலத்தில் சிவதரிசனஞ் செய்கின்றவர்கள் நந்திதேவரைத் தரிசித்து நந்திதேவருடைய இரண்டு கொம்பு மத்தியில் பிரணவ சகிதமாக அரகரவென்று சொல்லிக்கொண்டு சிவலிங்க தரிசனஞ் செய்யவேண்டும். இவ்வாறு தரிசிக்கும் சிவனடியார்கள் சிவசாரூபம் பெறுவார்கள். சனிப்பிரதோஷம் மிகுந்த சிறப்புள்ளதாக ஆகமம் சொல்லுகின்றது. சிவலிங்க தரிசனஞ் செய்கின்றவர்கள் வில்வத்தினுல் சிவார்ச்சனை செய்விக்கவேண்டும். பிரதோஷவிரத மனுஷ்டிப்பவர்கள்

சிவதரிசனஞ்செய்து பின்பு போஜனஞ் செய்யவேண்டும். சிவனடியார்களுக்கு அமுதுபடைத்துப் பின்பு புசிப்பது உத்தமம்.

363. பிரதோஷ விரத மனுஷ்டித்துப் பேறுபெற்றவர்கள் யாவர்?

உஜ்ஜெனிமாகாளம் என்னும் நகரத்துக்கு அரசனாகிய சந்திரசேன மகாராஜன் சனிப்பிரதோஷ விரதம் அனுஷ்டித்து இம்மையில் அரசர்களெல்லாம் தன்னை வணங்கும்படி செங்கோல் செலுத்திச் சிவபதம் பெற்றான். இந்த ராஜன் பூஜைசெய்ததைப்பார்த்த ஒரு இடைப்பிள்ளைக்குப் பக்தியுண்டாகி வீதியில் மணலினால் ஆலயம் முதலானவைகளும் அமைத்துக்கொண்டு ஒரு சிலையை நாட்டிச் சிவலிங்கமாகப் பாவித்துப் பூசைசெய்து பேறுபெற்றான். இன்னும் பலர் இவ்விரதம் அனுஷ்டித்துப் பேறுபெற்றார்கள்.

364. இவ்விரதம் நிறுத்திவிடுவதானால் யாதுசெய்தல் வேண்டும்?

பிரதோஷ விரத மிருப்பவர்கள் தேக அசக்தியினால் நிறுத்திவிடுகிறதா யிருந்தாலும் மேலும் இடைவிடாமல் அனுஷ்டிப்பதா யிருந்தாலும் உடனுக்குடன் உத்தியாபனஞ் செய்யவேண்டும். அப்படிச் செய்யாமலிருந்து தேகம் நழுவிவிடுமானால் விரதபலன் சித்தியில்லையாம். ஆதலினால் ஆகம விசாரணை யுள்ளவர்களால் தெரிந்துகொண்டு நடக்கவேண்டும்.

365. சிவதரிசனஞ் செய்யும்போது நந்திதேவருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கும் மத்தியில் ஏன் போகலாகாது?

அப்படிப்போவது முப்பத்திரண்டு குற்றங்களில் ஒன்ரும். ஆதலால் போகலாகாது.

366. மேற்கூறிய முப்பத்திரண்டு குற்றங்கள் எவை?

நந்திதேவருக்கும் சிவலிங்கப்பெருமானுக்கும் மத்தியிற் போதல், தரிசனைசெய்தபின் புறங்காட்டிவருதல், ஒருகை குவித்து தரிசித்தல், ஒரு பிரதக்ஷணஞ்செய்தல், மேலே யுத்தரீயம் போட்டுக்கொண்டு தரிசித்தல், கோபுரச்சாயை கடத்தல், கோயிலில் உண்ணுதல், நித்திரைசெய்தல், நின்மாலியத்தைத் தாண்டுதல், அதனைத் தீண்டுதல், கையினுல் விக்கிரகங்களைத் தீண்டுதல், ருத்திரகணிகை யரைக் கையினுல் தீண்டுதல், அவர்களோடு பேசுதல், நோக்குதல், வீணுனவார்த்தைகள் பேசுதல், கோயிற்காரிய மல்லாத சொல்லைச் சொல்லுதல், தான் சொல்லாவிட்டா லும் ஒருவர் சொல்லுவதைக் கேட்டல், உத்தமர்களை அவமதித்தல், அற்பர்களை மதித்துப்பேசுதல், அவ்விடத்தி லிருக்கும் சிவசொத்தாகிய பொருளை அபேக்ஷித்துப் பார்த் தல், வேதங்களால் சொல்லப்படாத சிறுதெய்வங்களைப் பணிதல், வேதமுதலான கலைகள் பாடமோதுதல், உன்னத ஸ்தானத்திலிருத்தல், ஆசனத்திலிருத்தல், ஒருவரைப் பார்த்து நகைத்தல், பிணங்குதல் முதலான துர்க்குணங் களைப் பாராட்டுதல், அருட்பாக்களையன்றி மற்றப்பாடலை மதித்துக்கேட்டல், சண்டேசுவரரிடத்தில் வஸ்திரத்தின் நூல் கிழித்துவைத்தல், பலிபீடத்துக்கும் சந்நிதானத்துக் கும் மத்தியில் மற்றவரை வணங்குதல், திருக்கோயிலினுள் பொடி முதலிய போடுதல், திரிசந்தியல்லாத காலங்களில் ஆலயத்திற் செல்லுதல், இரண்டொரு பிரதக்ஷணம் செய்தல், சிரேஷ்டமல்லாத கீர்த்தனங்கள் பாடுதல் என் னும் இவைகளாம்.

367. அன்றிச் சிவதீர்த்தத்திலும், நந்தனவனத்திலும் செய்யத்தகாத காரியம் என்ன?

சிவதீர்த்தத்தில் உமிழ்நீர் துப்பலாகாது, மூக்குச்சிந்தலாகாது, மற்றுமுள்ள அசுசியான காரியம் செய்யலாகாது. நந்தனவனத்தும் இப்படியே.

368. நந்தனவனம் சிரேஷ்டமானதற்குக் காரணம் என்ன?

சிவார்ச்சனைக்கு யோக்கியமான பூச்செடிகளையுடையதாகையால் சிரேஷ்டமாயது. இதுவுமன்றிப் பரமசிவன் சில மலர்களிலும், பராசக்தி சில மலர்களிலும் வாசமாயிருப்பதனாலும் சிரேஷ்டமாயது. இதன் விபரம் புட்பவிதியில் கண்டுகொள்க.

369. சிவலிங்கப்பெருமானிலும் பேதமிருக்குமோ?

மனிதர்களாலும், முனிவர்களாலும், தேவர்களாலும், சிவகணங்களாலும் ஸ்தாபனஞ்செய்த லிங்கங்களுமன்றி, சுயம்புமூர்த்தியாகப் பூமியிலிருந்து உண்டான லிங்கம் ஒன்றும் ஆக ஐந்துவகை உண்டு. இவ் ஐந்துவகை சிவலிங்கங்களையும் தரிசிக்கலாம்.

370. ஆனால் தரிசனத்தினால் உண்டாகும் பலன் சமமாயிருக்குமா?

ஒன்றுக்கொன்று அதிகமாயிருக்கும். மனிதர்களால் ஸ்தாபிக்கப்படும் சிவலிங்கத்தையும் மற்றச் சிவலிங்கங்களுடன் சேர்த்துச் சொல்லியிருப்பதனால் அவர்களைச் சாமானியமாக நினைக்கப்படாது. சேர, சோழ, பாண்டிய இராஜாக்கள் முதலானோர் க்ஷத்திரியர்களேயாயினும் இவ் அரசர்களிடத்தில் சிவநேசமும், ராஜநீதி முதலான தருமமும் விசேஷமாயிருந்ததனால் இவர்களுக்குப் பரமசிவ

னுடைய திருவருள் பூரணமாகக் கிடைத்திருந்தது. இவர்களுக்கும் சாபானுக்கிரகம் உண்டு.

371. மற்ற மனிதர்களால் ஸ்தாபிக்கப்படாதோ?

சிவதரிசனத்துக்குச் சமீபத்தில் ஆலயம் இல்லாத கிராமங்களாயிருந்தால் சிவப்பிரதிஷ்டை செய்யவேண்டியதுதான். கிலமான ஆலயங்கள் இருக்குமானால் அதைத் தள்ளிப் புதியதாகப் பிரதிஷ்டை செய்விக்கலாகாது. அப்படி ஸ்தாபிக்கும் இடத்தில் ஆதிசைவப் பிராமணரைக் கர்த்தாவாக நியமிக்கவேண்டும். நூதனமாக ஆலயம் ஏற்படுத்திச் சிவலிங்கம் ஸ்தாபிப்பவர்கள் பக்கத்தில் ஒரு லிங்கம் பூசையில்லாமலிருந்தால் அதைக் கொண்டுவந்து ஸ்தாபிக்கலாம்.

கிரியா லிங்கமாயிருந்தால் ஸ்தாபிக்கலாகாது. சுயம்பு லிங்கமானதாயிருந்தால் கொண்டுவந்து ஸ்தாபிக்கலாம்.

372. சுயம்புலிங்கம் பூமியில் தானே உண்டானதாயிருந்தால் அதை எப்படிக் கொண்டுவரலாம்?

இவ்விடத்தில் சுயம்புலிங்கம் என்றது கிரியாலிங்கம் போற் செய்யப்படாமல் உண்டாயிருக்கும். அது காசி லிங்கம் என்றும், பாணலிங்கம் என்றும் சொல்லப்படும்.

373. பாடல்பெற்ற ஸ்தலங்களிலிருக்கும் ஆலயங்களுக்கு அபாயம் நேரிடுவதாயிருந்தால் என்செய்வது?

அக்காலங்களில் அங்கிருக்கும் சுயம்புமூர்த்தி சலனப் படுத்தத் தக்கதாயிருந்தால் வேறே ஆலயம் ஏற்படுத்தி, அந்தச் சிவலிங்கத்தைக் கொண்டுவந்து ஸ்தாபிக்கலாம். சலனப்படுத்தக்கூடாததாயிருந்தால் வேறே லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டாலும் சுயம்புமூர்த்தியேயாம்.

**374.** பரமசிவன் எந்தச் சிவலிங்கத்தினிடத்தில் விசேஷ மாய் மூர்த்திகரித்திருக்கிறார்?

சுயம்புலிங்கத்தில் சர்வதாகாலமும் மூர்த்திகரித்திருக் கிறார்.

**375.** பரமசிவன் எங்கும் பரிபூரணமாயிருக்க சிவாலயத் தில் சிவலிங்கத்தினிடமாக மூர்த்திகரித்திருக்கிறார் என்பதற்குத் திருஷ்டாந்தம் என்ன?

பசுவின் சரீரம் எங்கும் பாலானது வியாபித்திருந்தா லும் அதன் முலைக்காம்பினாலேயேயன்றி அப்பாலை அடை வது கூடாது; அதுபோல, சிவலிங்கத்தினிடத்திலேயன்றி அப்பெருமானை அடைவது கூடாது.

**376.** திரிசந்தி காலங்களில் சிவதரிசனம் செய்வதில் இன்னகால தரிசனத்தினால் இன்னபலன் சித்தியாம் என்கிறது உண்டா?

காலை சந்நிதியில் தரிசித்தால் அன்று நேரிடும் பாவம் நிவர்த்தி என்றும், உச்சிக்கால தரிசனத்தால் அந்தச் சென்மத்தில் நேரிடும் பாவம் நிவர்த்தி என்றும், சாயங்கால தரிசனத்தால் செனனங்கள்தோறும் நேரிட்ட பாவங்கள் நிவர்த்தி என்றும் அறிந்துகொள்க.

**377.** சிவபெருமான் சந்திரனைச் சடைமுடியில் ஏன் தரித்துக்கொண்டிருக்கிறார்? அதுவும் ஒரு கலையுள் ளதாயிருக்கின்றதே யல்லது சோடசகலையுள்ள தாக இருக்கவில்லையே?

தக்கன் தன்னுடைய இருபத்தேழு பெண்களையும் சந்திரனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தபோது இவர்கள் எல்லாரிடத்திலும் ஒரே தன்மையான இஷ்டமுள்ளவனாய்

இரு என்று சொல்லி, அவ்வண்ணமாகயிருந்த சந்திரன் தன் ஸ்திரீகளுள் மிகுந்த சவுந்தரியமுள்ள கார்த்திகை, உரோகணி என்னும் இரண்டு ஸ்திரீகளிடத்தில் மாத்திரம் மிகுந்த இஷ்டமுள்ளவனுய் மற்ற இருபத்தைந்து ஸ்திரீ களிடத்திலும் இஷ்டமில்லாதவனுயிருந்தான். அவர்கள் மனம்வருந்தித் தக்கனிடத்தில் சொல்லிக்கொண்டார்கள். அவன் கோபங்கொண்டவனுய்ச் சந்திரனுடைய சோடச கலைகளும் அழிவுறும்படிச் சபித்தான். அந்தச் சாபத்தின் படி தினம் ஒவ்வொரு கலையாகப் பதினைந்து கலை குறையக் கண்ட சந்திரன் துயரங்கொண்டு தேவேந்திரனிடத்தில் சொல்ல, இந்தச் சாபம் என்னுல் நீக்கத்தக்கதல்ல எனப் பிரமதேவனிடத்தில்போய்ச் சொல்லிக்கொண்டான். 'நான் சொன்னுலும் தக்கன் இந்த சாபத்தை நிவர்த்திசெய்ய மாட்டான்; வைகுந்தத்துக்குப்போய் விஷ்ணுவினிடத்தில் விண்ணப்பம் செய்துகொள்' எனச் சந்திரன் அப்படியே செய்ய, தன்னுல் முடியாது ஸ்ரீகைலாயகிரிக்குப்போய் பரமசிவனிடத்தில் விண்ணப்பஞ்செய்துகொண்டால் இச் சாபம் நிவர்த்தியாகும் என்று விண்டு சொல்ல, அதைக் கேட்டுக்கொண்டு சந்திரன் கைலாயகிரிக்குப்போய் பரம சிவனைப் பணிந்து தோத்திரஞ்செய்தான். பரமசிவன் கிருபைகூர்ந்து சந்திரனிடத்திலிருந்த ஒரு கலையினையும் தமது முடியில் தரித்துக்கொண்டு இது உன்னிடத்தில் இருந்தால் தக்கன் சாபம் இதனையும் அழித்துவிடும். இனி நம்முடைய திருமுடியிலிருக்கிற கலையைத் தொடராது. இந்தக் கலை அழியாமலிருப்பதனுல் உனக்கு முன்னிருந்தது போல நாளுக்குநாள் ஒவ்வொரு கலையாக வளர்ந்து சோடச கலைகளும் நிறைவுபடும். அப்படி நிறைந்தாலும் வளர்ந் ததுபோல மறுபடி குறைவுபடுகிறதும் வளருவதுமாக இருக்கும் என்று அநுக்கிரகஞ்செய்தார். சந்திரன்

சந்தோஷத்துடன் சுவாமியைத் தோத்திரஞ்செய்து விடை பெற்றுக்கொண்டு தன் பதவியிற்போய்ச் சேர்ந்தான்.

**378.** பரமசிவன் ஒரு திருக்கரத்தில் மான் தரித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன?

அந்த மான் தாருகாவனத்து ரிஷிகளால் அனுப்பப் பட்டது. அவர்கள் ஏன் அனுப்பினார்களெனில் பரமசிவன் பிக்ஷாடனமூர்த்தமாகத் தாருகாவனத்துக்கு எழுந்தருளின போது ரிஷிபத்தினிகள் கண்டு மோகித்துத் தங்கள் கற்பு குலைந்தார்கள். அதைக்கண்டு தாருகாவனத்து ரிஷிகள் கோபமுடையவர்களாய் ஒரு வேள்விசெய்து அதிலுண்டான புலியைநோக்கிச் சிவனைக் கொல்லும்படி யேவ அதனைக்கொன்று தோலை ஆடையாக அணிந்து கொண்டனர். பின்னுமந்த வேள்வியில் மானுண்டாகிவர அதனை இடக்கையில் வைத்துக் கொண்டருளினர். பின்பு மழுவுண்டாய் வந்தது. அதனை ஆயுதமாக வைத்துக் கொண்டார். பின்பு சர்ப்பங்களுண்டாய்வர அவைகளை ஆபரணமாகத் தரித்துக்கொண்டார். பின் முயலகன் என்னும் அசுரன் உண்டாகிவர அவனைக் கீழேதள்ளி முதுகிலேறி நின்றார். மந்திரங்களை ஏவினார்கள்; அவைகள் டமருக ரூபங்கொண்டுவர திருக்கரத்தில் வைத்தருளினார்.

**379.** மீன்கண், ஆமையோடு, பன்றிக்கொம்பு, எலும்பு மாலை, கையில் கபாலம் இவைகளை ஏன் தரித்துக் கொண்டிருக்கிறார்?

விஷ்ணு கடலில் மச்சாவதாரங்கொண்டு வேதங்களை யபகரித்துக் கொண்டுபோன ஒரு அசுரனை வதைத்து இரத்த வெள்ளங் குடித்து மயக்கமுற்று உலகம் வருந்தும் படிக் கடலைக் கலக்கியபோது தேவர்கள் கயிலையிற்சென்று

தாங்கள் வந்தகாரியத்தை விண்ணப்பஞ் செய்துகொள்ளச் சுவாமி கிருபைகூர்ந்து ஒரு வயிரவரை அனுப்ப அவர்போய் வலைவீசி அந்த மீன்கண்களைப் பெயர்த்துக் கொண்டுவர அவைகளைத் தேவர்கள் வேண்டுதலினால் தமது ஸ்ரீபாதங் களிலே தரித்துக் கொண்டருளினார்.

அமிர்தம் உண்டாகும்படித் தேவர்கள் பாற்கடலில் மந்தரகிரியை மத்தாகநாட்டி வாசுகியாகிய பாம்பினைத் தாம்பாகச் சுற்றி வலிக்கும்போது அந்த மந்தரகிரி கடலிலாழ அதைக்கண்ட தேவர்கள் விஷ்ணுவைத் தோத்திரஞ்செய்ய அவர்வந்து ஆமையாகி மந்தரகிரி தன் முதுகில் நிற்கும்படித் தாங்கினகாலத்தில் மமதைகொண்டு கடலைக்கலக்க அதைக்கண்ட தேவர்கள் கயிலாயபதிக்கு விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்கள். சுவாமி கிருபை கூர்ந்து விநாயகரை அனுப்ப அவர்போய்த் தம்முடைய துதிக்கையை நீட்டிக் கடல்நீரை எல்லாம் உறிஞ்சுகையில் ஆமையும் அந்தத் துதிக்கைக்குள் போய்விட்டது. பின்பு விநாயகர் நீரைச்சிந்தினார். அந்த நீருடன் ஆமையும் வெளியேவந்து விழுந்து மதிமயங்கிக்கிடக்க அதை விநாயகர் கண்டு அதன் ஓட்டினைத் தன்னுடைய தந்தத்தினால் பெயர்த்துக் கொண்டுவந்து சுவாமிக்குக் காணிக்கையாகக் கொடுக்க, கண்டு மகிழ்ந்து தேவர்கள் வேண்டுதலினால் தலை மாலையுடன் அந்த ஆமையோட்டையும் மார்பில் தரித்துக் கொண்டருளினார்.

இரணியாட்சனென்னும் ஒரு அசுரன் பிரமதேவனை நோக்கித்தவஞ்செய்து வரம்பெற்றுக்கொண்டு போகிறவன் பூமியைக் கவர்ந்துகொண்டு போய்விட்டான். அதை யறிந்து விஷ்ணு வராக அவதாரஞ்செய்து அவனைக் கொன்று மமதையடைய, தேவர்கள் கயிலாயபதிக்கு

விண்ணப்பம் பண்ணிக்கொண்டார்கள். பரமசிவன் திருவுளமிரங்கிச் சுப்பிரமணியரையனுப்ப அவர்போ யந்தப் பன்றியின் தலையை வேலினுல் குத்தி யமுக்கி யதன் கொம்பினைப் பறித்துக்கொண்டுவந்து சுவாமியினிடத்தில் வைக்க அதை முன்போலத் தரித்துக்கொண்டார்.

பிரம விஷ்ணுக்களை யுண்டாக்கி யவர்களில் பிரமனைக் கொண்டு சிருட்டித்தும் விஷ்ணுவைக்கொண்டு இரக்ஷித்தும் பின்பு சங்கரித்தும் பலவாறு இம் முத்தொழில்களைச் செய்கையில் பிரம விஷ்ணுக்களை முடிவான காலத்தில் சங்கரித்து அவர்கள் எலும்புகளையும் சிரங்களையும் மாலைகளாக அணிந்தருளினுர். அவர்களுக்கு நன்மையுண்டாக வேண்டுமென்று தரித்துக்கொண்டதே யல்லது பெருமை பாராட்டுக்காகத் தரித்துக்கொண்டதே யல்ல. முன்பொரு கற்பமுடிவில் இவர்களையெல்லாம் நெற்றிக்கண் பொறியால் நீறுபடுத்தி யந்தப் பொடியைத் தமது திருமேனியில் தரித்துக்கொண்டருளினுர். இதுவும் அவர்களுக்கு நன்மையுண்டாக வேண்டுமென்கிற காருண்யமேயாம்.

முன்னொரு காலம் பிரமா அகந்தைகொண்டிருக்க அதையடக்கும்பொருட்டு அவருக்கிருந்த ஐந்து தலையில் நடுத்தலையைக் கிள்ளிக் கையிற்கபாலமாக வைத்தருளினுர். அதுமுதல் பிரமனுக்குச் சதுர்முகனென்று பெயராயது. பரமசிவன் சிரமாலை யணிந்திருப்பதனுல் சிரமாலியென்றும் கபாலந் தரித்துக்கொண்டிருப்பதனுல் காபாலியென்றும் பெயருண்டாயது.

**380.** கண்டத்தில் விஷம்பொருந்தி யிருப்பதற்குக் காரணமென்ன?

தேவர்கள் அமிர்தமுண்டாவதற்காகப் பாற்கடல் கடைந்தபோது ஆலகாலவிஷமுண்டாயது. அதைக்கண்டு

தேவர்கள் முறையிட அவர்களை இரக்ஷிக்கும்பொருட்டு விஷத்தைக் கண்டத்தில் வைத்தருளினுர். இந்தக்காரணத்திஞல் காளகண்டன், கறைமிடற்றன், நீலகண்டன் எனப் பெயர் பெறுவர்.

381. பரமசிவனுக்கு ரிஷபவாகனம் உண்டானதற்குக் காரணமென்ன ?

தருமதேவதையானது பிரம விஷ்ணு முதலானவர்களெல்லாம் அழிந்துபோவதைக்கண்டு தானவ்வாறு மாண்டுபோகாமல் என்றும் நித்தியமா யிருக்கவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு ரிஷபரூபமாகிப் பரமசிவனிடத்திற்சென்று பணிந்து "கர்த்தனே i நானிறவாமலிருக்கும்படி அடியேனை வாகனயாகக் கொண்டருள வேண்டு"மென்று தோத்திரஞ்செய்ய சுவாமி கிருபைகூர்ந்து அதனைத் தமக்கு வாகனமாகக் கொண்டருளினுர்.

382. இன்னும் யார் ரிஷபமானது ?

விஷ்ணு திரிபுரசம்ஹார காலத்தில் ரிஷபமாகிக் கயிலாயபதி தன்னை வாகனமாகக் கொண்டருளும் பேறு பெற்றுர்.

383. பரமசிவன் வீணுதண்டம் வைத்திருக்கக் காரணமென்ன ?

விஷ்ணு வாமனுவதாரத்தில் விஸ்வரூபம் கொண்டபோது மமதையடைந்து உலகினையழிக்க முயலுகையில் சிவபெருமான் திருவுளமிரங்கி வைரவரை யனுப்ப, அவர் அந்த விஸ்வரூபத்தைச் சம்ஹாரம் செய்து அதன் வீணுதண்டத்தைக் கொண்டுவந்து எம்பெருமானிடத்தில் வைக்க, சுவாமி அதனைத் தனக்கு ஒரு கோலாக வைத்துக் கொண்டார்.

384. பரமசிவனுக்குச் சிம்ஹாசனம் இருப்பதற்குக் காரணம் என்ன ?

இரணியனைக் கொல்லவந்த விஷ்ணு நரசிம்மாவதாரம் செய்து அவனைக்கொன்று மமதையடைய, தேவர்கள் கயிலாயபதிக்கு விண்ணப்பித்துக்கொள்ள, அவர் சரப ரூபமெடுத்து அச்சிம்மத்தின் தலையைப்பிளந்து இரத்தத்தைக் குடித்துக் கொன்றனர். தேவர்கள் அதன் தோலையுரித்துச் சுவாமிக்குத் தவிசாக வைத்துச் சுவாமியை வேண்டிக்கொள்ள அவரும் அவ்வாறே அங்கீகரித்தனர்.

385. பரமசிவன் யானைத்தோல் போர்த்திருப்பதற்குக் காரணமென்ன ?

யானைரூபமாகத் தோற்றிய கஜாசுரனென்பவன் பிரமதேவனை நோக்கித் தவஞ்செய்து தேவர்களையெல்லாம் வென்று ஜயம்பெற வேண்டுமென்கிற வரங்கேட்டான். பிரமதேவன் அப்படியே வரங்கொடுத்து, 'பரமசிவன் எதிரில் போகாதே! போனால் இந்தவரம் அழிந்துபோம்' என்று சொல்லக் கேட்டுக்கொண்டு போனவன் தேவேந்திரன் முதலானவர்களுடன் யுத்தஞ்செய்து வென்று திரியும்போது, முனிவர்கள் கண்டு பயந்து ஓடிக் காசி சேர்ந்தார்கள். அங்குமவர்களைத் தொடர்ந்து சென்றான். அவர்கள் கண்டு பயந்து மணிகர்ணிகையென்னும் ஆலயத்துக்குப் போய்ப் பரமசிவனைச் சரணாகதியடைந்தார்கள். கஜாசுரனுக்குக் காலமுடிவு நேரிட்டதனால் பிரமதேவன் சொன்னதை மறந்து அங்குஞ்சென்று முனிவர்களைக் கொல்லவேண்டுமென்று உறுமுகிறபோது சுவாமி கோபத்துடன் உக்கிரமூர்த்தியாய்க் கஜாசுரன் மத்தகத்தை மிதித்து உடலைக் கிழித்துத் தோலையுரித்துப் போர்த்தருளினார்.

386. சிவபெருமான் கொக்கிறகைத் தரிக்குங் காரண மென்ன ?

குண்டாசுரனென்னும் ஓரசுரன் கொக்கு ரூபமாயிருந்து அண்டமனைத்துங் கொரித்துக்கொரித்து, தேவர்களைவருத்தி வந்தமையால் சிவபெருமான் அவனைச் சம்ஹாரம்செய்து அவனது இறகை யணிந்தருளினர்.

387. இவைகளுக்கெல்லாம் பிரமாணங்களுண்டோ ?

உபநிஷத்துப் பிரமாணங்களன்றி மஹாவிஷ்ணுவின் அவதாரமாகிய ஸ்ரீ வியாசபகவான் செய்தருளிய புராணங்களும் பிரமாணங்களாம்.

388. சிவபூஜை செய்யத்தக்க மூர்த்தங்களெவை?

மானதம், மண்டலம், பலகையிலும் படத்திலும் சுவரிலும் எழுதிய சித்திரங்கள், விக்கிரக சொரூபங்கள், படிகலிங்கம், பாணலிங்கம், க்ஷணிகலிங்கம் இவை முதலியனவும் பூசிக்கத்தக்க மூர்த்தங்களாம்.

389. மானத பூசையாவதென்ன ?

மனதினலே அபிஷேகமுதலிய பூசையைப் பாவனையாகச் செய்தலாம்.

390. மண்டல பூசையாவதென்ன ?

மண்டலேசுரரைப் பூசித்தலாம்.

391. க்ஷணிகலிங்க பூசையாவதென்ன ?

பார்த்திபலிங்க பூசையாம்.

**392.** மேற்கூறிய பூசைகளிற் சிறந்தது எது?

பிடிகலிங்க பூசையும் பாணலிங்க பூசையுமே சிறந்தது.

**393.** பாணலிங்கங்களென்பன யாவை?

பாணன் என்னுமொரு அன்பனாலே பூசிக்கப்பட்டவையாம்.

**394.** இவ்விலிங்கங்கள் எவ்விடத்தில் இருக்கின்றன?

கண்டகி என்னும் நதியில் எடுக்க எடுக்க மாறாமல் இருக்கின்றன.

**395.** இந்தப் பூசைகளால் அடையும் பலன் என்ன?

சோடச தானபலனும், இருபத்தொரு யாகபலனும், மகா பாதக விமோசனமும், ஸ்தலங்கள்தோறுஞ் சென்று தரிசிக்கும் பலனும், கங்கை முதலிய புண்ணிய நதிகளில் ஸ்நானஞ்செய்த பலனும் கிடைக்கும்.

**396.** சோடச தானம் என்பன எவை?

அன்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், பூதானம், இரணியதானம், கோதானம், உபயமுகிதானம், மகிஷதானம், அஸ்வதானம், சுவேதாஸ்வதானம், காலதானம், காளமுகிதானம், மகமேருதானம், கற்பகவிருக்ஷதானம், வித்தியாதானம், மகாதானம் என்னும் பதினாறுமாம்.

**397.** யாகம் இருபத்தொன்றுவது யாது?

அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உத்தியம், சோடசம், வாசபேயம், அத்திசாத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூரண

மாசம், சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம், ஸூக்கிரணம், சௌத்திராமணி, அட்டகை, பார்வணம், சிரார்த்தம், சிராவணி, ஆக்கிரகாயணி, சைத்திரி, ஆசுவயசு என்னும் இருபத்தொன்றுமாம்.

398. மகாபாதகங்கள் என்பன எவை?

கொலை, களவு, பொய், கள்ளருந்தல், குருநிந்தை என்னும் ஐந்துமாம். இந்தப் பாதகங்களால் நரகவேதனை உண்டாகும். பிறர் மாதரை இச்சித்தல், பிறர் செய்வதைக் கண்டு பொறாமை கொள்ளுதல், அப்பொருளை அபகரிக்க எண்ணுதல், கோபம், கொடுஞ்சொல், மூர்க்கம், வஞ்சகம், ஒருவர் தனக்குச்செய்த உபகாரத்தை மறத்தல், சிநேகத்தைப் பிரித்தல், இரக்கமில்லாமை இவைகளாலும் நரக வேதனை உண்டாகும்.

## 9. ஸ்தலவியல்

399. புண்ணிய ஸ்தலங்கள் என்பன எவை?

திருஞானசம்பந்த சுவாமிகள், அப்பர் சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்னும் சமயாசாரியர்கள் கட்டளை இட்டருளிய திருப்பதிகம் பெற்று விளங்கும் ஸ்ரீ கைலாச முதலிய ஆயிரத்தெட்டு ஸ்தலங்களுமாம்.

400. மேற்கூறிய ஆயிரத்தெட்டு ஸ்தலங்களுக்கும் இப்போது பதிகங்கள் இருக்கின்றனவா?

274 ஸ்தலங்களுக்கு இருக்கின்றன. இந்த ஸ்தலங்கள் சோழநாட்டில் 190; பாண்டியநாட்டில் 14; மலைநாட்டில் 1; ஈழநாட்டில் 2; கொங்குநாட்டில் 7; நடுநாட்டில் 22; தொண்டைநாட்டில் 32; துளுவநாட்டில் 1; வடக்கில் 5.

401. இப்போது எத்தனை பதிகங்கள் இருக்கின்றன?

795 பதிகங்களாம்.

402. ஆலயங்களிலிருக்கும் மூர்த்திகளிடமாய்ப் பரமசிவன் ஏதாவது மகத்துவம் விளக்கி இருக்கின்றாரா?

விளக்கி இருக்கின்றார். புண்ணிய ஸ்தலங்களில் இருக்கும் ஆலயங்களில் எல்லாம் மகத்துவம் காண்பித்திருக்கிறார். ஆனால் சில புண்ணிய ஸ்தலங்களில் நடந்திருக்கிற மகத்துவம்மாத்திரம் பிரசித்தமாய் வழங்கப்பட்டிருக்கிறது.

403. எந்த ஸ்தலங்களில்?

திருக்கடவூரிலே மார்க்கண்டேயருக்காகச் சிவலிங்கத்தினிடமாய்த் தோன்றி யமனை யுதைத்து அவருக்கு என்றும் பதினாறு வயதாக அருளிச்செய்தார். காளத்தியில் கண்ணப்ப சுவாமிகளுக்குச் சிவலிங்கத்தினிடமாகத் தரிசனங்கொடுத்து மோக்ஷமருளினார். திருவானைக்காவில் ஒரு சிலந்திப்பூச்சிக்குச் சிவலிங்கத்தினின்றுந் தரிசனமாகி ஒரு ராஜனாகப் பிறக்கும்படிக் கடாக்ஷிக்க, அப்படியே சோழ வம்சத்திற் பிறந்த கோச்செங்கட்சோழ நாயனாரென்பவர் அநேகம் திருப்பணிகள்செய்து அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரானார். காஞ்சிபுரத்தில் தம்மைக் கல்லாலெறிந்த சாக்கிய நாயனாருக்குச் சிவலிங்கத்தினிடமாய்த் தரிசனமாகி மோக்ஷங்கொடுத்தருளினார். திருவிடைமருதூரில் வரகுண பாண்டியருக்குச் சிவலிங்கத்தினிடமாகத் தரிசனமாகி அனுக்கிரகஞ் செய்தருளினார். திருவிரிஞ்சிபுரத்தில் ஒரு சிறிய பிராமணப்பிள்ளை தம்மைப் பூசிக்கும்படி திருமுடி சாய்த்தருளினார். திருவாலவாய்

என்னும் மதுரையில் அநேகருக்குத் தரிசனமாகி அனுக்கிரகஞ் செய்திருக்கின்ருர். இப்படிப் பூமியிலுள்ள புண்ணியஸ்தலங்களில் அன்பர்களை இரக்ஷிக்கும்படி அவர் காண்பித்திருக்கிற மகிமையையெல்லாம் சொல்ல வேண்டுமாஞல் அளவுபடாது.

404. பரமசிவன் அடியார்களுடைய வினையை நீக்கி இரக்ஷிக்கும்பொருட்டு, மனிதவுருவமாகி ஏதாவது மகத்வம் விளங்கச்செய்தாரா?

அநேகஞ் செய்திருக்கிருர். மதுரையில் அவர் மனிதவுருவமாய் எல்லாம்வல்ல சித்தரென்னும் பெயருடையவராய் வந்தருளிக் கிழவர்களைக் குமரர்களாகச் செய்தும், மலடிகளைப் பிள்ளைபெறச் செய்தும், கூன், குருடு, செவிடு, ஊமை நீக்கியும், நொண்டிகளுக்குக் கால் கூடச்செய்தும், கல்லானை கரும்பு தின்னச் செய்தும் இன்னும் அநேக மகத்துவங்கள் விளங்கச்செய்தருளினுர்.

405. இன்னுமென்ன மகத்துவங்கள் விளங்கச்செய்தார்?

திருவண்ணுமலையில் சந்ததியில்லாமல் நெடுநாளாக மனவருத்தப்பட்டுத் தமக்கு அன்போடு பணிசெய்திருந்த வல்லாள ராஜனுக்குக் குழந்தையாகிப் பிள்ளைக்கலி தீர்த்தருளினுர். திருவிரிஞ்சிபுரத்தில் அம்மார்க்கமாகப் போன வைசியருக்கு வழித்துணையாய்ச்சென்று காப்பாற்றி மார்க்கசகாயரென்னுந் திருநாமம் பெற்றருளினுர். சிதம்பரத்தில் திருநீலகண்ட நாயனுரிடத்துக்கு மனிதவுருவமாக எழுந்தருளி வந்து அவரும் அவருடைய பத்தினியாரும் கிழத்தன்மை நீங்கி இளமையடையும்படிக் கிருபை செய்தருளினுர். சிறுத்தொண்ட நாயனுரிடத்தில் வயிரவ சங்கம ரூபமாக எழுந்தருளி அவருடைய பிள்ளையைக்

கறிசமைத்திடச் சொல்லி மறுபடியும் அப்பிள்ளையைப் பிழைக்கும்படிச் செய்து அவர்களுக்கு மோக்ஷமருளினர்.

**406.** இத்தகைய பெருங்கருணையுள்ள பெருமானை வேதாகமவிதிப்படி அன்புடன் தொழுது துதித்துப் பேறு பெற்ற அடியார்களுமுண்டோ?

அநேகர் இருக்கிருர்கள். அவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்களும், மாணிக்கவாசக சுவாமிகள் முதலானவர் களுமாம்.

**407.** அவர்கள் திருப்பெயர்களைக் கூறும் தேவாரப் பதிகத்தை ஓதுக.

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளருளிய

### திருத்தொண்டத்தொகை

பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
    திருநீல கண்டத்துக் குயவனுர்க் கடியேன்
இல்லையே என்னுதை இயற்பகைக்கும் அடியேன்
    இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
    விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
    ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
    ஏனுதி நாதன்றன் அடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
    கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்

மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

* மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி அப்பூதி யடியார்க்கு மடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 4

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்

* மும்மை — விபூதி, ருத்திராக்ஷம், சடைமுடி.

நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன்
*நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கு மடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக் ‡கழறிற் றறிவார்க்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 6

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்¶சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைகொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைகொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 8

---

* நாட்டம் விளங்கப் பெற்றவர். § திருவம்பர் வாழ்பவர்.
‡ சேரமான்பெருமாள் நாயனார். ¶ வரிஞ்சையூர்ச்சத்தி நாயனார்.

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனுஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடல்சூந்த புலியதள்மேல் அரவாட ஆடிப்
பொனனடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
* முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனும் ஆரூர னடிமைகேட் டுவப்பார்
ஆரூரி லம்மானுக் கன்பரா வாரே. 11

திருச்சிற்றம்பலம்

* இவர்கள் ஆதிசைவப் பிராமணர்கள்.

**408.** பரமசிவம் அநேக தலங்களில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கிறதற்குக் காரணமென்ன?

தேசங்கள் பலவாயிருப்பதனுல் அவ்வாறு திருக்கோயில் கொண்டிராவிட்டால் மனிதர்களுக்குச் சிவதரிசனம் சித்திப்பதருமை. பார்வதிதேவியார் பரமசிவத்தை நோக்கிப் பலவிடங்களில் திருக்கோவில்கொண்டு வீற்றிருப்பதென்ன வென்று வினவினகாலத்துத் தேசங்கள் தோறும் பரவியிருக்கும் புண்ணியான்மாக்கள் அங்கங்கு தரிசிக்கும்பொருட்டாக வீற்றிருப்பதாகப் பரமசிவம் கட்டளையிட்டருளினுர்.

**409.** சிவபுண்ணியம் உண்டாவதற்கு ஏதுவாகிய சிவத்தலங்கள் இன்ன என்று எவ்வாறு தெரியும்?

சைவபுராணம் பத்துக்குட்பட்ட தலபுராணங்களினுலும் தேவாரப்பதிகங்களினுலும் தெரியும்.

**410.** புராணங்களாற் சொல்லப்படும் தலங்களுக்கு எல்லாம் தேவாரமுண்டா?

பூர்வம் எல்லாத்தலங்களுக்குமேயிருந்தது; இப்போது 274 தலங்களுக்கு இருக்கின்றது.

**411.** தலம் என்பது தெய்வத்தை வணங்குவதற்கான ஓரிடந்தானே. சிவத்தலங்களின் விசேஷமென்னே?

இவை ஏனைய மதஸ்தர்கள் தங்களிஷ்டப்படிக் கட்டுகின்ற கோயில்போலன்றும். ஒவ்வொரு தலமும் மானத பூஜையின் உண்மையை விளக்கிச் சிவஞானத்தை உண்டாக்குங் கருவியாயிருத்தலே யறிக. அவ்வாறே உத்சவங்களும் பஞ்சகிருத்தியங்களே உணர்த்துவனவாம்.

412. அற்றேல் சிவாலயங்களில் ஸ்தூலலிங்காதி வைபவங்கள் எதற்கு அறிகுறி?

குண்டலி ஸ்தானம் ஸ்தூலலிங்க கோபுரவாயில் (மூலாதாரம்), உந்திஸ்தானம் பலிபீடம் (சுவாதிஷ்டானம்). ஹிருதயஸ்தானம் துஜஸ்தம்பம் (மணிபூரகம்), கண்டஸ்தானம் நந்திபீடம் (அநாகதம்), வாக்குஸ்தானம் சூக்ஷமலிங்கம் உட்கோபுரவாயில் (விசுத்தி), நாசிஸ்தானம் துவாரபாலகர், புருவ மத்தியஸ்தானம் மகா காரணலிங்க அந்த்ராள கோபுரவாயில் (ஆக்ஞை), இடதுகண் ஸ்தானம் சுப்பிரமணியர் சந்நிதி, வலதுகண் ஸ்தானம் கணபதி சந்நிதி, இடது காது ஸ்தானம் சண்டேசுரர் சந்நிதி, வலது காது ஸ்தானம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதி, மஸ்தகமத்திய ஸ்தானம் நடேசர் சந்நிதி, இடதுபாக மஸ்தகமத்திய ஸ்தானம் பார்வதி சந்நிதி, பிர்மரந்திரம் சிவலிங்க மூலஸ்தானம் என அறிக. பலிபீடம்வரையில் பிருதிவி மண்டலம், துவஜஸ்தம்பமும் நந்தியும் அப்புமண்டலம், துவாரபாலகர் வரையில் வாயுமண்டலம், கணபதிவரையில் அக்கினி மண்டலம், மேல் ஆகாய மண்டலமென அறிக. அன்றி, சிவலிங்கம் - பதி, இடபம் - பசு, பலிபீடம் - பாசம் எனவு மறிக.

413. உத்சவமென்பதின் தாற்பரியமென்ன?

சிருஷ்டிமார்க்கத்தைக் குறிப்பதென்பது பொருள். இது பஞ்சகிருத்தியம் நடைபெறுவதைச் சூசிப்பிக்கும்.

414. உத்சவம் எத்தனைவிதம்?

ஆறுவிதம்: அவை பைத்ருகம், சௌக்கியம். ஸ்ரீகரம், பார்த்திவம், சாத்வீகம், சைவம் என அறிக.

**415.** அவற்றினை முறையே விளக்குக?

முறையே பன்னிரண்டு, ஒன்பது, ஏழு, ஐந்து, மூன்று நாள்களும் ஒருநாளும் கொண்டாடுந் திருவிழாக்கள்.

**416.** இன்னும் வேறுவிதங்களுளவோ?

பதினொன்றும், பதின்மூன்றும் பதினைந்தும், பதினேழும், இருபத்தொன்றும் மேற்பட்டதுமான நாள்கள் உத்சவம் செய்வதாம். அவை முறையே புக்தி கௌமாரம் சாயுத்ரம் சாந்தரம் சௌரம் சாவரம் எனப் பெயர்பெறும்.

**417.** இவ்வுத்ஸவங்களுக்குப் பலன் யாது?

ஒருநாள் - ராஜகீர்த்தி, மூன்று - சிவத்தைச் சந்தோஷிப்பித்தல், ஐந்து - போகம், ஏழு - சிவப்பிரியம். ஒன்பது - சாந்திகம், பதினொன்று - புஷ்டி, பன்னிரண்டு - முத்தி, பதின்மூன்று - சர்வசித்தி, பதினைந்து - ஜனங்களுக்குச் சுகம், பதினேழு - புண்ணியப்பிரதம், இருபத்தொன்று - லோகவிரக்ஷை.

**418.** உத்ஸவங்கள் செய்யாவிடில் குறைவு என்ன?

கிராமத்துக்கும் ஜனங்களுக்கும் க்ஷேமங்கிடையாது.

**419.** அயனாதி புண்ணியகாலங்களில் நடத்தும் உத்ஸவங்களின் பலனென்ன?

அயனோத்ஸவம் - புண்ணியபலம், மாதோத்ஸவம் - இராஜதோஷ நிவர்த்தி, அமாவாசை - தாரபுத்திராதி இஷ்டகாமிய சித்தி, பௌர்ணமி - சகலபாப நிவாரணம், கிர்த்திகை - சௌக்கியம், திருவாதிரை - சகலசம்பத்து, பூசம் - புஷ்டி, மகம் - சுஜனசிரேஷ்டத்துவம், பூரம் - சௌபாக்கியம், உத்திரம் - சீலம், சித்திரை - ரூபலாவண்ய

மனைவி, விசாகம் - விசேஷ காமபலன், மூலம் - ஆரோக்கியம், பரணி-ஆயுள்விர்த்தி, திருவோணம்-சுகபோகங்கள், பலனும். இவ்வாறு ஒவ்வொரு நக்ஷத்திரங்களுக்குள்ள பலனைக் காமிகாதி ஆகமங்களிற் காண்க.

420. மலை, வனம், ஆறு, குளமுதலிய இடங்களுக்குச் செல்லும் உத்ஸவங்களின் பலனென்ன?

அவ்வவ்விடங்களிலுள்ள நால்வகையோனி எழுவகைத் தோற்ற பேதங்களுக்குப் பலப்பிராப்தி உண்டாகும்.

421. வாரோத்ஸவ பலன்களென்ன?

ஞாயிறு - ருத்ரபதவி, திங்கள் - சௌக்கியம், செவ்வாய் - கிராமலாபம், புதன் - சர்வகாமியசித்தி, வியாழன் - சாஸ்திராதிவித்தை, வெள்ளி - விசேஷசெல்வம், சனி - அவமிர்த்தியு நாசம்.

422. உத்ஸவ காலங்களிலே ஆலயங்களில் நடக்கும் கிரியைகளெவை?

விருஷயாகம், துவஜாரோகணம், ப்ரகத்தாளம், அங்குரம், யாகசாலை, அஸ்த்ரயாகம், பலிதானம், யானக்கிரமம், பரிவேஷம், நீராஜனம், கௌதுகம், தீர்த்தசங்கிரகணம், சூர்ணோத்ஸவம், தீர்த்தம், அவரோகணம், ஸ்நபனம், விவாகம், பக்தோத்ஸவம் என்னும் அஷ்டாதசக் கிரியையாம்.

423. இவை பஞ்சகிருத்தியங்களை எவ்வாறுணர்த்தும்?

சிருஷ்டி - அங்குரார்ப்பணம் விவாகம் துவஜாரோகணம் ரக்ஷாபந்தனம் இவைகளாலும், திதி - வாகனாதி

யுத்ஸவம் ஓமம் பலியிவற்ருலும், சம்ஹாரம் - சூர்ணோத்ஸவம் ரதாரோகணம் கிருஷ்ணகந்தோத்ஸவ மிவற்ருலும், திரோபவம் - மௌனவுத்ஸவத்தாலும், அனுக்கிரகம் - சக்தியூடலாலும் உணர்த்தப்படுவதறிக. அன்றி சிருஷ்டி - அபிஷேகத்தாலும், திதி - கௌதகபந்தனத்தாலும், சம்ஹாரம் - அகருதூபத்தாலும், திரோபவம் - கற்பூர தீபத்தாலும், அனுக்கிரகம் - கற்பூர அடுக்குத் தீபத்தாலும் சூசிப்பிக்கப்படும்.

**424.** மகோத்ஸவதினங்கள் பத்தினுலும் உணர்த்துவது யாது?

முதல்நாள் - தூலநீக்கத்தையும், இரண்டாம்நாள் - ஸ்தூல சூக்கும நீக்கத்தையும், மூன்ரும்நாள் - மூவினை முக்குணம் முக்குற்றம் முப்பற்று முப்பிறப்பு நீக்கத்தையும், நான்காம்நாள் நாற்கரணம் நால்வகைத்தோற்ற நீக்கத்தையும், ஐந்தாம்நாள் ஐம்பொறி ஐந்தவத்தை ஐம்மல நீக்கத்தையும், ஆரும்நாள் காமக்குரோத லோப மோக மத மாச்சரியமென்னும் ஆறுகுற்ற நீக்கத்தையும். ஏழாம்நாள் எழுவகைப் பிறப்பு நீக்கத்தையும், எட்டாம் நாள் எண்குண விளக்கத்தையும், ஒன்பதாம்நாள் நவபேத விளக்கத்தையும், பத்தாம்நாள் பரானந்தக் கடலிற் படிவதையும் உணர்த்தும்.

**425.** வாகனதிகளின் அறிகுறி என்ன?

முதல்நாள் விருக்ஷத்தடியில் சேவை. மாயை வித்துப் போன்று விருக்ஷத்திற்கும் கிளைகளுக்கும் இலைகளுக்கும் ஒத்த சர்வலோகங்களுக்கும் காரண பூதமாயிருந்து சர்வ சாக்ஷியாய் இருப்பதை உணர்த்தும். இது சிருஷ்டியென அறிக.

2-ம் நாள். சூரியபிரபை சந்திரப் பிரபையில் எழுந்தருளி தரிசனந்தருவது, காண்பானாகிய ஆன்மாவுக்குக் காட்டுவான் தான் என்பதை உணர்த்த காணுங் கண்ணுக்குக் கதிரொளியாய் நின்றதை உணர்த்தும். இது திதியென அறிக.

3ம் நாள். பூதவாகனம்: ஆன்மாக்களுக்கு கன்மானுகூலமான மரணவஸ்தை விதிக்கின்றேமெ‌ன சம்ஹார கோலத்தைக் காட்டுகின்றது. அன்றிப் பஞ்சபூதங்களினின்றும் விளங்குவோன் தானே என்பதையும் காட்டும்.

4-ம் நாள். கைலாசவாகனம்: ஆன்மாக்களின் ஆணவத்தைப்போக்கி நிரதிசயானந்த ஜோதிமயபர ஆகாசமாகிய பரசிவலோகம் எனப்படும் கைலாசத்தைக் கொடுத்தருளும் பரமபதி தானே என்பதைக் காட்டும்.

5-ம் நாள். ரிஷபவாகனம்: பசுபதி தான் என்பதையும் தர்ம தேவதையை இடமாகக் கொண்டவன் என்பதையும் உணர்த்தும். அன்றி, சதுஷ்பாதம் போன்றது அந்தக்கரணம். ரிஷபம்போன்றது ஆன்மா. இதன்மேல் பதியாகிய ஈசுவரன் விளங்குகிறான் என்று அனுக்கிரக கோலத்தைக் காட்டும்.

6-ம் நாள். யானை வாகனம்; தும்பிக்கை போன்ற சுழிமுனை நாடியின் வழியாய்த் தன்னைத் தரிசிக்கவேண்டும் என்பதைக் காட்டும். அன்றிப் பிரணவதாரகன் தான் என்பதையுங் காட்டும்.

7-ம் நாள். நந்தி வாகனம்; ஆசாரியனை அதிட்டித்து நின்று ஆன்மாக்களைப் பரிபக்குவப்படுத்துவார் என்பதைக் காட்டும்.

8-ம் நாள். குதிரை வாகனம்; வாசிநாடியில் சுவாசா கார அஸ்வசாரியைக் காட்டும். சுவாசம் மேலும் கீழும் செல்வது வாசியாகும்.

9-ம்நாள். இரதம்; விஸ்வவிராட் சொரூபமே எட்டடுக்குத் தத்துவமாய் உச்சிக்கலசம் சோடசாந்தமெனவும், அதனடுத்த கீழடுக்கு துவாதசாந்தமெனவும், அதனடுத்தது மஸ்தக ஆதிஸ்தானமென்றும், அதனடுத்தது மஸ்தக மத்தியஸ்தானமென்றும், அதனடுத்தது மஸ்தக அந்தஸ்தானமென்றும், ஐந்தாமடுக்கு லலாட மத்தியஸ்தான மென்றும் அதனடுத்தது புருவ மத்தியஸ்தான மென்றும், நடுவே தாங்கும் குத்துக்கால்கள் தத்துவ கால்களென்றும் , முன் மூன்று துறைகள் மூன்று கண்களென்றும், பின்னவை சிகையென்றும், இடம் வலம் காதுகளென்றும் ஈஸ்வர னெழுந்தருளியிருக்கும் கேடயபீடம் முப்பாழென்றும், சூரிய சந்திர கலைகளே வாசிகளென்றும், சாரதி அக்கினிகலை யென்றும் (இவை நாசியென்றும்) எட்டாமடுக்குக் கண்டஸ்தான மென்றும், அதனடுத்தது இருதயஸ்தானமென்றும், அதனடுத்தது நாபிஸ்தானமென்றும் அதனடுத்தது குண்டலிஸ்தானமென்றும், தச்சக்கரங்களும் தசவாயுவென்றும் காட்டி, கர்த்தா தாஞெருவனே யென்றுணர்த்தி இது அண்டதத்துவ சொரூபமாய் பிண்ட தத்துவ சரீரமாயும் விளங்கும் எனவும் உணர்த்தி, தசவாயுச்சக்கரத்தை நிறுத்த மனது அசைவற்று அச்சுப் பட்டடை உந்திகுண்டலியிலிருந்து கீழ்ப்பட்டடை நாபிக்கு ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து அதற்கடுத்த பட்டடையாகிய இருதயத்துக்கு ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து அதற்கடுத்த பட்டடையாகிய கண்டஸ்தானத்துக் கேற்றி லயப்படுத்தி, பின் அடுத்த பட்டடையாகிய வாய்க்கு ஏற்றி லயப்படுத்தி, பின் முறையே ரதக்குதிரையாம்

நாசிக்கும் அங்கிருந்து இரண்டு கண் வழியாயும் நடுவழி யாயும் மேல்நோக்கி ஆறும் அடுக்காகிய புருவமத்தியத்திற் கேற்றி லலாடம் முதல் துவாதசாந்தம் வரை ஏற்றி லயப் படுத்தி, சும்மாயிருந்தபடி யிருக்கும் நித்தியசுகியா யிருந் திடல் வேண்டுமென்று லயக்கிரம கோலத்தைக் காட்டு கின்றது. அன்றிப் புராண வாயிலாகத் திரிபுரசம்ஹார கோலத்தையுங் காட்டும்.

10-ம் நாள் பிக்ஷாடனமூர்த்தி; ஆவரணம் ஏழையும் ஒழித்துவிட திரோபவ கோலத்தைக் காட்டும்.

11-ம் நாள் நடராஜகோலம் அனுக்கிரகத்தைக் காட்டும் இவ்வுத்ஸவங்கள் தத்வார்த்தக் காட்சிகளாகி யும் பஞ்சகிருத்திய ரகசிய தரிசனங்களாகவும் விளங்கு மென்பது காமிகாதி ஆகமங்களாலும் சிவத்விஜர்களாலும் அறிந்திடுக.

426. உத்ஸவ மூர்த்திக்குச் செய்யுந் திருவிழா சிவலிங்க மூர்த்திக்கு எவ்வாறு சேரும்?

யோகம் போகம் வீரம்' எனச் சக்திகள் மூன்று; அவற்றில் லிங்கபீடம் யோகசக்தி, விஸ்வயோநி போக சக்தி, உத்ஸவமூர்த்தி வீரசக்தி. ஆதலால் வீரசக்திக்கு உத்ஸவம் கொண்டாடுதலறிக.

427. சிவாலயங்களில் கொண்டாடப்படும் உத்ஸவங்கள் எவை?

நித்தியோத்ஸவம், வாரோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாதோத்ஸவம், அயனோத்ஸவம், வருஷோத்ஸவம் என்பவைகளாம்.

428. நித்தியோத்ஸவம் என்றால் யாது?

தினந்தோறும் உமாசகிதராய் சிவபெருமானை எழுந்தருளச் செய்வதாம்.

429. வாரோத்ஸவமென்றால் யாது?

சுக்கிரவாரந்தோறும் உமையை எழுந்தருளச் செய்வதாம்.

430. பக்ஷோத்ஸவமென்றால் யாது?

பௌர்ணிமை, அமாவாசை, பிரதோஷ தினங்களில் கொண்டாடப்படும் உத்ஸவமாம்.

431. மாதோத்ஸவமென்றால் யாது?

மாசப்பிரவேசத்தன்று கொண்டாடப்படும் உத்ஸவமாம்.

432. அயனோத்ஸவமென்றால் யாது?

உத்தராயண தக்ஷிணாயன புண்ணிய காலங்களில் கொண்டாடப்படும் உத்ஸவமாம்.

433. வருஷோத்ஸவமென்றால் யாவை?

பிரமோத்ஸவம், தெப்போத்ஸவம், சைத்ரோத்ஸவம், வசந்தோத்ஸவம் முதலிய உத்ஸவங்க ளொவ்வொன்றும் பப்பத்து நாட்களில் கொண்டாடப்படும் உத்ஸவங்களாம்.

434. ஆலயங்களிலே சிவலிங்கப்பெருமானுக்கு எத்தனை காலங்களில் அபிஷேகாதி வைபங்கள் நடத்தப்பட்டு கின்றது?

திருவனந்தல், காலைசந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை, இராக்காலம்; அர்த்தசாமம் ஆகிய ஆறு காலங்களிலும்,

திருவனந்தல் சாயரக்ஷை யொழித்து நாலு காலங்களிலும் அவற்றிற்குக் குறைந்த காலங்களிலும் வரவுக்கு ஏற்ப அபிஷேகாதி வைபவங்கள் நடத்தப்படுகின்றன.

435. சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு வருஷத்தில் ஆறு அபிஷேகங்கள் நடத்துவதற்குக் காரணமென்ன?

மனிதர்களுக்கு ஒருவருஷங்கொண்டது தேவர்களுக்கு ஒரு நாளாகவே, ஸ்ரீ சிற்சபேசன் தேவர்கள் தேவனென்பது விளங்க பிராதஹ்காலத்துக்குச் சமமாகிய மார்கழி மாதத்துச் சிவரூபமாகிய திருவாதிரையன்று அபிஷேகமும் தரிசனங் கொடுத்தலும், காலைசந்திக்குச் சமமாக மாசி மாதம் பூர்வபக்ஷ சதுர்த்தசியிலும், உச்சிகாலத்துக்குச் சமமாகச் சித்திரை திருவோணத்திலும், சாயரக்ஷை காலத்துக்குச் சமமாக ஆனி மாதத்தில் உத்திரத்திலும், இராக்காலத்துக்குச் சமமாக ஆவணி மாதத்தில் பூர்வபக்ஷ சதுர்த்தசியிலும். அர்த்தசாமத்துக்குச் சமமாக புரட்டாசி மாதத்தில் பூர்வபக்ஷ சதுர்த்தசியிலும் அபிஷேகமும் நடத்தலறிக.

436. அவ்வபிஷேகங்கள் நக்ஷத்திர மூன்றிலும் சிறந்ததற்குக் காரணமென்ன?

திருவாதிரை சிவநக்ஷத்திரமாதலாலும், திருவோணம் அச்சுத நக்ஷத்திரமாதலாலும், உத்திரம் சூரிய நக்ஷத்திரமாதலாலும் சிறந்தமை காண்க.

437. சிவத்தலங்கள் ஆயிரத்தெட்டினுள் விசேஷத் தலங்கள் யாவை?

நடனத்தலங்கள், சப்த தியாகஸ்தலங்கள், ஆருதார ஸ்தலங்கள், பிண்டஸ்தலங்கள், பஞ்சஸ்தலங்கள்.

நாடிஸ்தலிங்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை விசேஷமாம்.

**438.** நடனத்தலங்கள் யாவை?

" ஓங்குலகந் துயர்தீர நடம்புரியும்
உயர்தான முரைப்பம் கேள்நீ
பாங்குதருங் கயிலாயஞ் சிவலோகம்
பனிவரைநூல் பரவுஞ் சொர்க்க
தீங்ககல்பத் திரபீடம் நேபாளம்
கங்கைநதி சிறந்த காசி
கோங்கலருந் தடங்காம ரூபமொடு
நைமிசமே குருவின் தானம்.

மந்தரமால் வரைகமலா நந்தவரை
புயங்ககுல வரையே மாசு
சிந்துசுராட் டிரங்கதலித் தானமலி
கேதாரந் திருவான் மிக்கு
முந்துபரி யாத்திரஞ்சந் திரத்தானஞ்
சுமிந்தரஞ்சுந் தரமா மூசு
சந்துமலி தருமரா புரந்தாமே
விசாலாக்ஷம் தடம்பொன் மேரு.

சண்பகமா வனம்போட மாடவியோ
டாமிரதஞ் சாரதைப் பீடம்
மண்பரவுந் துளசிவன மயவந்தி
சூல்வரைசி கண்ட மற்றும்
விண்பயிலு மாசோத மஞ்சரிகாம்
பீரியமா விர்த்த மேலோர்
எண்பதமாம் பிரமாண்ட மயிராவதி
மாயூரம் சித்திர சேநகம்.

புட்கரணி பாதாள மந்திராச்
சிரமமணி பொழிபொற் கூடம்
கட்கமழும் கமலமணி சிவாச்சிரமம்
சித்தராச் சிரம ரூபீ
நட்புறுசித் திரகூட மல்லிகார்ச்
சுனங்கங்கா நதித்து வாரம்
புட்பயிலும் புஷ்யரத முதயவரை
புன்னை வனமு மற்றும்.

நந்திபுர மாமாங்கம் சாளரத்தம்
சிரபுரஞ்சோம் பீட நாறும்
சந்தணிகேத் திரஞ்சாளக் கிராமமிட
பாசலமே தமைந்த தீமை
சிந்துசரச் சுவதிமறைத் தெளிவாகுஞ்
சிதம்பரமாந் திகழுந் தானம்
இந்தியமைந் தடக்கினர்தம் மிதயத்தும்
நடம்புரிவ மியலா லென்றும்"

என்றபடி அறுபத்து நான்குமாம்.

**439.** இவற்றுள் சிதம்பரம் மேலானதற்குக் காரணம் என்னை?

இங்குசெய்யும் நடனம் ஆன்மாக்களுக்கு ஆணவ விருளைப்போக்கிப் பேரின்பமாகிய ஆனந்தத்தை அருளும் ஆநந்த நடனமாதலால் விசேஷமென அறிக.

**440.** சப்த தியாகஸ்தலங்கள் யாவை?

திருவாரூர், திருநள்ளாறு, திருக்கோளிலி, திருவொற்றியூர், திருநாகை, திருத்தென்றிருவாமூர், வேராரண்யம் என்னும் ஏழுமாம்.

இந்தத் ஸ்தலங்களிலுள்ள தியாகர்களின் திருநாமங்களையும் நடனங்களையும் சொல்லுக.

1. திருவாரூர், வீதிவிடங்கர் - அசபாநடனம்
2. திருநள்ளாறு, நகரவிடங்கர் - உன்மத்தநடனம்
3. திருநாகை, சுந்தரவிடங்கர் - அலைநடனம்
4. திருவாய்மூர், நீலவிடங்கர் - கமலநடனம்
5. திருமறைக்காடு, புவனிவிடங்கர் - அமிர்தநடனம்
6. திருக்கோளிலி, அவனிவிடங்கர் - பிரமரநடனம்
7. திருவொற்றியூர், மாணிக்கவிடங்கர்-வகுளநடனம்

441. ஆறுதார ஸ்தலங்கள் யாவை?

(மூலாதாரம்) திருவாரூர், (சுவாதிஷ்டானம்) திருவானைக்கா, (மணிபூரகம்) திருவண்ணாமலை, (அநாகதம்) சிதம்பரம், (விசுத்தி) திருக்காளத்தி, (ஆக்ஞை) காசி என்னும் ஆறுமாம்.

442. பிண்டத்தலங்கள் யாவை?

(சிரசு) ஸ்ரீ பர்வதம், (லலாடம்) கேதாரம், (புருவமத்தியம்) காசி, (இருதயம்) சிதம்பரம், (மூலாதாரம்) திருவாரூர். (குதஸ்தானம்) குருக்ஷேத்திரம் என்னும் ஆறுமாம்.

443. பஞ்சபூதத்தலங்கள் யாவை?

(பிருதுவி) திருவாரூர், (அப்பு) திருவானைக்கா, (தேயு) திருவண்ணாமலை, (வாயு) காளத்தி, (ஆகாயம்) சிதம்பரம் என ஐந்துமாம்.

**444.** நாடி ஸ்தலங்கள் யாவை?

இலங்கை - இடைகலை, இமயம் - பிங்கலை, தில்லை - சுழுமுனை என அறிக.

**445.** சிவாலயங்களிலே நடக்கும் மாத விசேஷ உத்ஸவங்கள் எவை?

சித்திரை மாதத்தில் விஷுபுண்ணிய காலோத்ஸவம் பிரமோத்ஸவம் சைத்திரோத்சவம், ஸ்ரீ நாவுக்கரசு சுவாமிகள் மகோத்ஸவம், வைகாசியில் வசந்தம், ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் மகோத்ஸவம், ஆனிமாதத்தில் திருமஞ்சனம், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் மகோத்ஸவம், ஆடி மாதத்தில் ஆடிப்பூர உத்ஸவம், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் மகோத்ஸவம், ஆவணிமாதத்தில் ஸ்ரீவிநாயகஉத்ஸவம், ஆவணிமூல மகோத்ஸவம், புரட்டாசி நவராத்திரி மகோத்ஸவம், ஐப்பசி ஸ்கந்தோத்ஸவம், கார்த்திகை தீப மகோத்ஸவம், மார்கழி திருவெம்பாவை உத்ஸவம். ஸ்ரீ ஆருத்திரா தரிசன மகோத்சவம், தை உத்தராயண புண்ணியகால மகோத்ஸவம், பூசமகோத்ஸவம், மாசி மகோத்ஸவம், சிவராத்திரி மகோத்ஸவம், பங்குனி தெப்போத்ஸவம், உத்திர உத்ஸவம் ஆகிய இவைகளாம்.

**446.** சிவராத்திரியாவது யாது?

பிரம விஷ்ணுக்கள் ஒரு கற்பத்திலே தான் பிரமம் தான் பிரமமென்று தருக்குற்றகாலையில் ஸ்ரீ பரமேசுவரன் ஸ்தாணுரூபமாய் நின்ற அவதரமென்றும், மகாபிரளயத்துக்கப்பால் ஆன்மகோடிகள் மாயையிலொடுங்கி நிற்க ஏகாதச ருத்திரர்கள் பெருமானை ஏகாந்தமாய்ப் பூஜித்த காலமென்தும், பின்னொரு கற்பத்தில் சர்வசம்ஹார காலத்தினிறுதியில் உமைகேள்வன் ஸ்ரீபராசத்தியாருடன்

வீணுகானஞ் செய்துகொண்டிருந்த காலையில் அம்மையார் ஆணவ கேவலத்தில் கட்டுண்டு கிடக்கும் ஆன்ம கோடிகளனைத்தையும் பக்குவப்படுத்தி நிரதிசயானந்தப் பெருவாழ்வைத் தருவான் வேண்டி மீட்டும் பஞ்சகிருத்தியந் தொடங்கியருளவேண்டும் என்று பிரார்த்தித்து ஸ்ரீ பரமேசுவரனை அபிஷேகாதி வைபவங்களால் மகிழ்விக்கச் செய்த இரவு என்றும் கூறுவர் மேலோர்.

## 10. தீர்த்தவியல்

**447.** கங்கை முதலிய புண்ணிய நதிகளென்பன எவை?

கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி என்னுஞ் சப்தநதிகளும் சிந்து, தாமிரபருணி, கிருஷ்ணை, துங்கபத்திரை முதலாகிய நதிகளுமாம்.

**448.** பல நதிகளுக்குள் கங்காநதி சிரேஷ்டமானதற்குக் காரணமென்ன?

அந்த நதி பார்வதி தேவியாருடைய திருவிரல்களின் இடமாக உண்டானது ஆகையால் சிரேஷ்டமாகியது.

**449.** என்ன காரணத்தால் பார்வதி தேவியாருடைய திருவிரல்களில் உண்டாகியது?

ஒருகாலத்தில் பார்வதிதேவியார் பின்னுகவந்து பரமசிவனுடைய இரண்டு திருக்கண்களையும் மூடினபோது பத்து விரல்களிலிருந்தும் உண்டாகியது.

**450.** அப்படிக்கு உண்டாகிய கங்கையைப் பரமசிவன் திருமுடியில் அணிந்துகொண்டதற்குக் காரணம் என்ன?

அந்தக் கங்கையானது ஏழுகடலும் ஒன்ருய்க்கலந்தது போல் பெருவெள்ளமாகி ஆயிரமுகத்துடன் உலகமெங்கும் பரந்ததைப் பிரமதேவன் முதலாகிய தேவர்கள் கண்டு பயந்து கயிலாய கிரிக்குச் சென்று சுவாமியைத் தொழுது முறையிட்டுக் கொள்ளக் கிருபைகூர்ந்து அந்த வெள்ள மெல்லாஞ் சுருங்கி வரும்படி திருவுளங்கொண்டு வந்த வெள்ளத்தைத் தமது சடையில் ஒரு துளியாகத் தரித்துக் கொண்டார்.

**451.** அந்த நதி பூலோகத்தில் வந்ததற்குக் காரணம் என்ன?

பகீரதன் என்னும் ஓர் அரசனுல் வந்தது.

**452.** இது அன்றி வேறு தீர்த்தங்களும் உண்டோ?

ஒவ்வொரு சிவத்தலங்களிலுமுள்ள திருக்குளங்களும் சிவகங்கா தீர்த்தங்களாம்.

**453.** பஞ்சவித தீர்த்தமெவை?

தேவதீர்த்தம், ஆரிடதீர்த்தம், மானுடதீர்த்தம், பூத தீர்த்தம், பிதிர்தீர்த்தம் என்பனவாம். இவற்றின் உண் மையைத் தீக்ஷாக்கிரமத்தாலறிக.

## 11 ஆசாரியவியல்

**454.** ஆசாரியராவர் யாவர்?

பெத்தான்மாக்களாகிய நாம் இருவினையொப்பு மலபரி பாகம் பெற்று, தான் என்னும் போதம் நீங்கித், தன் சொரூபம் பரமேசுவரனடியார்களினடியார்க்கு அடிமைத் திறம் பூண்டு மகிழ்வதே யென்றறிந்து, பிறவிப்பிணி

தீர்ந்து, அஞ்ஞானம் நீங்க ஞானமாகிய விளக்கினைக் கொண்டு அருட்பெருஞ்சோதி எம்மையன் நம்மிருதயமாகிய புண்டரீகவீட்டினுள் ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளும் முறைமையைக்காட்டி, அவ்வாறு ஆடும் நம்பேரருளாளன் ஸ்ரீகுஞ்சிதபாதத்தில் நம் ஆன்மாக்கள் ஒடுங்கிச் சதா சிவானுபவத்தை அனுபவிக்கச் செய்யும் பரம கருணை சாலியராம்.

**455.** அவர் எப்படிப்பட்டவர்?

ஆன்மகோடிகளிலும் ஈசுவரனிலும் அதிகம் என்று கொள்ளல்வேண்டும். ஆசாரியன் ஈசுவரரூபியானலும் அயப்பிண்டத்துக்கு அக்கினி சம்பந்தத்தாலே அக்னியை விடஉஷ்ணதிக்கியம் அந்த அயப்பிண்டத்தில் விளங்குவது போலும், கதிரவன் வெப்பத்திலும் அவன் கிரணங்கள் காய்ந்தமணலில் வெப்பம் அதிகமாயிருத்தல்போலும் சிவபெருமானிலும் சிவபெருமானல் அதிட்டிக்கப்பட்ட ஆசாரியன் அதிகன். இதனல் நம்போலிகளுக்குக் காரிய சித்தியும் அதிகம். கேவலம் பகவத் சொரூபனும்போது சுவாதந்தரியப்பிரகாசனுகின்றுன். அதிட்டிக்கு மளவிலே அடியார்கட்கெளிவரும் சுலபனுகின்றுன். ஆசாரியவிஷயத்தில் சர்வசித்திகளும் திண்ணமாகையால், ஆசாரியன் பகவத்சொரூபத்திலும் அதிகனென்பது இரகசியபோதகமாயுள்ளது.

**556.** ஆசாரியன் ஈசுவரரூபியாவது எப்படி?

ஆன்மகோடிகளனைத்தும் அறிவித்தாலன்றி அறியா உளங்க்ள் என்றமையினலே ஏனையோர்க்கு அறிவிக்கும் சக்தி யில்லாமை தானே போதரும். அவ்வாறு அறிவிக்கும் சித்து சிற்றம்பலவன் சிற்சபேசன் என்னும் சப்தவாச்சியனுகிய அம்பலவாணர் ஒருவரேஆதலால் அம்மூர்த்தியே,

தனது காளகண்டம், திரிநேத்திரம் முதலியவற்றை மறைத்து, மானைக்காட்டி மான்பிடிக்கும் வழக்கம்போல மானிடச்சட்டை சாத்தி, அறிவிக்கப்படும் சித்தாகிய ஆன்மா தன்னையும் தலைவனையும் உணருமாறு அருட் கோலங்கொண்டு எழுந்தருளிய அவதரம் குருமூர்த்தம் ஆதலால் அவர் ஈசுவர ரூபியேயாம்.

457. ஆசாரியனுக்கு இருக்கவேண்டிய முக்கிய இலக் கணங்கள் என்ன?

சிவபெருமானுடைய அதிசயப்பிரபாவங்களை ஆன்ம கோடிகளுக்கு அற்புதவாயிலாய் நடத்திக்காட்டலும், தான் வேறொரு ஆசாரியனை அபேக்ஷியாதிருத்தலும் ஆம்; இன்றேல் முக்காலத்தும் ஆசாரியனுகான்.

458. அவ்வாசிரியன் எவ்வாறு ஆன்மகோடிகளை இரக்ஷிக் கின்றான்.

சமதமாதி ஆன்மகுணங்களுண்டானபின்னும், தானு டைமை அவன் உடையவன்; உடைமை உடையவனிட்ட வழக்காயிருக்கும் என்ற சொரூபஞானமுண்டாய்ச் சொத் தினுடைய லாபநஷ்டம் சொத்துக்காரனுக்கே என்னும் மகாவிசுவாசமுண்டான பின்னும் இரக்ஷிக்கிறவன் ஈசுவ ரன். இவ்விதமானசேதன கிருத்தியத்தைப் பாராது தன் னுடைய நிர்ஹேதுகமான அபிமானத்தினலே மருந்து அருந்தாத சிசுவுக்குச் சங்கிலிட்டுவார்க்கும் தாய்போல இரக்ஷிப்பவன் ஆசாரியன்.

459. ஆசாரியன் ஆன்மகோடிகளின் அஞ்ஞானத்தை எவ்வாறு அகல்விப்பன்?

ஆசாரியன் உபகாரக ஆசாரியனும்போது தீக்ஷாகிரமத் தினல் தத்துவ நியதிசெய்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை

உபதேசித்து, பதி, பசு, பாச, பதார்த்தத் திரயஞானத்தையும் ஆன்மசொரூபம் பிரமசொரூபம் பிரமத்தையடையும் உபாயத்தின்சொரூபம் ஆன்மாக்களடையும் புருஷார்த்தத்தின் சொரூபம் ஆகிய அர்த்தபஞ்சகஞானத்தையும் உண்டாக்கி, ஈசுவரனே உபாய உபேயமென்று காட்டி யகல்விப்பன். அவன் உத்தாரகாசாரியனும்போது தன்னுடைய விசேஷாபிமானத்தாலே அவனுக்குச் சொரூப யாதாத்மயஞானத்தை விளங்கச்செய்து தானே உபாய உபேய மாகின்முன்.

460. தீக்ஷையாவது என்ன?

பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுத்தல் என்பது பொருள்.

461. தீக்ஷை பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் என்ன?

ஒருவன் சைவ சமயி யென்பதற்கு விபூதி உருத்திராக்கமாகிய சிவசின்னங்கள் இன்றியமையாச் சாதனங்களாமாறு, ஒருவன் சைவசமயியாயிருத்தற்குத் தீக்ஷை பெறுதல் அவசியமாம். இன்றேல் சைவசமயியாகான்.

462. தீக்ஷை யெத்தனை வகைப்படும்?

சக்ஷு தீக்ஷை, ஸ்பரிசதீக்ஷை, வாசகதீக்ஷை, மானசதீக்ஷை, சாஸ்திரதீக்ஷை, யோகதீக்ஷை என அறுவகையாம்.

463. மேற்கூறிய அறுவகைதீக்ஷைகளையும் விளக்குக.

1. அத்துவா மார்க்கம் குறியாது குறித்துச் சுருக்கிப் பாசம் கழலப்பார்த்தல் சக்ஷு தீக்ஷையாம்,

2. அப்படிக் குறித்துச் சிவஅத்தம் வைத்தல் ஸ்பரிச தீக்ஷையாம்.

3, பதினொரு மந்திரத்தோடு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தல் வாசகதீக்ஷையாம்.

4. யோகமார்க்கத்தால் சீஷனது இருதயம் பிரவேசித்துச் சிந்தித்தல் மானசதீக்ஷையாம்

5. ஆகமப்பொருளைச் சுருக்கி உபதேசித்தல்சாஸ்திர தீக்ஷையாம்.

6. யோகமார்க்கத்தால் சீஷனிருதயம் பிரவேசித்து நக்ஷத்திரம்போலிருக்கின்ற சீவனைவிட்டுப் பாசம் நீங்கப் பார்த்துத் துவாதசாந்தத்தில் சிவனிடத்தில் யோசித்தல் யோகதீக்ஷையாம்.

464. இத்தீக்ஷைகளிற்பேதமுண்டோ?

நிர்ப்பீஜம் சபீஜம் என இருவகைத்தாம்.

465. இவை முறையே எவ்வெவருக்கு அருகமாம்?

பாலர், சத்தினிபாத லக்ஷணம் காண்பிவிக்கும் சாமர்த்தியமுடையராய் ஆசாரம் அனுஷ்டிக்கும் சாமர்த்தியமிலராய் நிரம்பவோதி உணராதவர்களாய், பதினறு வயதுட்பட்டவர்களாய், அனுஷ்டானத்தில் அசக்தராய் உள்ளவர்கள், எழுபது வயதுக்கு மேற்பட்டார், சத்தினிபாதத்து மகளிர்கள், யோக வாஞ்சையுள்ளவர்கள், வியாதியாளர்கள், இவர்களுக்குச்செய்யுந் தீக்ஷை நிர்ப்பீஜமாம். ஓதியுணர்ந்து ஒழுக்கம் குறைவுபடாதிருக்கும் உத்தமர்களுக்குச் செய்வது சபீச தீக்ஷையாம்.

466. தீக்ஷையில் பேதமுண்டா?

சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிர்வாணதீக்ஷை என மூன்றுவகை. அவைகளில் சமயதீக்ஷை எவ்வகைப்பட்டவர்களுக்கும் செய்யப்படுவது. மற்ற இரண்டுவகை தீக்ஷையும் சிஷனுடைய பக்குவமறிந்து செய்யத்தக்கது.

467. முதல் தீக்ஷைக்குச் சமயதீக்ஷை என்கிற பெயர் எதனாலுண்டாயது?

இந்த தீக்ஷை செய்துகொண்டாலே சைவ சமயத்துக்கு உரியவனாகின்றான். அதனால் சமயதீக்ஷை என்று பெயர். இந்த சமயதீக்ஷையினுஞ் சிறப்புள்ளதாகையால் விசேஷ தீக்ஷையென்றும், மோக்ஷந் தரத்தக்கதாகையால் நிர்வாண தீக்ஷையென்றும் மற்ற இரண்டு தீக்ஷைக்கும் பெயருண்டாயது. (நிருவாணமென்பது மோக்ஷத்துக்கு ஒருபெயர்.)

468. இந்த தீக்ஷைக்குக் குருவாயிருப்பவர் எந்த வருணத்தாராக இருக்கவேண்டும்?

ஆதிசைவப் பிராமணகுலத்திற் பிறந்து உபநயன விதியும் இம்மூன்று தீக்ஷையும்பெற்று ஆசாரிய அபிஷேகமும் செய்துகொண்டவரா யிருக்கவேண்டும். ஆகமத்தில் லக்ஷம்கிரந்தம் முகஸ்தமுள்ளவரா யிருந்தாலே உத்தம குரு என்று பெயர். (5000) (2000) முகஸ்தாயிருந்தால் மத்திமம் அதமம் என்கிற பதத்தில் வைக்கப்படுவார்கள். இது முக்கியபக்ஷம்.

469. சைவ சமயத்துக்கு விபூதி ருத்திராக்ஷம் முக்கியமானதற்குக் காரணமென்ன?

பரமசிவனுடைய திருமேனியிலும் திருநேத்திரத்திலும் உண்டானமையால் முக்கியமாயின.

470. அவைகளுண்டானவகை எப்படி?

பரமசிவனுடைய அக்கினிபோன்ற திருமேனிமேல் இயல்பாகப் பூத்ததுவே அனுதியான விபூதி. பின்பு தேவர் முதலிய சராசரங்களையெல்லாம் இறுதிக்காலத்தில், நீருக்கித் தம்முடைய திருமேனியில் தரித்தருளினுரே அது ஆதி விபூதி. நெருப்பின்மேல் நீறுபூத்திருப்பதை இப்போதும் திருஷ்டாந்தமாகக் காணலாம்.

471. அதனை அணிவதனுற் பயன் என்னை?

மகா பாதகங்களெல்லாம் நீங்குமென்றும் அப்படிக் கொத்த விபூதியைப் பசுவின்சாணத்தால் விளைக்கவேண்டுமென்றும் அப்படி விளைப்பதில் கற்பம், அநுகற்பம், உபகற்பமென மூன்று விதி உண்டென்றும் அவற்றுள் ஒரு விதிப்படி விளைவித்துத் தரித்துக்கொள்ளவேண்டுமென்றும் ஆகமங்கள் சொல்லுகின்றன.

472. கற்பவிதியாவது எப்படிக்கொத்தது?

பங்குனிமாதத்தில் ஈசானத்தில் மேய்ந்துவந்த நல்ல பசுக்களைப் பரிசுத்தமுள்ள தொழுவத்திற் சேர்த்து அவைகளிடுகிற சாணத்தைப் பூமியில் விழவொட்டாமல் தாமரையிலையி லெடுத்துக்கொண்டு மேலுள்ள வழுவை நீக்கிவிட்டு உண்டையாக்கி முன் விளைத்திருக்கிற சிவாக்கினியிலிட்டுப் பக்குவமாக வெந்தபிற்பாடு எடுத்துப் புதுப் பானையிலிட்டு வேண்டியமட்டில் விபூதிக் கோவிலில் வைத்துக்கொண்டு பூமியில் சிந்தாமல் தரித்துக்கொண்டால் செனன மரண துக்கம் நீங்கி மோக்ஷமடையலாம். இவ்வாறு விளைவிப்பதுதான் கற்பவிதி. சாணத்தை யேந்தும்போதும் அக்கினியிலிடும்போதும் வெந்தபின்பு எடுக்கும்போதும் புதுப்பானையில் வைக்கும்போதும் மந்திரஞ் சொல்லவேண்டும். அதனைக் குருபாலறிக.

473. அனுகற்பவிதி எப்படி விளைவிப்பது?

காட்டிலுலர்ந்த பசுவின் சாணத்தை யுதிர்த்துக் கோசலம்விட்டுப் பிசைந்து சிவாக்கினியிலிட்டுப் பக்குவப் படுத்துவதாம்.

474. உபகற்ப விபூதியாவது யாது?

இயல்பாக வெந்த காட்டுச்சாம்பல், சிவாலய மடைப் பள்ளிச் சாம்பல் இவைகளை யெடுத்துக் கோசலம்விட்டுப் பிசைந்து உண்டையாக்கிச் சிவாக்கினியிலிட்டுப் பக்குவப் படுத்தி முன்போல் எடுத்துவைத்துக்கொண்டு தரித்துக் கொள்ளுவதாம்.

475. விபூதிக்கோவில் எதனாலமைக்கப்பட்டது?

வஸ்திரம், புலித்தோல், மான்தோல் இவைகளால் அமைக்கவேண்டும். பையேயன்றி வேறுமுண்டு,

476. எல்லாச் செந்துக்களினும் பசு சிரேஷ்டமானது என்னை?

புண்ணியநதி, தீர்த்தங்கள், முனிவர்கள், மேலான தேவர்கள் வாசமாகும்படியான அங்கங்களுடன் உற்பவ மானதினாலும் தெய்வலோகத்திலிருக்கின்ற காமதேனு வின் குலமானதாலும் சிரேஷ்டமானது. அன்றி, பசுமல நீக்கத்துக்குக் காரணமான திருநீற்றினுக்கு முதற்காரண மான கோமயத்தை விளைவித்தலாலுமென வுணர்க.

477. விபூதி எங்கெந்த விடங்களில் தரிக்கவேண்டும்?

உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழங்கால், கைகள் பின்பக்கம் இவ்விடங்களிலெல்லாம் திரிபுண்டரமாகத்

தரித்துக் கொள்ளவேண்டும். இதன் விவரமும் மந்திரங்களும் தீக்ஷை பெற்றுக்கொள்ளும்போது குருவிஞல் தெரியும்.

478. திரிபுண்டரமாகத் தரிப்பதன் அறிகுறியென்ன?

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றுமலங்களையும் நீக்குமென்கிற குறிப்புத்தோன்றத் தரிப்பதாம்.

479. விபூதி தரித்துக்கொண்டாலே போதுமே; உருத்திராக்ஷமுந் தரித்துக் கொள்ளவேண்டியதென்ன?

விபூதியும், ருத்திராக்ஷமும் சிவசின்னமாகையால் அவ்விரண்டுமே தரிக்கவேண்டும். இதுவுமன்றி, விபூதியானது சிலவேளை வியர்வை மழை முதலியவற்ருல் மறைந்துபோஞலும் ருத்திராக்ஷமிருந்தால் தோஷமில்லை. ராக்ஷதரால் பீடிக்கப்படுகிற பாவம் அணுகாது.

480. ருத்திராக்ஷம் எவ்விடத்தில் எவ்வாறு உண்டாயது?

பரமசிவன் திரிபுரசம்ஹாரஞ் செய்யப்போன காலத்திற் கோபாவேசத்திஞல் அவருடைய நேத்திரங்களில் நீர்த்துளி விழ அதிலுண்டாயது. இந்தக் காரணத்திஞல் அதற்கு ருத்திராக்ஷம் என்கிற பெயருண்டாயது. (ருத்திரன் - சிவன். அக்ஷம் - நேத்திரம்.) அதற்குக் கண்மணியென்றும் பெயர். சிவபூசை செய்கிறவர்கள் கழுத்தில் ருத்திராக்ஷ மில்லாமல் பூசித்தால் அந்தப் பூசையைப் பரமசிவன் அங்கீகரித்துக்கொள்ளமாட்டார். ஆதலால் சிவபூசை செய்கிறவர்கள் ருத்திராக்ஷ கண்டிகை அவசியம் தரித்துக்கொள்ள வேண்டும்.

481. எத்தனை ருத்திராக்ஷம் தரித்துக்கொள்ளவேண்டும்?

உச்சியிலொருமணி, காதொன்றுக்கு ஆறுமணியாக இரண்டு காதுக்கும் பன்னிரண்டு மணி, சிரசில் நாற்பது, கழுத்தில் முப்பத்திரண்டு, மார்பில் நூற்றெட்டு, புயத்தில் முப்பத்திரண்டு, கைகளில் இருபத்துநாலு இவ்வாறு தரிக்கவேண்டும்.

482. ருத்திராக்ஷங்களினிடைகளில் ஏதாவது மணிகள் கோக்கலாமா?

இடையிடை பவழம் ஸ்படிகமணி பொன்மணி யிவைகளைக்கோத்து அணியவேண்டும். இவைகளுமன்றி வில்வப்பழ வோட்டையுஞ் சேர்க்கலாம். இவ்வாறு சேர்க்காமல் ருத்திராக்ஷங்களை மாத்திரம் கோத்துத் தரித்துக்கொண்டால் எத்தனைமணி சேர்த்தாலும் ஒருமணி யணிந்ததாலுண்டாகும் பலனேகிடைக்கும். இந்த ருத்திராக்ஷங்களில் ஒருமுகம் பதினொருமுகம் பதினான்கு முகமுள்ள மணிகளை வைத்துப் பூசித்தாலும் சிவார்ச்சனை செய்ததாலுண்டாகும் பலன் கிடைக்கும்.

483. விபூதி ருத்திராக்ஷம் தரித்துக்கொள்ளவும் சிவதரிசனம் சிவார்ச்சனை செய்யவும் விவேகமில்லாத மிருகமுதலான செந்துக்களுக்குச் சிவபுண்ணியம் எவ்வாறு சித்திக்கும்?

பரமேசுவரன் அநாதி கேவலத்திற்கிடந்த ஆன்மாக்களை அநாதி சிருஷ்டிசெய்கிற காலத்திலேதான் தலமாகவும் தீர்த்தமாகவும் மூர்த்தியாகவும் திருமேனி கொண்டெழுந்தருளிச் சிவத்தலங்களிலே புழுமுதலானவை சனித்தாலும் நசித்தாலும் சிவபுண்ணியம் உண்டாகவும் தீர்த்

த்திலே மீன் முதலானவை சனித்தாலும் வசித்தாலும் நசித்தாலும், நாற்கால் மிருகங்கள் மனிதர் முதலானவர்கள் பக்ஷிகள் முதலானவைகள் தீர்த்தத்தைக் குடித்தாலும் திவலைகள் தெறிக்கப்பட்டாலும் சிவபுண்ணிய முண்டாகவும் அருளினர். மறு பிறவியில் சிவலிங்கப் பெருமானுக்குச் செய்யும் அபிஷேகம் அருச்சனை நிவேதனம் முதலானவைகளுக்குரிய விருக்ஷ சாதிகளாகவும் நெல் முதலிய பயிர்களாகவும் பசு முதலாகிய மிருக சாதிகளாகவும் சனிப்பித்துச் சிவபுண்ணிய முண்டாக்குவர்.

**484.** பசு முதலான சில மிருகங்கள், சிவலிங்கப் பெருமானுக்குச் செய்யும் அபிஷேக முதலானவைகளுக்கு எவ்வாறு உதவுகின்றன?

பசு தன்னிடத்தில் உண்டாகும் பஞ்சகவ்வியம் கோரோசனம் இவைகளாலுதவுகின்றது. பஞ்சகவ்வியமாவது பால், நெய், தயிர், கோமயம், கோசலம் என்பவைகளாம். இவ்வாறு அபிஷேகத்துக் குதவுதலுமன்றிப் பால் தயிர் நெய் நிவேதனத்துக்கும் உதவுகின்றது.

**485.** இன்னும் எதற்கு உதவுகின்றது?

பசுவும் அதனினமாகிய எருதும் பேரிமத்தள முதலான தோற்கருவி மூலமாகவும் யாழ்முதலான நரம்புக் கருவி மூலமாகவும் உதவுகின்றது.

**486.** மற்ற எந்தமிருகம் இவ்வாறு உதவுகின்றது?

புழுகுபூனை கஸ்தூரிமிருகம் இவைகளும் உதவுகின்றன. மயில் விசிறிரூபமா யுதவுகின்றது.

487. விருக்ஷசாதிக ளெவ்வாறு உதவுகின்றன?

வாழை, பலா, மா, தெங்கு முதலிய சில விருக்ஷங்கள் அபிஷேகத்துக்கும் நிவேதனத்துக்கும் உரிய கனிவர்க்க மூலமாகவும் எலுமிச்சை நாரத்தை முதலாகிய மரங்கள் அபிஷேகத்துக்கும் நிவேதனத்துக்கும் கனிமூலமாகவும் உதவுகின்றன. இதுவுமன்றி திருமஞ்சனத் திரவிய மூல மாக உதவுகின்ற விருக்ஷங்கள் செடிகள் கொடிகள் முதலானவைகளுமுண்டு. சில விருக்ஷங்கள் செடிகள் கொடிகள் சிவார்ச்சனைக்குரிய திருப்பள்ளித்தாம மூலமாக உதவுகின்றன. (திருப்பள்ளித்தாமமாவது பத்திர புஷ்பம். இந்தப் புஷ்பங்கள் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புகர்ப்பூ என நாலுவகையா யிருக்கின்றன.)

488. இதற்கு உதாரணமாகச் சரித்திரங்களுண்டோ?

பல விசேஷத்தினால் கரிக்குருவி நாரையென்னும் பக்ஷி களும் பன்றியும் மோக்ஷமடைந்தன. இதுவுமன்றி யானை நாகம் சிலந்தி வானரம் தவளை அணில் எறும்பு முதலியவை கள் மோக்ஷமடைந்தன. திருஞானசம்பந்த சுவாமிகள் ஆண்பனை பெண்பனையாகும்படிப் பதிக மருளிச்செய்த போது அந்தப் பனைக்கு மோக்ஷங்கிடைத்தது. சந்தானு சாரியர்களி லொருவராகிய உபாபதி சிவாசாரியார் சிதம் பரத்தில் ஒரு முள்ளிச் செடிக்குத் தீக்ஷைசெய்ய அச்செடி அப்போதே தீய்ந்து மோக்ஷமடைந்தது.

489. மேற்கூறிய ஆதிசைவப் பிராமணர்களை ஆசாரியர் என்றதற்குக் காரணம் என்ன?

பரார்த்த லிங்கத்தைப் பகிர்முகமாக ஆன்மாக்களுக்குக் காட்டலும் அந்தர்முகமாக மந்திரபூர்வமாய்ச் சிவனைக் காணும்படி சிவதீக்ஷை செய்தலும், தங்கள் குலத்தார்

யாவருக்கும் ஆசாரியர் என்னும் பொருள்படும் குருக்கள் என்னும் பெயர் ரூடியாக நிலைத்திருத்தலுமே காரணமாம்.

490. சைவ சமயாசாரியர்கள் யாவர்?

ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமான், ஸ்ரீ வாகீசப்பெருமான், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் நால்வராம்.

491. ஆசாரியர் நால்வர் எழுந்தருளினதற்குக் காரணம் என்ன?

சைவ சமயத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் பாதங்கள் நான்கு இருத்தலால் உலகத்தார்க்கு ஒவ்வொரு பாதத்தை உணர்த்த ஒவ்வோர் ஆசாரிய மூர்த்திகள் வெளிவந்தனர் என்ப. அன்றி "நாலுபேர் சொல்லுகிறபடி நட" என்னும் உலக வழக்கினையும் இதனோடு சம்பந்தித்து, சைவாசாரியர்களின் மகிமையை உய்த்துணர்க.

492. யார் யார் எவ்வெப்பாதத்தை உணர்த்தினர்?

ஸ்ரீ வாகீசமூர்த்திகள் சரியாபாதத்தையும், ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திகள் கிரியாபாதத்தையும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் யோகபாதத்தையும், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் ஞானபாதத்தையும் விளக்கவந்த அருண்மூர்த்தங்களாம்.

493. அற்றேல் தாம் தாம் உணர்த்த வந்த பாதத்தைத் தவிர்த்து ஏனையபாதங்களுக்கு ஆசாரியர் ஆகாரோ?

அற்றன்று. அன்னோர் நால்வரும் சிவமூர்த்தங்களே ஆகையால் பாதங்களுக்கும் பதங்களுக்கும் அப்பாற்பட்ட

பரம்பொருளாகவே சரியாதி நான்கினுக்கும் ஆசாரியரே யாயினும் ஏகதேசம் ஒவ்வொரு பாதத்தினையே ஆசரியித்துக் காட்டினவர்களாம்.

**494.** இதனை அவர்கள் சரித்திரவாயிலாக நிரூபிக்க.

ஸ்ரீ வாகீசமூர்த்திகள்,

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
  நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
  பூமாலை புனைந்தேத்தி

என்று கட்டளையிட்டவாறு தாம் உழவாரப் பணியொன்றினையே கைப்பற்றி இருந்ததனால் சரியையை உணர்த்த வந்த மூர்த்தியென்றும், ஸ்ரீ ஞானசம்பந்தர் ஸ்ரீ பூம்பாவையை எழுப்புங்கால்,

“மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமையமுது செய்வித்தல்
கண்ணினலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையாமெனி னுலகர்முன் வருகென உரைப்பார்”

என்று சூசிப்பித்தவாறு சிவபாத விருதயரை வேள்வி முதலிய செய்விக்கும்படி கட்டளை இட்டமையினாலும் கிரியாசாரிய மூர்த்தியென்றும், ஸ்ரீ சுந்தரர் “கீளார் கோவணமும்” என்றும், “நான்மறக்கினுஞ் சொல்லும் நா நமச்சிவாயவே” என்றும் குறிப்பித்தவாறு தன்னையே உபாசன மூர்த்தியாகப் பெற்ற பெருமிழலைக் குறும்ப நாயனர் அட்டாங்கயோக சித்திகளெல்லாம் பெற்றிருத்தல் புராண படிதமாகவே சுந்தரர் யோகத்தைக் காட்டவந்த மூர்த்தியென்றும், ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் சொல்

லாமே ஞானத்தை உணர்த்தவந்த மூர்த்தியென்றும் அறியலாம்.

495. சரியையாவது என்ன?

சிவாலயங்களிற் பயபக்தியுடனே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், நந்தவனம் வைத்தல், பூமாலை தொடுத்துச் சாத்தல், பூசனை புரிதல், சிவதரிசனஞ் செய்தல், சிவனடியார்களுக்கு வந்தனை வழிபாடு செய்தல் முதலியவாம்.

496. சரியையை அனுஷ்டித்தவர்கள் எப்பதத்தை அடைவார்கள்?

சாலோகபதம் அடைவார்கள்.

497. சாலோகபதமாவதென்ன?

சிவலோகத்திற் போயிருப்பது.

498. கிரியையாவதென்ன?

வேதாகம விதிப்படிப் பரமசிவனுக்குத் திருமஞ்சனஞ் செய்து நல்ல பத்திர புட்பங்களால் அருச்சித்துத் தூபதீப நிவேதனங்கள் செய்து அன்புடன் தொழுது துதித்தலாம்.

499. கிரியையினால் அடையும்பதம் எது?

சாமீபபதம்.

500. சாமீபபதமாவது என்ன?

பரமசிவனுக்குச் சமீபத்தில் இருப்பது.

501. யோகமாவது என்ன ?

பஞ்சேந்திரியங்கள் வழியிலே மனத்தைச் செல்ல வொட்டாமல் ஒருவழிப்படுத்தி நிஷ்டை கூடியிருப்பதாம்.

502. அந்த யோகம் எத்தனைவகை ?

இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம், சமாதி என எட்டாம்.

503. யோகத்தினால் அடையும் பதம் எது ?

சாரூப பதம்.

504. சாரூப பதமாவது என்ன ?

பரமசிவனைப்போல் சடைமுடி, காளகண்டம், சதுர்ப் புஜம், திரிநேத்திரம் பெற்றிருப்பதாம்.

505. ஞானமாவது என்ன ?

ஞானாசாரியருடைய அனுக்கிரகத்தினாலே அஞ்ஞானம் நீங்கிப் பதி பசு பாசத்தினுண்மையை அறிவதாம்.

506. ஞானத்திலடையும் பதம் எது?

சாயுச்சிய பதம்.

507. சாயுச்சிய பதமாவது என்ன ?

பரமசிவனோடு கலத்தலாம்.

508. சரியை முதலாகிய நான்கினும் மேலானது எது?

ஞானமே மேலானது.

509. ஞானம் மேலானதாயிருக்க அதை அனுஷ்டியாமல் மற்ற மூன்றையும் அனுஷ்டிப்பது என்ன?

அம்மூன்றையும் விதிப்படி அனுஷ்டித்தால் ஞானம் தானே விளங்கும்.

510. மேற்கூறிய ஆசாரிய சுவாமிகளின் விசேஷங்களைச் சூசிப்பிக்க?

அவர்களின் அயோனிஜத்வம் பரசிவாற்புத விளக்கம் முதலியவையாம்.

511. இவர்கள் அயோனிஜராமாறு எவ்வாரும்?

ஸ்ரீ ஞானசம்பந்தர் சுப்பிரமண்யரும், ஸ்ரீ வாகீசர் ஜிருவேசப் பெருமானும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஸ்ரீ ருத்திரரும், ஸ்ரீ மாணிக்க சுவாமிகள் நந்திகேசுவரரும் என்பது புராணேதிகாசங்களினுல் வியக்தம். அன்னேர் தேகங்கள் சுத்த தேகமாகவே மாயாதேக மெடுப்பது அன்னேர்க்கியலாதாம். ஆதலால் அவர்கள் தேகம் பிராகிருத தேகமல்ல என்று உணர்க. ஆதலால் அவர்களுக்கு அயோனிஜத்வம் நைஜமெனக் காண்பர் பெரியோர்,

512. இதனை வற்புறுத்திச் சில காரணங்களைச் சொல்லுக.

ஸ்ரீ ஞானசம்பந்தர் திருமணஞ்செய்த அம்மையாருடன் கூடி முயங்காமையும், ஸ்ரீ வாகீசமூர்த்திகள் "பொய்ம்மாயப் பெருங்கடல்" பொருந்தாமையும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலாச வாசிகளாகிய அநிந்திதை, கமலினி என்னும் அப்பிராகிருததேகிகளாகிய இருவரொழிந்த ஏனையோருடன்கூடி முயங்காமையும் கைலாசத்துக்குப் பிரத்தியக்ஷமாய்ச் சென்றருளிய அப்பிராகிருத தேகத்தை யுடைமையும், ஸ்ரீ மாணிக்கவாசக

சுவாமிகள் •மாயாதேகமல்லாத தன் சுத்த தேகத்தைப் பிரகிருதியிலே நழுவவிடாது ஸ்ரீ சிற்சபையிலே மறைந்தருளினமையும் அவர்கள் அயோனிஜரென்பதனைக் காட்டும். அன்றி ஆதியெவ்வாறோ அவ்வாறே அந்தம்; அந்தமெவ்வாறோ அவ்வாறே யாதியென்னும் தர்க்கநூற் றுணிபால் எமதாசாரிய மூர்த்திகள் நால்வரும் உலகினின்றும் மறைந்தருளிய மகாத்மியமே யன்னோர் ஏனையோர்பால் பிறவாத மூர்த்திகளென்பதனை நிலைநாட்டும்.

**513,** அவர்கள்பால் நிகழ்ந்த பரசிவாற்புதங்களென்னை?

"காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" என்றமையினாலே காட்டுபவன் கண்ணுதல் என்பதே அமையும். பிரம விஷ்ணு ருத்திரேந்திரர்களாலும், வேதாகம புராண இதிகாசங்களினாலும், தெரிவதற்கும் காட்டுவதற்கும் அரிதாகிய பெருங்கருணைத் தடங்கடலாகிய எமதம்மையப்பன் இவன்றானென்று சுட்டி யறியப்படாத பெருஞ்சுகப் பொருளைந் தனது அரிய சிறிய திருவிரலினால் சுட்டிக்காட்டுந் தன்மையினாலேயே ஸ்ரீ ஞானசம்பந்தர் பரம்பொருளென்பது சித்தம். அன்றி அவர் என்பைப் பெண்ணாக்கினமையினால் சிருட்டித் தொழிலும், திருவீழிமிழலையில் அடியார்களை ஆதரித்தலினாலும் பாண்டியனுக்குச் சுரநோய் தவிர்த்ததினாலும், இராஜகுமாரத்திக்குக் கண்டிருந்த முயலகநோயைத் தீர்த்ததினாலும், திதித்தொழிலும், எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேற்றினதாலும், புத்த நந்தியின் தலையில் இடிவிழச் செய்ததினாலும், சம்ஹாரத் தொழிலும், வேதாரண்யத்தில் கதவு அடைத்தலினால் மறைத்தற்றொழிலும், நல்லூர்ப் பெருமணத்தில் தமது திருமணக் கோலத்தைத் தரிசிப்பான் வேண்டி விஜயம் செய்திருந்த கணக்கில்லாத சிவனடியார்

களுக்கு மோக்ஷமாகிய பேற்றைக் கொடுத்தலினால் அனுக்கிரகித்தலுமாகிய பஞ்சகிருத்தியங்களும் ஒருங்கேகாண்க.

ஸ்ரீ வாகீசமூர்த்திகள் விஷந்தீண்டி இறந்துபோன மூத்த திருநாவுக்கரசரை எழுப்பினமையால் சிருஷ்டியும், திருவீழிமிழலையில் பொன்பெற்று அடியார்களுக்கு அளித்தமையால் திதியும், தன்மேலேவிய யானையைக்கொண்டு ஏவியோரைக் கொன்றமையால் சம்ஹாரமும், அப்பூதியடிகளுக்கு முன்பாகத் தானெதிர் நின்றகாலத்தும் அவர் இவரையறியாது இவருடன் கடியவார்த்தைகள் கூறியதால் திரோபவமும், அவ்வப்பூதியடிகளை ஸ்ரீநடராஜப்பெருமான் குஞ்சிதபாதங்களிலே சேர்ப்பித்த தன்மையினால் அனுக்கிரகமும் கண்டோம்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூன்றாண்டு சென்று முதலைவாயிற் பிள்ளை யழைத்தமையினால் சிருஷ்டியும், பஞ்ச காலத்திலே திருவாரூர்த் தெருக்களிலே நென்மலைகளைக் குவித்து அவரவர்கள் வேண்டியவற்றை எடுத்துக் கொள்ளும்படி பறையறைவித்ததினால் திதியும், கலிக்காம நாயனாருக்குத் தான் இன்னாரென்பதை மறைத்தமையால் திரோபவமும், பெருமிழலைக் குறும்ப நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், கலிக்காமநாயனார் முதலியோர்களைத் திருக்கைலாயம் சேர்த்தமையினால் அனுக்கிரகமும் பெற்றாம்.

514. அவ்வாறாயின் புராணங்களிலே அன்னோர்கட்கு அன்னையார் தந்தையார் கேட்கப்பட்டிருத்தல் என்னை?

தந்தை தாயார் முதலிய யாவும் புராணாலங்கிருதமாகவும் உலக வழக்கினுக்கும் ஏற்பக் கூறியவை.

ஔபசாரிகம் என்று கொள்ளுவதே இரகசியமாம். இந் நயங்களை ஆசாரியரன்பினராம் விசேஷவழி நின்ருரன்றி சாமானியவழி நின்றறியார்.

**515.** மேலே நந்திகேசுவரர் என்று கூறப்பட்டனரே, அவர் வரலாறு என்ன?

சிலாதர முனிவருடைய தவத்தினல் அவருக்குப் புத்திரராக அவதரித்துத் திருவையாற்றில் தவஞ்செய்து பரமசிவனுடைய கிருபையினல் மான் மழு காளகண்ட முதலியவை பெற்று, வெள்ளிப் பிரம்புஞ் சுரிகையுமருளிச் செய்ய அவைகளுடன் காவலும் பெற்றுக்கொண்டு கணங் களுக்கெல்லாம் தலைமையானவரா யிருக்கின்ருர்.

**516.** மேற்சொல்லிய ஆசாரிய சுவாமிகளால் விளங்கப் பட்ட மகத்துவங்கள் என்ன?

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பாச்சிலாச்சிராம மென்னும் தலத்துக்கு எழுந்தருளியபோது ஒரு ராஜ குமாரத்திக்குக் கண்டிருந்த குமரகண்ட வலியாகிய வியாதி யைத் தீர்த்தருளினர். திருமருகல் என்னும் ஸ்தலத்தில் பாம்பு கடித்து இறந்துபோன ஒரு செட்டிப்பிள்ளை பிழைக் கும்படித் தேவாரம் ஓத அவன் விஷம்நீங்கிப் பிழைத்தான். கொங்கு தேசத்தில் திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்னும் தலத்துக்கு எழுந்தருளி அர்த்தநாரீசுவரரைத் தரிசித்து அவ்விடத்தில் சிலநாள் வசித்திருக்கையில் அந்த தேசத்தில் வருஷந்தோறும் காணுகிற நளிர்சுரம் திருக் கூட்டத்தாரையும் தொடரவே சுவாமியைத் தொழுது பதிகமோதித் தீர்த்தருளினர். இதுவுமன்றி அத்தேசத்தில் இருப்பவர்களையும் அவ்வியாதி எப்போதுந் தொடாமல் இருக்கும்படியருள்செய்தார். அத்தலத்துக்கு இப்போது

திருச்செங்கோடென்று பெயர் வழங்குகின்றது. மதுரைக் கெழுந்தருளினபோது பாண்டிய ராஜனுக்குக் கண்டிருந்த சுரநோய் விபூதியினாலே தீரும்படித் திருநீற்றுப் பதிகம் கட்டளையிட்டருளினார். அந்த ராஜனுக்கிருந்த கூன் நிமிரவும் பதிகமருளிச்செய்தார். திருக்கொள்ளம்பூதூரென்னும் ஸ்தலத்துக்கு அருகிலிருக்கிற ஆற்றிலே படகு தானே செல்லும்படிப் பதிகமோதியருளினார். திருவோத்தூர் என்னும் தலத்தில் ஆண்பனை பெண்பனையாய்க் காய்க்கும்படி பதிகம் அருளிச்செய்தார். திருமயிலை என்னும் ஸ்தலத்தில் எலும்பு பெண்ணாகப் பதிக மருளிச்செய்தார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் சமணசமயத்தார் சுண்ணாம்புக் காளவாயிலிடச் சுவாமியைத் தியானித்துத் தேவாரமோதிப் பிழைத்திருந்தார். பாலில் விஷத்தைக் கலந்து கொடுத்தார்கள்; அதையுண்டு பரமசிவனுடைய திருவருளினால் பழுதுபடாதிருந்தார். இடரும்படி யானையைச் செலுத்தினார்கள்; அது சமணர்களையே கொன்றது. கற்றூணிற்கட்டிக் கடலில் போட்டார்கள்; பஞ்சாக்ஷரப் பதிகமோதி ஸ்ரீ சாம்பமூர்த்தி கிருபையினால் அத்தூணே தெப்பமாக மிதந்துவரத் திருப்பாதிரிப்புலியூருக்குச் சமீபத்திலிருக்கிற கெடிலநதி முகத்துவாரத்தில் கரையேறினார். இதனால் அந்தத் தலத்தில் சுவாமிக்குக் கரையேறவிட்டவர் என்று பெயர். பாம்புகடித்து இறந்துபோன திங்களூர் அப்பூதி நாயனாருடைய மூத்தபிள்ளை பிழைக்கும்படித் தேவாரம் அருளினார்.

ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் திருப்புகலூரில் பதிகம் ஓதிச் செங்கல் பொன்னாகப்பெற்றுக்கொண்டார். விருத்தாசலத்தில் சுவாமி தமக்குக்கொடுத்த பொருளை எல்லாம்

மணிமுத்தா நதியில் போட்டுத் திருவாரூர் கமலாலயத் தீர்த்தத்தில் எடுத்தருளினர். திருவையாறு என்னும் தலத்துக்குச் சேரமான் போனபோது காவேரிவெள்ளம் புரண்டு வரக்கண்டு பதிகம் பாடியருளிக் குறுக்கே அணைபோட்டது போல வெள்ளம் நிற்கச்செய்தார். புக்கொளியூர் அவிநாசியில் தாம் எழுந்தருளியதற்குச் சில வருஷங்களுக்கு முன் முதலையுண்ட பிராமணப் பிள்ளையைச் சென்ற வருஷங்களுக்குத் தக்க வளர்ச்சியுடன் முதலை உமிழும்படிப் பதிகமோதி யருளினர்.

மாணிக்கவாசக சுவாமிகள் அரிமர்த்தனபாண்டிய ராஜனிடத்தில் மந்திரித் தலைவராயிருந்து அந்த ராஜனுடைய உத்தரவினால் குதிரை கொள்ளப் போம்போது ஸ்ரீ கைலாயபதி திருப்பெருந்துறையில் குருமூர்த்தமாய் எழுந்தருளி ஞானோபதேசம் செய்தருளப்பெற்றுத் தம் பொருட்டு மதுரையில் சொக்கநாதசுவாமி நரியைக் குதிரையாக்கிப் பாண்டியராஜனிடத்துக்குக் கொண்டு போகவும், பின்பு வைகைநதி வெள்ளம் பெருகிவரச் செய்யவும் அந்த நதிக்கரையை அடைக்கும்படி மண் சுமக்கவுமான மகத்துவங் காண்பித்தருளினர். சிதம்பரத்தில் வாதுசெய்த புத்தர்களைவென்று அந்தச் சமயத்துக்கு உட்பட்டிருந்த ராஜனுடைய குமாரத்தியாகிய ஊமைப் பெண் பேசும்படி மகத்துவங் காண்பித்தருளினர்.

**517.** இந்நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவர்? அவர்கள் திருவாய்மலர்ந்தருளியவை யாவை?

இப்படிக்கொத்த மகத்துவம் விளங்கச்செய்த இந்நால்வருக்கும் சைவ சமயாசாரியர்களென்றும் திருநெறித்தலைவர்களென்றும் பெயர். இவர்கள் பாடியருளிய தேவாரங்

களுக்கும் திருவாசகத்துக்கும் திருநெறித் தமிழ்வேதம் என்றும் திராவிட வேதம் என்றும் திருமுறை என்றும் பெயர். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்தது திருவாசகம். மற்ற மூவர்முதலிகள் அருளிச் செய்தது தேவாரம். சிதம்பரத்தில் ஸ்ரீநடேசமூர்த்தி அருட்டிருமேனி கொண்டுவந்து மாணிக்கவாசக சுவாமிகள் முன்னோதிய திருவாசகத்தையும் நூதனமாகத் திருக்கோவையாருஞ் சொல்லும்படிக் கட்டளையிட்டுத் தமது அருமைத் திருக்கரத்தினால் எழுதினார்.

**518.** வேதங்கள் சமஸ்கிருதத்திலே இருக்கத் தமிழில் தேவாரம் கூறவேண்டியதற்கு ஆவசியகமென்ன?

வடமொழியைப் பார்க்கத் தென்மொழி தேன்மொழி என்றும் ஞானபாஷை என்றும், பிதுர்பாஷை என்றும் சிவபெருமானுக்கு வடமொழியைவிடத் தென்மொழியில் அதிக அன்பு என்றும் உலகத்தார்க்கு அறிவிக்கவே திராவிடவேதம் திருவாய்மலர்ந்தருளியதாம்.

**519.** தேவாரங்களை வேதம் என்பதற்கொரு காரணம் கூறுக?

வேதங்களினாலே பூசிக்கப்பட்டுக் கபாடபந்தனம் செய்யப்பட்டிருந்த திருமறைக்காட்டில் கதவைத் திறக்கவும் அடைக்கவும் வலிமையிருந்ததால் இத் தேவாரம் வேதமேயல்லது வேதாதிகம் எனவே கூறவேண்டும். ஏனெனில் ஒருவன் பூட்டின வீட்டைத் திறப்பவன் பூட்டினவனேயாகவேண்டும். இன்றேல் அவனிலும் அதிகனென்றே யூகிப்பர் அறிவுடையோர்.

**520. வேதங்கள் தேவாரமாதல்போல உபநிஷத்துக்கள் எவ்வாருயின?**

திருவாசகமாயின.

**521. வேதம் சூத்திரமும் சிவாகம மதனைத்தெளிவிக்கும் பாஷியமுமாமாறு தேவார திருவாசகமாகிய வேதங் களுக்குப் பாஷியம் எவையாம்?**

சகல சமயாதீத சுத்தாத்வைத சைவசித்தாந்த சாத்தி ரங்கள் ஆம்.

"வேதம் பசுவதன்பால் மெய்யா கமம்நால்வர்
ஓதுந் தமிழதனின் உள்ளுறுநெய் - போதமிகு
நெய்யி னுறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்"

எனக் கூறியபடி ஞானகாண்டப் பொருளைச் சுருக்கி இனிது விளக்கும் தமிழ்ச் சித்தாந்த சாஸ்திரங்களின் பெருமையை யறிக. பின்னும் வேதங்கள் நான்கையும் திருவாய்மலர்ந்தருளிய சிவபெருமானே ஆகமங்களை வெளிபடுத்தினவாறு தமிழ் வேதங்களைத் திருவாய்மலர்ந் தருளினவர்களும் சித்தாந்த சாஸ்திரங்களைக் கட்டளையிட் டருளினவர்களும் நால்வரே என்னும் நயம் அறிய வேண்டியது.

**522. அச் சாத்திரங்கள் எவை?**

"உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா உண்மைப் பிரகாசம் - வந்தவருட்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று"

என்னும் பதினுன்குமாம்.

**523.** திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார்⁰ உண்மை விளக்கம் இவற்றை அருளிச்செய்தவர் யாவர்?

முறையே உய்யவந்த தேவநாயனாரும், அவர் சீடர் திருவியலூர் ஆளுடைய தேவநாயனாருடைய சீடர் திருக் கடவூர் உய்யவந்த தேவநாயனாரும், திருவதிகை மனவாச கங்கடந்தாருமாம்.

**524.** சிவஞானபோதம் அருளிச்செய்தவர் யாவர்?

சுவேதவனப்பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமம் பெற்ற திருவெண்ணெய் நல்லூர் ஸ்ரீ மெய்கண்ட தேவ நாயனார்.

**525.** ஏன் அவருக்கு மெய்கண்டதேவர் என்னும் பெயர் உண்டாயது?

"பொய்கண்டார் காணாப்புனிதம்" என்றும், "அத்து வித மெய்கண்டநாதன்" என்றும் தாயுமானவரால் கூறியபடி அத்துவிதம் என்னும் சொல்லுக்கு இன்னது தான் பொருள் என்னும் உண்மையைக்கண்டு உலகில் சத்திநிபாதத்து உத்தமர்களாகிய சித்தாந்த சைவர்களுக்கு அதனை உபதேசித்தருளிய குருமணியாதலால் அவருக்கு அத்திருநாமம் சிறந்தது.

**526.** ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்கு உபதேசித்த சிவ ஞானபோதமெது?

ரௌரவாகமத்துள்ள பன்னிரண்டு சூத்திர ரூபமாகிய சிவஞானபோதம். அதின் மொழிபெயர்ப்பே மேற்கூறிய சிவஞானபோதமாம்.

527. ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர் வரலாறென்ன?

ஸ்ரீகண்ட பரமேசுவரன் அருளிச்செய்த சிவாகமத்தில் ஞானகாண்டமான பதி பசு பாசத்தினுண்மையை ஸ்ரீநந்தி தேவருக்குக் கடாக்ஷிக்க அதன்பயனகச் சிவஞானபோதம் மூலகிரந்தமென்னும் பன்னிரண்டையும் நந்திதேவர் சனற் குமாரருக்கும் அவர் சத்தியஞான தரிசினிக்கும் அவர் பரஞ்சோதிமா முனிவருக்கும் அவர் திருவெண்ணெய் நல்லூரே திருப்படை வீடாக சாமுசித்தராய் விளங்கின மூன்று வயதுக் குழந்தையாகிய ஸ்ரீ மெய்கண்டதேவருக்கும் மூலகிரந்தம் பன்னிரண்டின்படியே சூத்திரம் பன்னிரண்டாக வகுத்துச் சிவஞானபோதமென்னும் திருநாமத்தையும் அருளினர். அம்மெய்கண்டார் அவ்வூரிலுள்ள பொல்லாப்பிள்ளையாரிடம் யாவும் ஓதியுணர்ந்து ஐந்தாம் வயதிலே வேதாகமபாடசாலையொன்று ஏற்படுத்தித் தமக் குபதேசிக்கப்பட்ட வடமொழிச் சூத்திரங்கள் பன்னிரண்டையும் தென்மொழியாக்கி அதற்கு வார்த்திகம் என்னும் பொழிப்புரையும் செய்தருளினர். அவருக்கு மனவாசகங் கடந்தார், ஸ்ரீ அருணந்திசிவாசாரியார் முதலிய சீடர்கள் நாற்பத்தொன்பதின்மர்.

528. சிவஞான சித்தியார் இருபாவிருபது இவற்றினைச் செய்தருளினவர் யாவர்? அவர் வரலாறு என்னை?

திருத்துறையூர் ஸ்ரீ அருணந்திசிவாசாரியார்; இவர் சகலாகம பண்டிதரென்னும் காரணப்பெயர் பெறுவர். இவர் அவ்வூரின்கண்ணே வேதாகம பாடசாலை ஒன்று ஏற்படுத்தி அவற்றினைப் பிரபோதப்படுத்தி வருங்காலத் திலே பொல்லாப் பிள்ளையாரருள்மேவிய ஸ்ரீ மெய்கண்ட சிவாசாரியார் வைத்தருளிய பாடசாலையில் இவருடைய சீடர்களநேகர் போய்ச் சேருவது பொருராகித் தானும்

மெய்கண்ட சிவாசாரியரின் சந்நிதிக்கேகினார். அக்காலத்து மெய்கண்ட சிவாசாரியரால் ஆணவமலத்தின் குணங்களைப் பற்றிய பிரசங்கம் நடந்தது. ஸ்ரீ அருணந்திசிவம் ஆணவ மலத்தின் தன்மை யாதென்று வினவ மெய்கண்டார் அருணந்தி சிவத்தை 'நீர் கேட்ட தன்மையே அது' என்பதைச் சூசிப்பிக்குமாறு கருணைநோக்கம் புரிந்தார். உடனே அருணந்தி சிவாசாரியார் அடியற்ற பனைபோல் பாதங்களிலே சாஷ்டாங்கமாக வீழ்ந்து அவருக்கு அன்றுமுதல் சீடராயினர். பின் அவர் கட்டளையின்படி ஸ்ரீ சிவஞான போதத்தை முதனூலாகக்கொண்டு பரபக்ஷ சுபக்ஷமாயுள்ள சிவஞான சித்தியாரை வழிநூலாகச் செய்தருளினார். இதனையே சிவபோகசாரத்துள்,

" ஆருறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
நீருக முத்திநிலை நிற்போர்க்குப் - பேருகப்
பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோ தும் "

என்றனர். இவ்வருணந்தி சிவாசாரியரையே தாயுமானவர்,

" பாதிவிருத்தத்தால் பார்விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ "

என வணங்கினர்.

529. சிவப்பிரகாச முதலிய ஏனைய எட்டு சாஸ்திரங்களையும் செய்தருளினவர் யாவர்? அவர் வரலாறென்னை?

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார். இவர் அருணந்தி சிவாசாரியாரின் சீடராகிய திருப்பெண்ணாகடம் மறைஞான சம்பந்த சிவாசாரியருடைய சீடர். இவர்

தில்லைவாழந்தணர் குலத்திற் பிறந்து சிறு வயதிலேயே கற்பவை கற்று நல்லொழுக்கம்பூண்டு யாவராலும் நன்கு மதிக்கப்பட்டு வருநாளிலே ஒருநாள் தமது பிருதாவளிகளுடன் திருக்காளாஞ்சேரிக்குப் போகுமளவில் மறைஞானசம்பந்தர் இவரைக்கண்டு பட்டகட்டையிலே பகற்குருடன்போகின்றான் எனத்திருவாய்மலர்ந்தருள, உமாபதி சிவம் சத்திநிபாத முற்றவராகையால் சிவிகைவிட்டிறங்கிச் சம்பந்தர்பாற் சென்று சரணாகதியென்று பணியும் சமயத்தில் அவருட்கொண்டிருந்த அன்னரசம் கீழொழுக அதனைக் கையேந்தித் தாமும் புசித்தருளினர். அவர் இவரது பக்குவத்தைக் கண்டு உபதேசித்தருளினர். அவ்வுபதேசத்தைப் பெற்றுத் திரும்புமளவில் தம் குலத்தாரால் தம்மாசிரியரது உச்சிட்டத்தைப் புசித்த காரணத்தினால் நீக்கப்பட்டுக் கொற்றவன் குடியிலேயே வசித்திருந்து மேற்கூறிய சித்தாந்த சாத்திரங்களையன்றிப் பௌஷ்கராகமத்துக்கு வியாக்கியானமும், கோயிற்புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம், திருப்பதிக்கோவை என்னும்பிரபந்தங்களையும் செய்தருளினார். அவர் மாணாக்கர்கள் அருள் நமச்சிவாய தேசிகர் முதலாயினோர்.

**530.** இவ்வுமாபதி சிவாசாரியர்பால் நிகழ்ந்த அற்புதங்கள் யாவை?

ஸ்ரீ நடராஜப்பெருமான் ஸ்ரீபாதபத்மங்களில் உள்ளன்பு மிகுந்த பெற்றான்சாம்பான் என்னுமோர் பெரியவரிருந்தார். அவர் தமக்கு முத்திவேண்ட சபாநாயகர்,

" அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டு - படியின்மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை "

என்று ஓர் திருமுகங்கொடுத்தனுப்ப அவருக்கு உடனே முத்தி கொடுத்தருளினுர். இதனை யறிந்த அவர் அரசனிடம் சென்று தம் நாயகனைச் சிவாசாரியார் கொலை செய்து விட்டனரென்று முறையிட அரசன் ஆசாரியரிடத்தில் செல்ல அவரிவர்முன்பாக முள்ளிச்செடி ஒன்றினுக்கு முத்தி கொடுத்தருளினுர். அன்றி, சபாநாயகருக்குக் கொடியேற்றம்வர, கொடி யேருததைக்கண்டு தீக்ஷிதர்கள் வருந்த, அவர்கள் சொப்பனத்தில் உமாபதி சிவாசாரியர் வந்தால் கொடியேறுமென்று சபாநாயகர் அருளிச்செய்ய, உமாபதி சிவாசாரியர்பால் தீக்ஷிதர்களெல்லாரும் போய்த் தங்கள் குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ள, ஆசாரிய சுவாமிகள் தில்லைக்கெழுந்தருளி. கொடிக்கவி கட்டளையிட்டுக் கொடியேறச் செய்தனர். இவரைத் தாயுமானவர்,

"சிற்றம்பல மன்னும் சின்மயராம் தில்லைநகர்
கொற்றங்குடி முதலைக் கூறுநாள் எந்நாளோ"

என்று துதித்தார்.

531. மறைஞானசம்பந்தர் வரலாறு என்னை?

அவர் திருக்காளாஞ்சேரியில் நிஷ்டானுபூதியிலே நின்று விட்டனர்.

232. சைவசமயநெறி, சிவதருமோத்திரம் இவற்றினைச் செய்தருளிய மறைஞானசம்பந்தர் யாவர்?

பிற்காலத்து வந்த சைவப்பெரியாரில் ஒருவர்.

533. உமாபதி சிவாசாரியர் இருந்த காலம் எது?

அவர் செய்தருளிய சங்கற்ப நிராகரணம் சகாப்தம் 1235 என்பதனைக் கொண்டு அறிக.

**534.** பிராமணர் முதலிய மூன்று வருணத்தாருள் ஞாஞசாரியரில்லாது ஏனையருள் ஞாஞசாரியருண்டாஞல் என் செய்வதாம்?

அவ்வாசாரியனிடத்தே பிராமணர் முதலாயிஞேரும் ஞாஞேபதேசம் பெறலாம். ஏனெனில் ஞானமென்பது ஆன்மார்த்தம், ஜாதியென்பது தேகார்த்தம், ஞாஞேபதேசம் ஆன்மார்த்தமாகையால்.

**535.** இதற்கு ஏதேனும் பிரமாணமுண்டா?

துர்வாசர் முதலிய இருடிகள் விதுரனிடத்திலே ஞாஞேபதேசம் பெற்ருர்கள் என்று பாரத பாகவதங்களிற் கூறப்படுகையாலும், மெய்கண்ட சிவாசாரியர்பால் அருணந்தி சிவாசாரியர் ஞாஞேபதேசம் பெறக் காண்கையானும் அறிக.

## 12. முத்தியியல்

**536.** இனி ஆசாரியர் நம்மைப் பக்குவப்படுத்தும் வழி எப்படி?

அவர் பஞ்சேந்திரியமாகிற வேடர்களின் வயப்பட்டு நமக்கொரு தலைவன் உளனென்னும் உணர்விழந்து மாயா மயக்கமுற்று வருந்தும் நம்மை அவ்வேடர் கூட்டுறவினின்றும் பிரித்துத் தீக்ஷையிஞலே, மலங்களின் வலியைக் கெடுத்துத் தன்னைப்போல் எண்குணமுடையாராக்கித் தனது குஞ்சிதபாத பத்மங்களை யடையச்செய்வர்.

**537.** மலங்களின் வலிகெடச் செய்வதெனல் யாது?

தேகாதி பிரபஞ்சங்களை மெய்யென்று எண்ணுது அவற்றினுக்கு முன்னிலையாயமைந்த பிராரத்த கன்மங்

களைப் புசிப்பித்துத் தொலைவித்துத் தீக்ஷைக்குப் பின் ஏறின ஆகாமியத்தையும் முன்னுள்ள கன்மசேடமாகிய சஞ்சிதத்தையும் ஞானுக்கினியாலே தகித்து நான் என்ற முதலுங் கெடச் செய்தலாம். அப்போது ஆணவமலத்தின் வலியுங்குன்றும்; அதனுல் மலங்களின் சேட்டைகள் ஒன்றும் நம்மை யணுகாவெனலே அமைவுடைத்தாம்.

**538.** நான் என்ற முதல் கெடுதல் என்ருல் என்னை ?

இயக்க இயங்குஞ் சீவன் தன்னியல்பறிந்து தன்னை இயக்குந் திருவருட் செயலே யாவுமென்று தெளிந்து தான் பரதந்திரனென்று உணர்ந்திருத்தல்.

**539.** யாவும் திருவருட்செயலென்று அறிதல் எவ்வாரும்?

நமது இந்திரியச்செயல் யாவும் நஞ்செயல் என்று எவ்வாறு கொண்டாமோ அவ்வாறே நஞ்செயல் யாவும் இறைவனது கிரியாசத்தியின் வழியே நடைபெறுவதாய் அறிவதாம்.

**540.** அவ்வாறு பாசக்ஷயம் வரப்பெற்ற முத்தான்மாக்கள் திருவருளே தாரகமாய் நின்று காண்பதென்னை ?

ஒன்றையும் சுட்டி விசாரியாமல் கேவல சகல சுத்தா வத்தைகள் மூன்றிலும் அது இது என்று பாராமல் சிவம் ஒன்றினையே கண்டு நிற்பர். அன்றி ஞானமாகிய அருட் பெருஞ்சோதி ஒன்றினையே அன்றி வேருென்றினையுங் காணுர்.

**541.** இந்த ஜீவன் முத்தர்களுக்கு ஆகாமியமேருத காரண மென்னை ?

விரகில் தீயொக்க, இவர்கள் செயல் யாவும் சிவன் ஏவல் எனக்கருதி அவ்விறைபணி நிற்றலால், இவர்கள்

செய்வதாக, ஏனையோருக்குக் காணும் புண்ணிய பாவம் இவர்களுக்குப் புண்ணிய பாவங்களைச் செய்யும் ஆன்மாக்களைப் போய்ச்சேரும்.

**542.** சிவன் இவர்களிடத்து எவ்வாறு ஒன்றுபட்டு நிற்பன்?

இவ்வுலகில் சீவன்முத்தர் செயல் யாவும் தான் செய்ததாகக் கருதி இவர்களுக்குச் செய்யப்பட்ட செயல்களனைத்தையும் தனக்குச் செய்ததாகவே கொண்டு அவர்களுடன் கூடித் தயிரில் நெய்போல விளங்குவன்.

**543.** இந்நிலைமை எவ்வாறு உண்டானது?

யான் எனதென்னும் அகங்கார மமகாரங்கள் அற்ற போது உண்டாகத் தக்கது. அன்றி நான் செய்தேன் என்னும் ஆன்மாவுடன் அரன் அநாதி காலந்தொட்டு அத்வைதப்பட்டிருப்பினும் அவர்களுக்குப் பிரகாசியான். அவ்வாறு பிரகாசியாதபோது கன்மம் வேறொரு சரீரத்தை எடுக்கச்செய்து போகம் புசிக்க விருப்பத்தையும் உண்டாக்குமென அறிக.

**544.** இன்னோர் தன்மையை விளக்குக.

"மனத்தகத் தழுக்கறுத்த மௌனயோக ஞானிகள்
முலைத்தடத் திருப்பினும் பிறப்பறுத் திருப்பரே"

எனவும்,

"யான் என்னும் அழுக்கருதார் வனத்தகத் திருப்பினும்
மனத்தகத் தழுக்கறுர்"

எனவும் உணர்க. அஃது எதுபோல எனில், அக்கினித் தம்பனஞ் செய்வானை அனல் சுடாதவாறும் மந்திர சித்த புருஷர்களை விடம் வாதனை பண்ணுதவாறும் ஆம்.

545. அற்றேல் பிராரத்த கன்ம மாத்திரம் எவ்வாறு பொருந்தும்?

பெருங்காயம் இருந்த பாண்டமானது அக்காயவாசனை வீசப் பெறுவதுபோலும் குயவன் திகிரி கடஞ் செய்த பின்னும் தானே நின்று மெல்லமெல்லச் சுற்றிக்கொள்வது போலும் அறிக.

546. இவ்வான்மாக்கள் புசிக்கும் பிராரத்தத்துக்குப் பின்னர் ஏனோ ஒரு தேகமும் உண்டாகாது?

விருப்பு வெறுப்பற்றபோது ஆகாமியம் ஏருதாகை யால் மேலொரு தேகமும் உண்டாக இடமில்லை. அஃது அக்கினியைச் சேர்ந்த வித்துப் பின் முளையாதவாறு போலாம்.

547. இவர்கள் பிராரத்தமொழியவே யாது பெறுவர்?

ஸ்ரீ குஞ்சித பாதாம்போருக நிழலின்கண் சென்று என்றும் மாருத பேரானந்தமுண்டு களிக்கும் பேறு பெறுவர்.

548. ஸ்ரீ குஞ்சிதபாதம் அடைதலாவது யாது?

அதுவே சித்தாந்த முத்தியாம்.

549. முத்தியென்ரு லென்னை?

முத்தியென்ருல் நீக்கம் எனப் பொருள்படும். இதனையே மோக்ஷமென்றும், வீடு என்றும் கூறுவர்.

550. முத்தியினது இலக்கணம் யாது?

துக்கநிவர்த்தியாம். முத்தி என்பதற்கு நீக்கம் என்று கூறினுமாகையால், ஈண்டு அந்த நீக்கத்தைத் துக்க நிவர்த்தி என்றும். பாசம் துக்கரூபமாகையால், பாச நிவர்த்தி அல்லது துக்கநிவர்த்தி என்பது ஒன்றேயாம். பாச நிவர்த்தியிற் கிடைப்பது சுகப்பேறும். பாசத்தினுல் அறிவு மழுங்கியிருந்தபோது தோன்றாதிருந்த சிவம் சுகவடிவ மாகையால், அச்சுகோதயத்தைச் சிவப்பேறு அல்லது சுகப்பேறு என்றிடுவர் மேலோர். இந்தச் சுகந்தானே ஆனந்தம் எனப்படும். சிவனோடு அத்துவிதப்படுதலால் உண்டாகும் இவ்வானந்தத்தைச் சிவானந்தமென்பர் பெரியோர். ஆனந்தத்தை தருவது சிவனும், அவ்வானந் தத்தைப்பெறுவது சீவனுமாம், ஆநந்தானுபவகாலத்தில் அநுபவத்தைக்கொடுக்கும் சிவத்தையும், அதனை நுகருந் தன்னையும் ஆன்மா அறிந்து ஞானனந்த மயமாய் விளங்கும். இவ்வானந்தம் இடையில் நீங்கப்பெறுதது அதனுல் சதாநந்தமென்றும் இதனை அறிஞர் கூறுவர். சதானந்தவடிவமாகிய இம்முத்தியை "இரும்புண்டநீரிற் றிரும்பாதவீடு" என ஆன்றோர் துதித்தனர். இதுவே சிந்தாந்த முத்தியாம்.

551. இது சிந்தாந்த முத்தியாயின் இதற்கு வேறான பூர்வபட்ச முத்திகளுளவோ? அப்படி உளவாயின் அவற்றை விரித்துணர்த்தல் வேண்டும்.

சமயவாதிகள் தாந்தாம் கூறுவதையே முத்தி என்பர். அவைகளை முத்தியென்று யாம்கொள்ளோம். பூர்வபட்ச முடிவுகள் முத்தியென்னும் பெயர்பெறு. அவர்கள் முத்தி யென்று கூறுகையால், அவர்களை யநுவதித்து அவர் முடிவு களைப் பூர்வபட்ச முத்தியென்று கூறுவது குற்றமாகாது.

552. ஆயின், அந்தப் பொய் முடிவுகள் இவையென்றும், அவை குற்றப்படுமாறு இவ்வாறென்றும் எடுத்துக் காட்டித் தெளிவித்தல் வேண்டும்.

(1) உலகாயதன் உரைக்குமாறு மாதர்களுடன்கூடி அவர்கள் முலைத்தடத்துப் படிந்து அன்னோர் கடைக்கட் பார்வைக்கு இலக்காயிருத்தலே முத்தியெனில், மகளிரிடத்துண்டாகிய இன்பம் நிலையாமைபற்றிச் சிற்றின்பம் ஆதலால் இது பேரின்பமாகிய முத்தியன்றாம்.

(2) பூர்வ மீமாஞ்சகன் புகலுமாறு சொர்க்கமே முத்தியாகில் புண்ணியத்துக்குத் தக்கவாறு சொர்க்கம் அனுபவித்து மீட்டும் பூவுலகின்கண் வந்து புண்ணிய பாவங்களைப் பொருந்தல் ஆவசியகமாகையினாலே இதுவும் பேரின்பமன்றாம்.

(3) புத்தர்கள் கூறுமாறு உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் என்னுங் கந்தமைந்துங் கெடுகை முத்தியெனில், இன்பமும் அறிவும் இல்லாததுபற்றியும் அவர் நூலின்படி ஆன்மா இல்லாததுபற்றியும் (கந்தங்களறக் கெட்டுப்போகுமென்கையால்) பெறுவானில்லாதது பற்றியும் இதுவும் உண்மை முத்தியன்றாம்.

(4) அருகனறையுமாறு அனந்தஞானம், அனந்த தரிசனம், அனந்த வீரியம், அனந்தசுகம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுளின்மை, சகல சம்யப்பாவம் என்னும் அட்டகுணமுத்தியென்றால் இரண்டுபொருள் கலவாதேல் காலத்திரயத்தும் இன்பம் ஜனித்தலில்லையாதலாலும் பூர்வகன்மம் நிச்சயித்துப் புசிக்கைக்கு இவ்விடத்தில் ஆன்மா தனக்கென ஓர் அறிவிலனானபடியாலும் இதுவும் முத்தியன்றாம்.

(5) தார்க்கிகன் தருக்குமாறு ஞானம் முதலிய சேர்க்கைக்குணங்கள் ஒழிய அஞ்ஞானமே குணமாய்ப் பாஷாணம் போல்கை முத்தியெனில், இன்பமும் அறிவும் இல்லாதாகவே இதுவும் முத்தியன்றாம்.

(6) சாங்கியன் சாற்றுமாறு ஜடத்தினின்றும் சித்துப் பிரிந்து நிற்பதே முத்தியெனில், சிற்றறிவும் சிறு தொழிலும் உடைய ஆன்மா அவற்றில் பூரணமில்லாததாலும் ஜடத்தினின்றும் சித்தைப் பிரிப்பதற்கு வேறொரு கர்த்தாவும் வேண்டுகையாலும் அநாதியே சேர்ந்துநிற்பது பிரிவதியலாததாலும் இதுவும் முத்தியன்றாம்.

(7) நவீனமதத்தர் சிலர் நவிலுமாறு பிரமம் வேறாய் ஆன்மா வேறாய் நின்று அப்பிரமத்தின் திவ்யமங்கள விக்கிரக சொரூபத்தைச் சேவைசெய்துகொண்டிருப்பதே முத்தியெனில் இரண்டுபொருள் கலவாத காலத்து இன்பம் இலாமையும், யாதொன்றிற்கு ரூபம் உளதோ அது ஆதி எனப்பட்டு அழியுமாதலால் வேறாய்நின்று அனுபவிக்கும் இன்பம் நிலையாமையும், ஆகிய குறைவுகள் உளவாதலால் இதுவும் முத்தியன்றாம்.

(8) சமவாதி இசைக்குமாறு பிரமமும் ஆன்மாவும் ஒரு பொருளாகவே நிற்றல் முத்தியெனின், பெறுவாறும் பேறுமில்லாதாகவே இதுவும் முத்தியன்றாம்.

(9) மாயாவாதிகளிற் சிலர் மயங்குமாறு கடலில் திரைதோன்றி அதில் தானே ஒடுங்குமாறு பிரமத்தினிடத்தே ஜகத்துத் தோன்றி அதிற்றானே ஒடுங்குவதை விவேகித்து அறிவதே முத்தியெனின், திரையுங்கடலும் ஒருபொருளாதலால் முத்தி என்பது வெறும் வார்த்தையாயினதே ஒழிய, பெத்த தசைக்கும் முத்த தசைக்கும்

வித்தியாசமேயில்லை ஆதலாலும், திரை தன்னைக் கடலின் நீர் என்று நினைத்தாலும் நினையாவிட்டாலும் அந்நீரே யாதல்போல, பிரமத்தினின்றும் வேறாகாத சீவன் தான் பிரமம் என்று அறிந்தாலும் அறியாவிட்டாலும் யாவும் பிரமமேயாதல் அம்மத நூலின்படி சித்தமே ஆதலாலும் அந்நூலின்படி அறிகின்றவன் பிரமத்தினின்றும் வேறாய் ஒருவனும் இல்லாததுபற்றிப் பெறுவானும் (பெறுவான் இலாமையால்) தருவானும் (இவ்விரண்டும் இல்லாமை யால்) பேறுமில்லாத முடிவு எங்ஙனே முத்தியாகும்,

அன்று; ஆகாயத்தை மேகம் மறைக்குங்கால் காற்று வந்து மேகத்தை நீக்குமாறு இந்த ஜீவ ஆன்மாவிடத்தில் ஒரு விவேக ஞானந்தோன்றி அந்த மாயாவவத்தையை நீக்குவதே முத்தியெனின், அவ்விவேக ஞானம் முன்புள் ளதோ இடையில் வந்ததோ எனப் பரியாலோசிக்கில், இடையில்வருவது பொருந்தாது இல்லது வாராதாகையால், ஆதலால் விவேகஞானம் முன்பே யுள்ளதாக வேண்டும். உள்ளதாகில் இவனுக்கு மயக்கம்வர வழக்கில்லை. மயக்க மில்லாததே விவேகமாகையால். அன்றி ஆகாயம் மேகம் காற்று ஆகிய மூன்று பதார்த்தங்களுக்குந் திருட்டாந் தங்கள் அவர் நூலிலே பெறாததுபற்றி எடுத்த உபமான மும் அன்னோருக்கு இயையாதது. ஆகாயத்தைப்போன்ற ஆன்மாக்களை, மேகத்தைப்போலும் பாசம்வந்து மறைக்க, காற்றைப்போன்ற திருவருள் வந்து அப்பாசத்தையோட்டி இறைவனடிசேர்க்குமெழினலம் சைவசித்தாந்த முடிவுக்கே உபகாரமாயினது அறிக.

(10) பேதவாதி பேசுமாறு ஆணவமலங்கெடுவதே முத்தியெனின், ஆணவம் அனாதியாகி அழியாதாகலின், அதுவும் பொருந்தாது.

(11) *வேறொருசாரார் விளம்புமாறு இந்தச்சரீரம் அழியாது நித்தியமாயிருத்தலே முத்தியெனின், இச்சரீரம் அழியாது நித்தியமாயிருத்தல் அசம்பாவிதம். ஆதிதானுகில் அதற்கு அந்தமுண்டாம் என்பது தருக்கநூற் றுணிபு ஆதலால்.

(12) பாற்கரியன் பகருமாறு பரப்பிரமந் தானே ஜகமாயும் ஜீவனுயும் நின்று ஜீவன் கன்முத்தை அநுட்டித்து ஞானமுண்டானவாறே பிரமத்தோடுங்கூடி ஆன்மா அழிந்துபோவதே முத்தியெனின், சித்தினின்றும் ஜடந் தோன்ருதவாறு ஞானமயமாகிய பிரமத்தினின்றும் அஞ்ஞானமயமாகிய பிரபஞ்சந் தோன்ருது. அன்றி ஆன்மா கெட்டுப்போம் என்கையால் பெறுவானிலாது முத்தியாமாறு யாங்ஙனமென மறுத்திடுக.

(13) மற்றொருசாரார் மதிக்குமாறு பசுகரணங் கெட்டுச் சிவகரணம் பெறுவதே முத்தியெனின். பசுகரணம் மாயாகருவிகளாகிய ஜடமானபடியினுலே அவை காலத்திரயத்தும் சிவகரணமாகாதாதலால் இதுவும் முத்தியன்ரும்.

553. இப்படி யாவுங் கழிந்தால் தேறத்தக்க சித்தாந்த முத்தியை ஈண்டுக் கொஞ்சம் உணர்த்தல் வேண்டும்.

மேலே யாம் விஸ்தாரமாய்க் கூறியது போதும். ஆயினும் கொஞ்சம் உரைக்கின்ரேம். சிவதீக்ஷையினுல் மும்மலங்களின் வலியை நீக்கிச் சிருட்டிகாலத்து மீட்டுங் கீழே திரும்பாமல் அருளோடுங்கூடிச் சிவனைப்போல் சர்வஞ்ஞாதி எண்குணங்களுங்கூடி "எண்குணத்துளோமே" என்றபடி பரமானந்தக் கடலிற் படிவதேயாம்.

**554.** இதனை உபமானங்களால் விளக்குக.

சகலலோகைக நாயகனுகிய சிவபெருமான் அக்கினி யானது தன்னைச்சேர்ந்த அயப்பிண்டத்தை எப்படித் தன் சொரூபமாக்கினதோ அவ்வாறே இந்த ஆன்மாக்களின் ஆணவாதி அசுத்தங்களைப்போக்கி அறிவை விளக்கித் தன் சொரூபமாக்கித் தன்னைப்போல சர்வஞ்ஞதாதி குணங் களையும் இச்சா ஞானக் கிரியைகளையும் இவ்வான்மாவி னிடத்தில் பதித்துப் "பண்ணையும் அதனின் வேருயெண் ணப்படு மிசையும் போலும்" "செங்கதிரின் முன்மதியம் தேசடங்கி நின்றிடல் போலும்" "அப்பினிடை உப்பா யணைவதுபோலும்", "நீரார் நிழல்போலும்", "பட்டப் பகல் விளக்குப்போலும்", "உச்சிக்கதிர் படிகம்போலும்", "ஒன்றிரண்டும் உள்ளதுவாய் ஒன்றிரண்டும் இல்லது வாய்", "உடல் உயிர் போலும்", "கண் இரவி போலும்" "பாசமகலாமல் பதியிற் கலவாமல்" என்ற படிக் "காண்பானும் காட்டுவதும் காட்சியும் போன விடத்தில்" "ஆடலையே காட்டி எமது ஆடலை ஒழித்துத் தாடலைமேற் சூடி"ப், "பாலும் நீருங் கலத்தல்போற் கலந்து" ஆணவாத்துவிதம்போலச் (சிவம்) உயிரோடு அத்துவிதமாய் நிற்கும்பெற்றியுணர்க.

**555.** பண்ணிசை என்பதை விளக்குக.

பாடும்போது இன்னபண் என்றும் இன்ன இசை என்றும் தெரிந்தாலும் இரண்டையும் வேறு பிரித்துப் பார்ப்பது ஏலாததுபோலச் சிவனிடத்து ஆன்மா கூடின சம்பந்தம் இரண்டும் பிரிக்க முடியாது அத்துவிதப்பட் டிருத்தல் காண்க. இங்கே பண்ணிசைபாடுவானுக, முதல் மூன்றுள்ளவாறு பதி பசு பாசம் மூன்று முதலும் எவ் விடத்தும் எப்போதும் உள என அறிக.

**556.** செங்கதிர்முன் மதியம் என்றதனை விளக்குக.

நிலவின் செயலான பிரகாசம் ஆதித்தனுடைய பிரகாசத்தி லடங்கி நின்றவாறு ஆன்மா செயலற்று ஆண்டவனடிகளில் ஆனந்தத் தழுந்துதல் காண்க.

**557.** அப்பினிடை உப்பு என்பதனை விளக்குக.

ஒரு படி அப்பும் ஒரு படி உப்பும் கூட்டினகாலத்து இரண்டுபடி யாகாது ஒருபடியே ஆயினவாறு, ஆன்மாவும் அரனுங்கூடிய காலத்து இரண்டற்று நிற்றலுக்கு ஒப்பாம். அன்றி உப்பு தன் சொரூபமாறி நீரின் சொரூபமடைந்தவாறு ஆன்மா சிவமாயினவாறு காண்க. அப்பு தன்னுள் உப்பை அடக்கிக் கொண்டிருத்தல்போல சிவம் ஆன்மாவை முத்தியிலடக்கி நிற்பது அறிக, அன்றி இவ்வப்பு கலப்பினுல் ஒன்ருகியும் பொருண்மையால் இரண்டாகியும் நின்றவாறு சிவமும் சீவனும்கூடி ஒன்ருகியும் இரண்டாகியும் நின்றவாறும், அப்புதானே உப்புதானே என விளவினர்க்கு ஒன்று என்று சொல்லுவது இயலாமை பற்றி ஒன்ருகாமலும், இரண்டோ என்று ஸ்தூலமாய்க் கேட்டாருக்கு அப்புமயம் ஒன்ருயிருத்தல்பற்றி இரண்டாகாமலும் நின்றவாறும் அறிக.

**558.** நீரார் நிழல் யாது?

நீருக்கு நிழலுண்டென்பது தருக்கநூற்றுணிபு. நிழலின்றேல் வெளியில்லையாம். வெளியின்றேல் நீரிலுயிர்கள் வாழா. ஆதலால் நீரினின்றும் அந்நிழல் வேருய் நில்லாது நீரோடு விரவிப் புலப்படாதவாறு ஆன்மா முத்தியில் சிவத்துள் ஒடுங்குவதாம்.

559. பட்டப்பகல் விளக்கு யாது?

பகலில் விளக்கின் பிரகாசம் மழுங்கினவாறு ஆன்ம போதம் சிவனைக்கண்ட அளவில் அதனுள் அடங்கும் என்பதாம்.

560. உச்சிக் கதிர்ப்படிகம் எவ்வாறு?

படிகம் என்பது பளிங்கு. அது சம்பந்தப்பட்ட பொருளின் நிறத்தைக் காட்டுவதுபற்றிச் சார்ந்ததன் வண்ணமாகிய ஆன்மாவுக்கு ஒப்ப, சூரியன் உச்சி வேளையிற் படிகத்திற் பட்டக்கால் அதன் தண்ணெனுந் தன்மை நீங்கி அச்சூரியனுடைய கிரணாக்கினியைக் கக்கிச் சமீபத்திருந்த பஞ்சைத் தீய்த்தவாறு, ஆன்மா உச்சி போன்ற இருவினையொப்பாம் பரிபக்குவகால நடுநிலைமை வந்து சிவசம்பந்தமாகுங்கால் தற்போதம் நீங்கி, யாவுந் திருவருட் செயல்வழி நிற்றலால் கிரணமாகிய அருள் வயப் பட்டு, சிவமாகிய ஜோதி தன்பாலதிட்டிக்கப்பட்டு, தன்னுடன் கலந்திருந்த ஆணவ கன்ம மாயா திரிமலங்களையும் தீய்த்துச் சாம்பராக்கி. எவ்வாறு உலர்த்திவைத்த வஸ்திர மானது, தீப்பட்டுச் சாம்பலாகிய வஸ்திரரூபம் மாறாதிருப் பினும் தரித்தற் கேலாதோ அவ்வாறே வலிநீங்கிய திரி மலங்கள் ஆன்மாவைத் தொடராதொழியும். அன்றிப் பஞ்சைத் தீய்த்தது படிகத்து அத்துவிதப்பட்ட பானுவே யென்று கூறுமாறு திரிமலங்களையுங் கொளுத்தியது முத்தான்மாவினிடம் அத்துவிதப்பட்டு நின்ற அருளென் பதனை விளக்கி முத்திக் கலப்பின் தன்மை கூறியது அறிக.

561. ஒன்றிரண்டு முள்ளதுவாய் ஒன்றிரண்டு மில்லது வாய் என்பதனை விளக்குக.

ஜீவ ஆத்மாவும் பரமாத்மாவும் கூடியவழி பொருண் மையால் பேதமாதலால் இரண்டுள்ளதுவாய் எனவும்

கலப்பினுல் அபேதமாதலால் ஒன்றுள்ளதுவாய் எனவும் கூறினுர். அன்றி, பாடுவானெருவனைக் கேட்டிருக்குங்கால் ஓசை ஒன்ருதல்போலவும், பால்சேர்ந்த நீர் பாலாதல் போலவும் தீசேர்ந்த இரும்பு தீயாதல்போலவும் சிவம் ஒன்றே தோன்றுமாதலால் ஒன்றுள்ளதுவாய் எனவும், ஓசையினின்றும் வேறு பிரிக்கலாகாதென இராகத்தை நோக்குழிப் பண்ணிசையென இரண்டு தோன்றுவதால் ஆன்மாவும் அரனும் என இரண்டுள்ளதுவாய் எனவுங் கூறினதமையும். பண்தானே இசைதானே நாம் கேட்ப தென வினவினேருக்கு பண்மட்டுமல்ல இசைமட்டுமல்ல வெனக் கூறியவாறும் பஞ்சைக்கொளுத்தியது படிகமோ சூரியகிரணமோ என வினவினேருக்கு கேவலம் படிகமும் கேவலம் கிரணமும் தனித்தனி கொளுத்தாதவாறும் ஒன்று பட்டிருப்பது சிவமோ சீவனே என வினவினேருக்குச் சிவனுவது சீவனுவது தனித்து நில்லாததுபற்றி ஒன்றில் லதுவாய் எனவும் இரண்டுபொருள் ஒன்ருய்க் கலவாத பக்ஷத்தில் இன்பம் ஜனியாததுபற்றியும் இரண்டுந் தனித்து நில்லாததுபற்றியும் இரண்டில்லதுவாய் எனவும் கூறினதறிக.

562. உடல் உயிர் எவ்வாறு?

உடலும் உயிரும் ஒன்றுபட்டவாறு, தேகத்தில் ஒன்று பட்ட உயிர் அத்தேகத்தில் எவ்விடத்தினும் செய்த இதா கிதங்களைத் தனக்குச் செய்ததாகவே அக்ஷணமே அறியும் படியாக அத்துவிதப்பட்டிருத்தல்போல ஈசனும் ஆன்மா வுங் கூடினவாறு காண்க. அன்றி உடல் எழுத்துடன் உயிர் சேர்ந்தகாலத்து $\frac{1}{2}+1=1\frac{1}{2}$ மாத்திரையாகாது ஒரு மாத்திரையாயே நின்றிடல்போல், சிவனும் சீவனும் ஒன்றேயாய் நிற்பது காண்க. உயிரைப்போலச் சிவத்

தினது உயர்வும் உடலைப்போல ஆன்மாவினுடைய தாழ்வும் அறிக.

563. கண்ணிரவியை விளக்குக.

இரவியின் ஒளி, கண்ணிலான் ஒருவனுக்குக் காட்சி கொடுத்தல் இலாமையினால் கண்ணினுக்குக் கிஞ்சித் தொளி இருக்கின்றது. இரவியின் ஒளியின்றேல் கண்ணின் ஒளி விளங்காமையால் கதிரொளியும் சேர்ந்தே காட்சி பெறுமாறுபோலும் இரவியின் ஒளியைக் கண் காணுங்கால் தன்னையும் அவ்விரவியின் ஒளிவண்ணமாய்க் கண்டவாறு போலும் தம்முள் தனித்து இயக்கமிலாத உயிர்களும் சிவத்தோடு இயைந்து நின்று தம்மையும் பிறவுயிர்களையும் உணர்தல் அறிந்திடுக. அன்றியும் கண் ஒளியுங் கதிர் ஒளியுங்கூடி அத்துவிதப்பட்ட விதமுங் காண்க.

564. பாசம் அகலாமல் பதியில் கலவாமல் என்பதை விளக்குக.

தக்தபட நியாயமெனவுள்ள பாசமறவே சூனிய மாகா ததுபற்றிப் பாசமகலாமல் எனவும் "உயிர்தானுஞ் சிவானு பவம் ஒன்றினுக்கே" என்றபடிப் பதியின் செயலாகிய பஞ்சகிருத்தியஞ் செய்ய இயலாததுபற்றிப் பதியில் கலவாமல் எனவுங் கூறினது காண்க.

565. காண்பானுங் காட்டுவதும் காட்சியும்போய் என்றது என்னை?

காண்போனாகிய பசுவும் காட்டுவதாகிய பரையும் காட்சியாகிய பதியுமான ஞாதுரு ஞான ஞேயம் ஆகிய திரிபுடி தனித்தனி நில்லாது ஒன்றேயாகி பதிப்பிரகாசத்தி னுள்ளே ஏனைய இரண்டுமொடுங்கி ஒன்றாய் நிற்றலாகிய நிலையைக் கூறியதென்க.

566. 'ஆடலையே காட்டி எமது ஆடல் ஒழித்து ஆண்டான் பொற்றாடலைமேற் சூடி என்றது' என்னை?

அவன் பஞ்சகிருத்திய நிருத்தத்தைக்காட்டி ஆன்மா நான் என்பதொரு முதலுண்டென்பதை ஒழிந்ததுபற்றிச் செயலொன்றுமின்றி இருக்கச்செய்து தன்னுடைய திருவடியிலே கூட்டிக் கொள்ளுவான் என்பதறிக. அன்றியும் தாள் தலைமேற்சூடி என்ற வசனத்தினால் அத்துவிதமுத்தி இன்னதென்று உணரச்செய்தனர் தாயுமானவர். தாள் தலை என்னும் சொல்லிரண்டேயாயினும் புணர்ந்தவழி ஒன்றாதல்போல் முத்தியிலே நீ ஒன்றென்று கொள்வாய் எனவும் தாளுந் தலையும் என்னும் சொற்களால் பரனது உயர்வும் பசுவினது தாழ்வும் சூசிப்பித்ததும் அறிக.

567. பாலொடு நீர்போல் என்றது என்னை?

பாலும் நீரும் சம்பந்தப்பட்டவழி நீர் தோன்றாது நின்ற தன்மைபோல், உயிர் அரனுடன் கூடியவழி, சிவத்தினின்றும் தனித்துநில்லாது என உணர்க. அன்றியும் பால் என்னும் சொல் நீர் என்னும் சொல்லுடன் சேர்ந்தவழி, பானீர் என்று ஒருசொல்லாய் நின்றவாறு சிவனும் சீவனும் கூடிநிற்பது உணர்க. சிவத்தினது உயர்வைப் பாலாலும் உயிரினது தாழ்வை நீராலும் உவமித்தனர். பாலிற்சேர்ந்த நீரானது பாலினது வெண்மை நிறம் பெறுமாறுபோல முத்தியடைந்த ஆன்மாக்கள் சிவத்தினது அநுபவம் பெறுவர் என்க. பதியும் பசுவும் சித்தாகிய ஓர் இனமாதலை பால் நீர் என்னும் அப்பினத்தாற்காட்டியது உணர்க. ஞாதுரு ஞேயமாகிய பரனிடத்தழுந்தி ஒன்றுபட்டநிலை காட்டினவாறும் காண்க. சாதாரண வாசகத்திலும்

அவர்கள் பால் நீர்போல் கலந்திருக்கின்ருர்கள் என்பது சையோகத்தைக் காட்டினவாறு பதியும் பசுவும் கலந்த பான்மையைக் காண்க. பாலின் வெண்மை சிவத்துக்கு உவமையாம். நீர் எந்நிறத்துடன் சம்பந்தப்பட்டதோ அந்நிறம் அதுவாதல்போலப் பசுவானது பதியோடு சேர்ந்த காலையிற் பதியாகவும், பாசத்தோடு சேர்ந்தகாலையிற் பாசமாகவும் நிற்கும் சார்ந்ததன் வண்ணமாந் தன்மை பசுவினுக்கு உரித்தெனை அறிக. நீரினுல் யாதொரு பிரயோசனமும் அடையாத பால் தன் இயற்கைக் குணமாகிய வெண்மையை நீருக்குத் தந்தவாறு பசுவினுல் கிஞ்சித்தேனும் பிரயோசனமடையாத பதி தன் அனுபவத்தைப் பசுவுக்குக் கொடுத்தல் காண்க. அன்றியும் பால் நீர் என்பது மூலைத்தடத்துக் கரந்த பாலினுள்ளே அந்தர்க்கதமாயிருக்கும் நீரைப்போலச் சிவம் விசுவாந்தரியாமியாயிருக்கும் என்பதையும் போதிக்கின்றது. பாலினுள் அந்தர்க்கதமாய்நிற்கும் நீர் நெய் என உணர்க. "பாலிற்படு நெய்யன்" என்று அருளினர் பரமாசாரியர். பாலினுள் நெய் அத்துவிதப்பட்டதுபோலச் சிவன் பிரபஞ்சத்தினுள்ளே பிரகாசிப்பன் என்னும் அத்துவிதக் கலப்பையும் காண்க. இவ் அத்துவித முத்தியைக் கொடுப்போன் தான் என்பது போதரவே பால்வண்ணமாகிய பிறையையும் நீர் வடிவமாகிய கங்கையையும் சிவபெருமான் சிரமேல் தாங்கினர் என அறிக.

568. ஆணவத்தோடு அத்துவிதம் என்றது யாது?

ஆணவம் என்பது அறிவை மறைக்கும் பேரிருள். இவ் இருளோடு அநாதியே பிரிபடாது ஆன்மா நிற்கும் நிலை அத்துவிதமாம். இது ஆணவாத்துவிதம்.

569. இனி ஆணவம் நீங்கிய அத்துவிதம் யாது?

அத்துவிதம் என்னும் சொல் இரண்டு பொருள்களின் கலப்பைத் தெரிவிப்பதாம். ஆன்மாவுக்குப் பெத்ததசை, முத்திதசை என இரண்டு அனுபவங்கள் கேட்கப்படுகையால், பெத்தத்தில் ஆணவத்தோடு கலப்பும், முத்தியில் சிவத்தோடு கலப்புமாம். இவ் இயைபுநோக்கி "ஆணவத் தோடு அத்துவிதம்", "சிவத்தோடு அத்துவிதம்" என்றதேயன்றி வேறில்லை.

இவ்வாறன்றி அத்துவிதம் என்பதற்கு ஒன்று என்று சிலர் பொருள் உரைப்பர். அது கூடாது. எங்ஙனம் எனின், அத்துவிதம் என்னும் சொல்லின் முதலினின்ற அகரம் இல்லை அல்ல மறுதலை என்னும் மூன்றுபொருளைத் தரும். இவற்றுள் மறுதலைப்பொருணிற்க இல்லை என்னும் பொருளை மாயாவாதியரும், அல்ல என்னும் பொருளைச் சித்தாந்தசைவருங்கொண்டு விவகரிப்பர். அல்ல என்னும் பொருளே மேலே யாம் விளக்கிக்காட்டிய "இரண்டு பொருள்களின் கலப்பு" என்பதன் உண்மையைத் தெரிவிக்கும். இல்லை என்னும் பொருளைத் துணிந்து "இரண்டில்லை ஒன்று" என்று சாதிப்போமாயின், அநேகம் என்னும் சொல்லுக்கு "ஒன்றில்லை சூனியம்" என்று பொருள்கூறுவது ஆவசியகமாம். அங்ஙனமின்றி ஒன்றுக்கு மேலிட்டது என்று பொருளுண்டாமாறு "அநேகம் என்பதற்குப் பல என்று யாவரும் பொருள்கூறலால்" இதையொட்டி அத்துவிதம் என்பதற்கு இரண்டுக்கு மேலிட்டது என்று பொருள்விரித்தலே அமைவுடைத்தாம். யாம் கூறிய அல்ல என்னும் பொருளை அநுசரித்தமேலோர் "ஒன்ருகாமல் இரண்டாகாமல் ஒன்றும் இரண்டும்

இன்றாகாமல்'' என்று சிவசீவர்கள் தன்மையை விளக்கினர். இவ்வாறு கோடலின்றிப் பூர்வபட்ச மதத்தைத் தழுவின் "ஏகமே வாத்விதீயம் ப்ரஹ்மா'' என்பதன் பொருளும் சிதைந்துபோம். ஏகம் ஒன்றாகியும், அத்விதீயம் ஒன்றாகியும் என்று பொருள்விரிப்பது சங்கதமோ? ஏகம் ஒன்றாகியும், அத்விதீயம் உயிர்களோடு கலப்பாகியும் என்று பொருள்கோடல் சங்கதமாம்.

"ஒன்றென மறைக ளெல்லா முணர்த்திட வுயிர்க ளொன்றி
நின்றன னென்று பான்மை நிகழ்த்துவ தென்னை யென்னின்
அன்றவை பதிதா னென்றென் றறையுமக் கரங்க டோறும்
சென்றிடு மகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே''

என்று சைவத்திருவாளர் சாற்றியருளியதனானும் எமது பட்சம் வேரூன்றிப் பொலிவெய்தியது உணர்க.

570. மேலேகூறிய அத்துவித நிலைமை ஆன்மாவுக்கு முத்தியின் மாத்திரமா? பெத்தத்தினும் உண்டா?

இரண்டவசரங்களினும் உண்டு என அறிக.

571. பெத்தத்திலே ஆணவத்தோடு கலப்பு என்று கேட்கப்படுவதற்கு மாறாக ஈண்டுச் சிவத்தோடு கலப்பு என்றது யாங்ஙனம்?

பெத்தத்திலே ஆணவத்தோடு சிவமும் கலந்திருக்கும். இருந்தாலும் ஆணவம் பிரகாசிப்பதுபோலச் சிவம் பிரகாசியாது. முத்தியிலே சிவத்தோடு ஆணவமும் கலந்திருக்கும். இருந்தாலும் சிவம் பிரகாசிப்பதுபோல ஆணவம் பிரகாசியாது. பெத்தத்திலே ஆன்மாவுக்கு ஆணவானுபவமும், முத்தியிலே சிவானுபவமுமாம்.

572. "நீடுமொளியும் நிறையிருளும் ஓரிடத்திற் கூட அரிது" இங்ஙனமாகவும், ஆன்மாவின் இடத்தி சிவஜ்யோதியும் ஆணவ இருளும் ஏககாலத்தி கூடியிருக்கும் விதம் எப்படி?

ஒரு பச்சை மரத்தில் பசுமையோடு அக்கினியும் கலந் திருக்கின்றது. அக்கினியிருப்பதனால், பசுமை அழிந்து மரம் எரிந்துபோகக் கண்டிடலாம். பருவம்வந்தபோது எரியவும் காண்கிறோம். ஆன்மாவுக்குப் பரிபாகம் வந்த போது மலங்கெடுமாறு அறிக. மரத்தை அக்கினி முன் னர்ப் பருவப்படுத்திப் பின்னர் எரிக்கும். உயிரைச் சிவம் முன்னர்ப் பரிபாகப் படுத்திப் பின்னர் மலத்தை மோசிக்கும்.

573. பெத்தாத்மாவுக்கும், முத்தாத்மாவுக்கும் பேதம் காண்பது எப்படி?

பெத்தத்தில் ஆன்மாவினிடத்தில் சிவம் தோன்றாது விளங்கும். முத்தியில் சிவனிடத்தில் ஆன்மா தோன்றாது விளங்கும். இதனையே ஸ்ரீ தாயுமானசுவாமிகள்,

"எனக்குள்நீ என்றும் இயற்கையாய்ப் பின்னும்
உனக்குள் நான் என்ற உறுதிகொள்வது எந்நாளோ"

என்று அருளிச்செய்தனர்.

574. இவ் அத்துவித இன்ப முத்தியை ஆன்மா அடையும் விதம் எப்படி?

"இருக்கினு நிற்கும் போதும் இரவுகண் துயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும் பொருந்தியூண் துய்க்கும்
போதும்

முருக்கிதழ்க் கனிவா யாரை முயங்கிநெஞ் சழியும் போதும்
திருக்களா வுடைய நம்பா சிந்தைஉன் பால தாமே"

னும் சிவா நுபூதி கைகூடப் பெறுவார்க்கே இவ் இன்ப
த்தி உண்டாம் என்று அறிக.

"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்துநினை
என்றும் சிவன்தாள் இணை."

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க !